# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 மாசி 29 வியாழக்கிழமை (13-03-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:107


## கிளிநொச்சியில் இன்று பிரபா - ஹெல்கிஸன் சந்திப்பு

நோர்வே பிரதி வெளி விவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன் இன்று கிளிநொச்சியில் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனைச் சந்தித்துப் பேசவுள்ளார் என்று கொழும்பில் அறிவிக்கப்பட்டது.

அவர் வன்னியில் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்திப்பார். தலைவர் பிரபாகரனைச் சந்திப்பாரா என்பது இன்னும் உறுதிசெய்யப்படவில்லை. இப்படி நேற்று மாலை புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

நேற்று கொழும்புக்கு வந்த ஹெல்கிஸன், வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவைச் சந்தித்துப் பேசினார். நேற்று முன்னிரவு ஜனாதிபதியையும் பிரதமரையும் தனித்தனியே சந்தித்துப் பேசவிருந்தார்.

எதிர்வரும் 18 ஆம் திகதி ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் ஆரம்பமாகவுள்ள ஆறாவது சுற்றுப் பேச்சுகள் தொடர்பான ஏற்பாடுகளை மேற்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஹெலிகொப்டர் தாங்கி ரோந்துக் கப்பல் இலங்கைக்கு வழங்குகிறது அமெரிக்கா!

கொழும்பு,மார்ச்13

ஹெலிகொப்டர் தாங்கிச் செல்லும் - நவீனரக - கரையோர ரோந்து யுத்தக்கப்பல் ஒன்றை, இலங்கைக்கு சகாய விலையில் வழங்குவதற்கு அமெரிக்கா முன்வந்திருக்கின்றது.

கப்பலுக்கான கட்டணத்தை இலகு அடிப்படையில் - தவணைமுறையில - செலுத்தும் வசதியோடு இந்தக் கப்பலை வழங்க அமெரிக்கா இணங்கியிருக்கின்றது.

இலங்கைக்கு இந்தக் கப்பலை வழங்குவதற்கு அமெரிக்க காங்கிரஸ் இணங்கியிருப்பது பற்றிய தகவல் இலங்கை அரசுக்கு நேற்று தெரியப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இந்த வகையைச் சேர்ந்த புத்தம் புதிய கப்பலின் விலை 15 கோடி அமெரிக்க டொலர்கள் (சுமார் ஆயிரத்து ஐந்நூறு கோடி ரூபா) ஆகும்.

ஆனால், இந்த வகையைச் சேர்ந்த மீளமைக்கப்பட்ட ரோந்துக் கப்பலையே இலங்கைக் கடற்படை கொள்வனவு செய்யவிருப்பதாகக் கூறப்படுகின்றது. அதனால், அதன் விலை குறைவாக இருக்கும் என கருதப்படுகின்றது.

இந்தக் கப்பலை கொள்வனவு செய்வதற்கான பேச்சு மற்றும் முயற்சிகளை அமெரிக்கத் தரப்புடன் அமைச்சர் மிலிந்த மொறகொட மேற்கொண்டுவந்தார் என ஒரு தகவல் தெரிவித்தது.

(12ஆம் பக்கம் பார்க்க)

# கப்பல் தகர்ப்பிற்கு கடும் எதிர்ப்புத் தெரிவிப்பதற்காக ஜப்பான் பேச்சைப் பகிஷ்கரிப்பது உட்பட பல மாற்றுவழிகள் குறித்து புலிகள் ஆராய்வு

## பாலா அறிவிப்பு

கொழும்பு,மார்ச்13

விடுதலைப் புலிகளின் வர்த்தகக் கப்பல் ஒன்று சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து இலங்கைக் கடற்படையினரால் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கடும் சீற்றமுற்றிருக்கும் விடுதலைப் புலிகள், அது சம்பந்தமான தமது எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்குப் பல வழிகளை ஆராய்ந்து வருகின்றனர்.

ஜப்பானில் நடைபெறவிருக்கும் அடுத்த சுற்று அமைதிப் பேச்சுக்குச் செல்லாமல் விடுவது அந்த மாற்று வழிகளில் ஒன்று.

- இவ்வாறு தகவல் வெளியிட்டார் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்.

சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்றுக்குப் பேட்டியளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அந்தப் பேட்டியில் அவர் குறிப்பிட்ட முக்கிய அம்சங்கள் வருமாறு:-

எம் வர்த்தகக் கப்பல் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவம் மோசமானது; சகித்துக்கொள்ள முடியாதது. இதற்கு எமது கடும் எதிர்ப்பைத் தெரிவிக்க நாம் பல வழிகளை ஆராய்கின்றோம். பேச்சுக்குப் போகாமல் விடுவது அதில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா ஹர்த்தாலுக்கு பொலீஸார் தடை விதிப்பு

வவுனியா,மார்ச்13

புலிகளின் கப்பல் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவத்துக்கு கண்டனம் தெரிவித்து இன்று வவுனியா மாவட்டத்தில் மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஹர்த்தாலை நிறுத்துக. உத்தரவை மீறி ஹர்த்தால் அனுஷ்டிப்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இப்படி வவுனியா பொலீஸார் ஒலி பெருக்கி மூலம் அறிவித்துள்ளனர்.

நேற்று மாலை வவுனியா நகர்ப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களுக்குச் சென்ற பொலீஸார், இராணுவத்தினர் - இன்று கட்டாயமாகக் கடைகள் திறக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

(முன்னர் வந்த செய்தி 2ஆம் பக்கத்தில்)

(ஐ-164)

## மன்னிப்புச் சபையின் முன்னாள் தலைவர் வன்னியில் நீதித்துறையினருடன் சந்திப்பு

கிளிநொச்சி,மார்ச்13

தமிழீழ நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரராவை சர்வதேச மன்னிப்புச் சபையின் முன்னாள் தலைவர் இயன் மார்ட்டின் நேற்று சந்தித்துப் பேசினார். கிளிநொச்சி மாவட்ட நீதியாளர் அலுவலகத்தில் பகல் 11.45 மணிக்கு இந்த சந்திப்பு இடம் பெற்றது.

இந்தச் சந்திப்பின்போது மனித உரிமைகள் தொடர்பாகவும் நீதி, நிர்வாகம் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டதாக வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்பின்னர் இயன் மார்ட்டின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம், அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் ஆகியோரையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இச்சந்திப்பில் புலிகளினால் மேற்கொள்ளப்படும் நீதி, நிர்வாகம் தொடர்பாக விரிவாக இயன் மார்ட்டினுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. தமிழீழ நீதிமன்றத்தில் இதுவரை 24,000 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு உள்ளதாகவும் இவற்றுள் 19,000 வழக்குகள் தீர்வு காணப்பட்டுள்ளதாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர். நீதிமன்றில் 19,000 வழக்குகள் தீர்க்கப்பட்டதன் ஆவணங்களை இயன் மார்ட்டின் பார்வையிட்டார்.

அதன்பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளின் 24 நீதியாளர்களுக்கு, இயன் மார்ட்டின் மனித உரிமைகள் தொடர்பாக விளக்கம் அளித்தார்.

வன்னியில் தங்கியுள்ள மார்ட்டின் இன்று தமிழீழக் காவல் துறையின் மேலாளர் பா.நடேசனைச் சந்திப்பார். காவல்துறையினருக்கு மனித உரிமைகள் தொடர்பான விளக்கமும் அளிக்கவுள்ளார்.

(ஐ-4-164)

## கப்பல் அழிப்புச் சம்பவத்தின் பின்னணிகள் குறித்து கண்காணிப்புக்குழுத் தலைவருக்கு பாலா விளக்கம்

வவுனியா,மார்ச்13

புலிகளின் கப்பல் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கண்காணிப்புக்குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரெலிங்ஸன் நேற்று மாலை புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தை கிளிநொச்சியில் சுமார் இருமணிநேரம் சந்தித்துப் பேசினார்.

பாலாவுடன் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், அடேல் பாலசிங்கம் ஆகியோரும் உடனிருந்தனர். கண்காணிப்புக் குழுத் தலைவருடன் அவரது சட்ட ஆலோசகரும் சந்திப்பில் பிரசன்னமாகியிருந்தார்.

சந்திப்பின் பின்னர் பாலா தெரிவித்திருப்பதாவது:-

கண்காணிப்புக்குழுத் தலைவர் நேற்றுமுன்தினம் (செவ்வாய்க்கிழமை) பாதுகாப்பு அமைச்சர், கடற்படைத் தளபதி ஆகியோரைச் சந்தித்து கப்பல் அழிப்புச் சம்பவம் தொடர்பாக அவர்களது கருத்துக்களைக் கேட்டிருக்கிறார். தற்போது எமது விமர்சனத்தையும் பெற்றுள்ளார். இரு தரப்பு முறைப்பாடுகளையும் விசாரித்து அவர் தீர்க்கமான அறிக்கை ஒன்றை வெளியிடுவார்.

யுத்தநிறுத்த மீறல் சம்பவம் இடம்பெற்றால் அந்த இடத்திற்கு கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## 'யுனிசெவ்' அதிகாரி இளம்பரிதியுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்13

யுனிசெவ் அமைப்பின் யாழ். மாவட்ட வதிவிடப் பிரதிநிதிக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளருக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்றிரவு நடைபெற்றது.

விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பணிமனையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின் போது சிறுவர்கள் விடயம் பற்றி ஆராயப்பட்டது.

இயக்கத்தில் இணைய வந்த 18 வயதுக்கு குறைந்தவர்கள், அவர்களின் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டமை பற்றிய விவரங்கள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் அரசியல் விவகாரக் குழு ஏப்ரலில் வெளிநாட்டு கல்விச் சுற்றுலா

கொழும்பு,மார்ச்13

விடுதலைப் புலிகள், புதிய அரசியல் விவகாரக்குழு ஒன்றை அமைத்துள்ளனர். புலிகள் அமைப்பின் உறுப்பினர்களும் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் ஈழத்தமிழர்களும் உட்பட 13பேர் இந்தக்குழுவில் அங்கம் வகிக்கிறார்கள். ஆறு பேர் பெண்கள், ஐவர் ஆஸ்திரேலியா, கனடா, நோர்வே, சுவிஸ், பிரிட்டன் ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஈழத்தமிழர்கள்.

பல்வேறு நாடுகளிலும் பின்பற்றப்படும் சமஷ்டி ஆட்சிமுறை, ஆட்சி அதிகார நடைமுறை என்பவை தொடர்பான சட்டநிலைகள் பற்றி அறிந்து கொள்வதே இந்தக் குழுவின் நடவடிக்கை என்று கூறப்பட்டிருக்கின்றது.

இந்தக் குழுவினரை இவ்வாரம் கிளிநொச்சியில் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் சந்தித்து ஆலோசனைகள் கூறியுள்ளார். தற்போதைய சமாதான நடவடிக்கைகளின் ஒரு பகுதியே இக்குழுவினரின் பணி என்பதை அவர் வலியுறுத்தியுள்ளார்.

தொடர்ந்து அரசியல் விவகாரக் குழுவுக்கு புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் இரண்டு மணிநேர விரிவுரை நிகழ்த்தினார். அரசியல்

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் ஆயுதக் கப்பல்கள் பற்றி அடுத்த சுற்றுப் பேச்சுகளில் ஆராய்க!

### பிரதமருக்கு ஜனாதிபதி ஆலோசனை

கொழும்பு,மார்ச்13

ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் இடம்பெறவுள்ள அடுத்த சுற்று சமாதானப் பேச்சுக்களின்போது விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பல்கள் குறித்து முக்கியமாக ஆராயுமாறு ஜனாதிபதி பிரதமருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பு தொடர்பாக ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## வடக்கு - கிழக்கிற்கு இழைத்த அநீதிக்குப் பரிகாரம்

# தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம்: பிரதமர் திறைசேரிக்குப் பணிப்புரை!

காரைதீவு,மார்ச்13

**வடக்கு - கிழக்கு தொண்டர் ஆசிரியர்கள் ஆயிரம் பேரை ஆசிரியர் சேவையில் சேர்த்து அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதற்கான பணிப்புரையைத் திறைசேரிக்கு விடுத்துள்ளார் என்று அறியவருகிறது.**

நிரந்தர நியமனம் கோரி மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட தொண்டர் ஆசிரியர்கள் திருகோணமலையில் மாகாணக் கல்வி அலுவலகத்தின்முன் கடந்த சில நாள்களாக உண்ணாவிரதம் இருந்து வருவது தெரிந்ததே. இவர்களுடன் மன்னார் மாவட்டத் தொண்டர் ஆசிரியர்களும் உண்ணாவிரதத்தில் இணைந்து கொண்டார்கள்.

உண்ணாவிரதப் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் இலங்கைத தமிழர் ஆசிரியர் சங்கம் தனது ஏனைய கோரிக்கைகளோடு, தொண்டா ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கவேண்டும் என்ற கோரிக்கையை முதன்மைப்படுத்தி, நேற்றுமுன்தினம் வடக்கிலும், கிழக்கிலும் ஒருநாள் சுகவீன லீவுப் போராட்டம் நடத்தி, அனைத்துப் பாடசாலைகளையும் ஸ்தம்பிக்கச் செய்திருந்தமை தெரிந்ததே.

கோரிக்கைகள் நிறைவேற்றப் படாவிட்டால் போராட்டம் தொடரும் என்ற அறிவிப்பும் சங்கத்தினால் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டது.

போராட்டம் நடந்து கொண்டிருந்த போதே தமக்குக் கொழும்பு மேலிடத திலிருந்து, தொண்டர் ஆசிரியர்கள் நியமனத்துக்கான பணிப்புரையைப் பிரதமர் திறைசேரிக்கு விடுத்துள்ளார் என்ற தகவல், தொலைபேசி மூலம் தெரிவிக்கப்பட்டது என்று சங்கப பொதுச் செயலாளர் மகாசிவம் 'உதயன்' செய்தியாளரிடம் தெரிவிததார்.

இது தொண்டர் ஆசிரியர்களின் உண்ணாவிரதப் போராட்டத்துக்கும் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் போராட்டத்துக்கும் கிடைத்த வெற்றி என்று மகிழ்ச்சி தெரிவிக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கில் ஆயிரம் தொண்டர் ஆசிரியர்கள் உட்பட 3ஆயிரம் ஆசிரியர்களை நியமிப்பதற்கு 2000ஆம் ஆண்டிலேயே உலக வங்கி அனுமதி வழங்கிவிட்டது. என்றாலும் விடயம் இழுத்தடிக்கப்பட்டது.

கடந்த மாத இறுதிக்குள் நியமனங்கள் வழங்கப்படும் என்று கல்விப் பகுதி இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்துக்கு உறுதி அளித்திருந்தது.

எனினும், கடந்த மாத இறுதியில் திறைசேரி ஆயிரம் பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் ஆயிரம் ஜி.சீ.ஈ. உயர்தர ஆசிரியர்கள் ஆகியோரின் நியமனத்துக்கே சம்பளம் ஒதுக்கியது. தொண்டர் ஆசிரியர்களை விட்டுவிட்டது.

தொண்டர் ஆசிரியர்கள் தொடர்பாகத் தேசியக் கொள்கை ஒன்றைக கல்வி அமைச்சு உருவாக்கிய பின்னரே அவர்களுக்கு நியமனம் வழங்குவதற்குச் சம்பளம் ஒதுக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதனால், அதிர்ச்சியும் ஏமாற்றமும் அடைந்த தொண்டர் ஆசிரியர்கள், உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்தார்கள்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும் தொண்டர் ஆசிரியர்கள் நியமனக் கோரிக்கையை முதன்மைப படுத்திப் போராட்டத்தை ஆரம்பித்தது.

இரண்டு போராட்டங்களுக்கும் கைமேல் பலன் கிடைத்துவிட்டது என்று மகிழ்ச்சி தெரிவிக்கப்படுகிறது.

எனினும், பிரதமரின் பணிப்புரை பற்றியோ தொண்டர் ஆசிரியர்களின் நியமனத்துக்காகப் பணம் ஒதுக்கப் படுவது குறித்தோ மாகாணக் கல்வி அமைச்சுக்கு இன்னும் அறிவிக்கப் படவில்லை. எந்த நேரத்திலும் அறிவிப்புக் கிடைக்கலாம் என்று எதிர் பார்க்கப்படுகிறது. (எ)

# புலிகளின் கப்பல் தாக்கப்பட்டதைக் கண்டித்து வவுனியாவில் இன்று பூரண ஹர்த்தால்

## களுத்துறை கைதிகளுக்கு ஆதரவாக மன்னாரில் உண்ணாவிரதம்

வவுனியா,மார்ச்13

வவுனியா மாவட்டத்தில் இன்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படும். கடந்த திங்களன்று விடுதலைப் புலிகளின் கப்பல் தாக்கி அழிக்கப்பட்டதைக் கண்டித்து வவுனியா வெகுஜன ஒன்றியம் இந்த ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

கப்பலில் இருந்த 11 போராளிகளை நினைவுகூருமாறும் சோகத்தை வெளிப்படுத்துமாறும் கடைகள் அனைத்தையும் பூட்டுமாறும் வாகனப் போக்குவரத்துக்களை நிறுத்துமாறும் ஒன்றியம் கோரிக்கை விடுத்திருக்கிறது.

நேற்றுமுன்தினம் மாலை முதல் வவுனியா நகர் மற்றும் பல கிராமப் பகுதிகளிலும் கறுப்புக்கொடிகள் கட்டப்பட்டுள்ளன.

இது இவ்வாறிருக்க, களுத்துறைச் சிறைக் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆதரித்து மன்னார் மாவட்டத்தில் இன்று ஒருநாள் அடையாள உண்ணாவிரதத்தை வன்னி தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், இராஜா குகனேஸ்வரன், சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் மேற்கொள்வர்.

அத்துடன், மன்னார் கடற்பரப்பினுள் அத்துமீறி மீன்பிடிக்கும் இந்திய மீனவரின் செயலுக்கு கண்டனமும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# புலிகள் வெளியேறிச் சென்றபின் எவரையும் பழிவாங்கமாட்டோம்!

## ஈ.பி.டி.பி. ஜெகன் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச்13

குடாநாட்டை விட்டு விடுதலைப் புலிகள் வெளியேறிச் சென்ற பின்னர் எவரையும் நாங்கள் பழிவாங்கப் போவதில்லை. அத்தகைய எண்ணம் எமக்கு இல்லை.

ஈபிடிபியின் யாழ்மாவட்ட அமைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.வி.குகேந்திரன் (ஜெகன்) மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்தும் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள ஏனைய இடங்களில் இருந்தும் புலிகள் தமது முக்கிய உறுப்பினர்கள் உட்பட பலரை மீள அழைப்பதில் தீவிரமாக இருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. புலிகளின் இச்செயற்பாடு கண்டு பொதுமக்கள் எவரும் அச்சமடைய வேண்டிய அவசியம் இல்லை. அதற்கான தேவையும் இல்லை.

ஒன்றன்பின் ஒன்றாக இடம்பெற்ற புலிகளின் அத்துமீறல்கள் அம்பலமாகியதன் காரணமாக, அசம்பாவிதங்கள் காரணமாக புலிகள் விரும்பியோ, விரும்பாமலோ தீர்க்கமானதொரு நிலைப்பாட்டை எடுக்கவேண்டிய நிலைமைக்கு உள்ளாகி வருகின்றனர். இதனைத் தவிர்ப்பதற்காக வெவ்வேறு பிரச்சினைகளைக் கிளப்பி பதற்ற சூழலை உருவாக்க முயல்கின்றனர். ஆனால் பொது மக்கள் பதற்றமடைய வேண்டிய அவசியம் எதுவும் இல்லை.

தீவகத்தில் இருந்தும் யாழ்ப்பாணகுடாநாட்டில் இருந்தும் எம்மையும், எம்மைச் சார்ந்தவர்களையும் பலவந்தமாக வெளியேற்ற முயற்சி மேற்கொண்ட சிலர் பழிவாங்கும் செயற்பாடு எதுவும் இடம்பெறலாம் என்று அஞ்சக்கூடும் என்பதையும் [illegible]வோம். ஆனால், எவரையும் எந்தக் காரணத்திற்காகவும் பழிவாங்கும் எண்ணம் எமக்கு இல்லை. அத்துடன் எமது எண்ணங்களோடும் செயற்பாடுகளோடும் ஒத்துப்போகாதவர்கள்கூட சொந்த மண்ணில் சுகமாக வாழும் ஜனநாயக சூழல் உருவாக்கப்பட வேண்டுமென்பதே எமது குறிக்கோள் ஆகும். எனவே, புலிகள் பின் வாங்குவது கண்டு எவரும் பதற்றமடையத் தேவையில்லை. அச்சமடைய வேண்டிய அவசியமும் இல்லை என்றும் கே.வி.குகேந்திரன் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# கடலில் மீன்வலையில் சிக்கிய புலிகளின் சீருடைத்துணி மூடை!

புதுக்கோட்டை,மார்ச்13

புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப் பட்டணம் கடல் பகுதியில் மீன் பிடிக்கச் சென்ற ஒரு மீனவரின் வலையில் விடுதலைப் புலிகளின் ஆடைதைக்கப் பயன்படுத்தப்படும் துணி மூடை சிக்கியது.

ஜான் என்ற அந்த மீனவர் தனது படகில் கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்தார். அப்போது அவரது வலையில் ஏதோ ஒன்று சிக்கியது. பெரிய மீனாக இருக்கலாமென மகிழ்ச்சியடைந்த ஜான் வலையை இழுத்தார்.

அப்போது பெரிய மூடை வலையில் இருந்தது. குழப்பத்துடன் அதைப் பிரித்துப் பார்த்தார். அதில் பச்சை, மஞ்சள் இலைகளுடன் கூடிய துணி இருந்தது.

அதைக் கோட்டைப்பட்டணம் காவல நிலையத்தில் ஒப்படைத்தார். பொலீஸார் சோதனையிட்டபோது 160 மீற்றர் நீளத்துணி இருப்பது தெரிந்தது.

இது விடுதலைப் புலிகள் அணியும சீருடை தைக்கப் பயன்படுத்தப்படும் துணி என பொலீஸார் கூறுகின்றனர். புலிகளுக்காகக் கொண்டு செல்லப்பட்ட துணிப் பார்சல்களில் ஒன்று தவறுதலாக கடலில் விழுந்திருக்கலாம் என்று பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

இது தொடர்பாக வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை நடந்து வருகிறது. (ஐ)

# உதவித் தபால் அதிபர்களாக 34 பேருக்கு பதவி உயர்வு

கடந்த வருடம் நடைபெற்ற போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த தபாலக சிற்றூழியர், உபதபாலதிபர்கள் 34 பேர் எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் உதவித் தபால் அதிபர்களாகப் பதவி உயாவு பெறவுள்ளனர்.

பதவி பெறவுள்ளோர் பெயர் விவரம் வருமாறு:-

ஆர்.றோசினி (கொக்குவில்), ரி.சத்தியபாமா (யாழ்ப்பாணம்), வி.நளாயினி (சாவகச்சேரி), என்.சத்தியவாணி (பண்டத்தரிப்பு), எஸ்.சந்திரவேல் (அச்சுவேலி), ஐ.சகுந்தலாதேவி (கைதடி).

எஸ்.தயாபரன் (பருத்தித்துறை), என்.சாந்தகுமார் (பருத்தித்துறை), பி.இன்பராஜா (சுழிபுரம்), கே.சிவநேசன் (சுன்னாகம்), எ.ஜேசுதாஸன் (யாழ்ப்பாணம்), எ.ஈஸ்வரதாஸ் (வல்வெட்டித்துறை).

கே.தயாநிதி (அனலைதீவு), ஜே.சுமித்திராவதி (கரம்பொன்), பி.கமலேஸ்வரி (பண்டத்தரிப்பு), பி.கங்காதரன் (வல்வெட்டித்துறை), எஸ்.லக்சுமிகாந்தன் (கோண்டாவில்), வி.சிவராமன் (சுழிபுரம்).

சி.பத்மாதேவி (பூநகரி), ஆர்.ஞானகுரு (சாவகச்சேரி), என்.மோகனறாஜ் (யாழ்ப்பாணம்), பி.பிறேமதாஸ் (பருத்தித்துறை).

கே.குமாரசூரியர் (நயினாதீவு), எஸ்.கணேசமூர்த்தி (யாழ்ப்பாணம்), கே.பொன்னம்பலம் (கொடிகமம்), எஸ்.சிற்சபேசன் (பருத்தித்துறை), வி.அமிர்தலிங்கம் (நெடுந்தீவு), ஆர்.சேமசுந்தரி (கரவெட்டி).

கே.மகேந்திரன் (பருத்தித்துறை), என்.ஆனந்தராஜா (யாழ்ப்பாணம்), ஆர்.அன்பரசன் (யாழ்ப்பாணம்), என்.நாகேந்திரமூர்த்தி (யாழ்ப்பாணம்), என்.குகநேசன் (கானநகர்), எ.அருளானந்த சோதி (வல்வெட்டித்துறை).

எதிர்வரும் 24ஆம் திகதி மேற்குறிப்பிட்ட அனைவரையும் யாழ் அஞ்சல் திணைக்களத்துக்குச் சமுகமளித்து பதவியைப் பெறுப்பேற்றுக் கொள்ளுமாறு அஞ்சல்மா அதிபர் கேட்டுள்ளார். (எ-12)

# தற்போதைய வெப்பநிலை அதிகரிக்க வாய்ப்பு

## வானிலை அவதான நிலையம் தகவல்

யாழ்ப்பாணம்,மார்ச்13

எதிர்வரும் 23ஆம் திகதி சூரியன் மத்திய கோட்டுப் பகுதியில் இலங்கைக்கு மேலே உச்சம் கொடுக்க இருப்பதால் தற்போதைய வெப்பநிலை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது என்று யாழ் வானிலை அவதான நிலையம் தெரிவித்திருக்கிறது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது இவ்வாண்டு இக்காலப்பகுதியில் வெப்பநிலை அதிகரித்திருப்பதாக வானிலை அவதான நிலையப பொறுப்பதிகாரி த.பிரதீபன் தெரிவித்தார்.

கடந்த பெப்ரவரி மாதம் சராசரி உயர் வெப்பநிலை 30.7 பாகை செல்சியஸ் ஆகவும் ஆகக்குறைந்த வெப்பநிலை 22.2 பாகை செல்சியஸ் ஆகவும் சராசரி வெப்பநிலை 26.5 பாகை செல்சியஸ் ஆகவும் பதிவாகியுள்ளது.

கடந்த ஆண்டு (2002) பெப்ரவரி மாதம் சராசரி உயர்வு வெப்பநிலை 30.0 பாகை செல்சியஸ் ஆகவும் ஆகக்குறைந்த வெப்பநிலை 21.8 பாகை செல்சியஸ் ஆகவும் சராசரி வெப்பநிலை 25.9 பாகை செல்சியஸ் ஆகவும் பதிவாகியிருந்தது.

இதேவேளை, மழைவீழ்ச்சி கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 104.0 மில்லிமீற்றராகவும் இவ்வாண்டு பெப்ரவரி மாதம் 53.7 மில்லிமீற்றராகவும் பதிவாகியுள்ளது.

இதேவேளை, இவ்வாண்டு இது வரை 99.0 மில்லிமீற்றர் மழை பதிவாகியுள்ளது.

மழை வீழ்ச்சி குறைந்திருப்பதும், வெப்பநிலை அதிகரித்திருப்பதும் குடாநாட்டு காலநிலையில் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-180)

## இந்துருவ பகுதியில் சம்பவம்:

# 'இன்ரர்சிட்டி' பஸ்ஸுக்குள் வைத்து தம்பதிகள் சுட்டுக் கொலை!

## கொலையாளி இறங்கி தப்பிச் சென்றார்

பலப்பிட்டிய நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு விசாரணையொன்றுக்கு ஆஜராகிவிட்டு மஹரகமவுக்குத் திரும்பிக்கொண்டிருந்த ஒரு தம்பதிகள் அவர்கள் பயணம் செய்த 'இன்ரர்சிட்டி' பஸ்ஸுக்குள் வைத்தே துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டனர். நேற்றுமுன்தினம் பிற்பகல் 12.45 மணியளவில் கொஸ்கொட, இந்துருவ பகுதியில் இச்சம்பவம் நடைபெற்றது. மஹரகமவைச் சேர்ந்த எஸ்.சுனில் (45 வயது), எச்.எம்.இந்துமதி (42 வயது) ஆகியோரே கொல்லப்பட்டவர்களாவர்.

இந்துருவையில் ஹோட்டல் ஒன்றின்முன் பஸ் நிறுத்தப்பட்ட போது அதில் ஏறிய ஒருவர், பஸ் புறப்பட்டுச் செல்கையில் தம்பதிகளை சுட்டுக்கொன்றார். பின்னர் துப்பாக்கியைக் காட்டி சாரதியைப் பயமுறுத்தி பஸ்ஸை நிறுத்தச் செய்த அவர், கீழே இறங்கி மோட்டார் சைக்கிள் ஒன்றில் ஏறி தப்பிச் சென்றுள்ளார்.

இச்சம்பவத்தின் பின்னர் பஸ், கொஸ்கொட பொலீஸ் நிலையத்துக்கு கொண்டுசெல்லப்பட்டது. (எ)

# எழுதுவினைஞர் ஒன்றியம் ஆட்சேபம்

யாழ்பல்கலைக்கழக எழுதுவினைஞர் தொழில்நுட்ப அலுவலர் ஒன்றிய அங்கத்தவர்களை வேலைக்குச் செல்லவிடாமல் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் தடுத்தமை எந்த விதத்திலும் நியாயப்படுத்த முடியாத சம்பவம் என எழுதுவினைஞர் தொழில்நுட்ப அலுவலர் ஒன்றியம் கண்டனம் தெரிவித்துள்ளது.

தமது சலுகை கோரிக்கைகளுக்காக தமது அங்கத்தவர் அல்லாதவரையும் வேலைக்குச் செல்லவிடாது தடுப்பது, தடுக்க முயற்சிப்பது எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாதது என்று எழுதுவினைஞர் தொழில்நுட்ப அலுவலர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எக்ஸ்போ ஏவியேஷனில் தொடர்புக்கு பயனியுங்கள்
இலவச போக்குவரத்து வசதி
யாழ்ப்பாணம் - பலாலி - யாழ்ப்பாணம்
கொட்டாஞ்சேனை - ரத்மலானை - கொட்டாஞ்சேனை
எக்ஸ்போ ஏவியேஷன் (பிரைவட்) லிமிட்டட்
1ஈ, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021-2223891, 071-349999
296,A/1, காலி வீதி, கொழும்பு 6
தொ.பேசி: 01-360290,360291,074-512666

ரூ. 16910 முதல்
தொலைக்காட்சிப் பெட்டிகள்
சிங்கர்
புதிய பார்வை
இல.1, ஸ்டான்லி விதி, யாழ்ப்பாணம்
தொ.பே.: 021-2225408

என்றென்றும் தரம்
அது நிரந்தரம்
10 YEARS WARRANTY Japanese Technology
உங்களின் மனதில்
என்றுமே முதல்வன்!
Lumala
Bicycles Supreme

SHARP Action of the day



கென்யாவுடனான ஆட்டத்தில் 63 ஓட்டங்களைப் பெற்ற அன்டி பிளவர்

பிரவுன்ஸ் எலக்ரோனிக்ஸ் Browns
BROWNS ELECTORINICS




# பாகிஸ்தான் அணி வீரர்களிடையே திறமை உண்டு; ஆர்வம் இல்லை

## பயிற்றுநர் ரிச்சர்ட் பைபஸ்

இஸ்லாமாபாத்,மார்ச்13

"பாக்.கிரிக்கெட் வீரர்களிடையே திறமைக்குப் பஞ்சமே இல்லை. ஆனால், கற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் இல்லை. இப்படி ஓர் அணிக்கு பயிற்சி அளிப்பது கடினமான வேலை."

- இவ்வாறு பாகிஸ்தான் அணியின பயிற்றுநர் ரிச்சர்ட் பைபஸ் கூறியுள்ளார்.

உலகக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் அணியின் செயற்பாடுகளைப் பார்த்து விரக்தியின் விளிம்புக்குச் சென்றுவிட்டார் பயிற்றுநர் ரிச்சர்ட் பைபஸ்.

தென்னாபிரிக்க நாட்டைச் சேர்ந்த பைபஸ், பாகிஸ்தான் அணியின் மோசமான தோல்வி பற்றிக் கூறியதாவது:-

உலகக் கிண்ணத் தோல்வி பற்றி விசாரிப்பதற்காக பாகிஸ்தான் கிரிக்கெட்சபை நியமித்துள்ள மூன்று நபர் குழுவின் முன் ஆஜராக நான் விரும்பவில்லை. அதற்குப் பதிலாக எனது கருத்துகளை அறிக்கையாகத் தயாரித்து சமர்ப்பிக்கவுள்ளேன்.

பாகிஸ்தான் அணியின் திறமைக்குப் பஞ்சமே இல்லை. அதேவேளை, அணியில் உள்ள சில வீரர்களுக்கு ஆர்வம், துடிப்பு என்பன இல்லை. புதிதாகச் சில விடயங்களைச் சொன்னாலும் கேட்கமாட்டார்கள். நான் யார் பெயரையும் குறிப்பிட விரும்பவில்லை. பழைய பழக்கங்களை மாற்றிக்கொண்டு இப்போதைய சூழலுக்கு ஏற்ப தங்களை மாற்றிக்கொள்ள அவர்கள் விரும்புவதே இல்லை.

எனது வேலையை நான் சிறப்பாகத்தான் செய்தேன். ஆனால் கற்றுக்

(11ஆம் பக்கம் பார்க்க)

# நியூஸிலாந்துக்கு எதிரான ஆட்டத்தை எதிர்நோக்கிக் காத்திருக்கிறேன்!

## சௌரவ் கங்குலி தெரிவிப்பு

கேப்டவுன்,மார்ச்13

நியூஸிலாந்து அணிக்கு எதிரான சுப்பர் சிக்ஸ் போட்டியில் மிகப் பெரிய வெற்றியைப் பெறும் உறுதியுடன் இந்திய அணியின் தலைவர் கங்குலி இருக்கிறார்.

இந்தியா - நியூஸிலாந்து அணிகளுக்கு இடையேயான சுப்பர் சிக்ஸ் போட்டி நாளை வெள்ளிக்கிழமை செஞ்சூரியனில் நடைபெறவுள்ளது.

இப்போட்டி குறித்து கங்குலி கூறியிருப்பதாவது:-

"நியூஸிலாந்து அணிக்கு எதிரான ஆட்டத்தை ஆவலுடன் எதிர்நோக்கி காத்திருக்கிறேன். நீண்டநாள்களாக இந்த ஆட்டத்தை எதிர்நோக்கி காத்திருக்கிறேன். இந்த ஆட்டத்தின் போது சில விஷயங்களை நிரூபிக்க வேண்டிய கட்டாயத்திலும் நான் இருக்கிறேன்".

- இவ்வாறு கங்குலி கூறினார்.

உலகக் கிண்ணத்துக்கு முன்பு இந்திய அணி நியூஸிலாந்துக்குச் சுற்றுலா மேற்கொண்டு இருந்தது. அந்தப் பயணத்தின் போது டெஸ்ட் தொடரை 2-0 என்ற நிலையிலும் ஒரு நாள் போட்டித் தொடரை 5 - 2 என்ற நிலையிலும் இந்தியா இழந்தமை குறிப்பிடத்தக்கது. தங்களுக்குச் சாதகமான முறையில் ஆடுகளங்களை அமைத்துக்கொண்டு வெற்றி பெற்றது நியூஸிலாந்து என்று அப்போது



(11ஆம் பக்கம் பார்க்க)

# தென்னாபிரிக்க அணியில் இட ஒதுக்கீடு தொடரும்!

ஜொகன்னஸ்பேர்க்,மார்ச்13

தென்னாபிரிக்க அணி உலகக் கிண்ணப் போட்டியில் மிக மோசமாகத் தோற்றிருந்தாலும் அணித் தேர்வில் இடஒதுக்கீட்டு முறை தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்படும் என்று கிரிக்கெட் சபையின் தேர்வாளர்களில் ஒருவரான ஓமர் ஹென்றி தெரிவித்துள்ளார்.

'இந்த உலகக் கிண்ணப் போட்டியில் தமது அணி அடைந்த மோசமான தோல்விக்கு நிறநீதியான இட ஒதுக்கீட்டைக் காரணம் காட்ட முடியாது என்றும் அவர் சொன்னார்.

தென்னாபிரிக்காவில் நிறவெறி ஆட்சி முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதும் அதிகாரம் கறுப்பினத்தவர்களிடம் வந்தது. அதைத் தொடர்ந்து பல துறைகளிலும் பெருமளவில்

(11ஆம் பக்கம் பார்க்க)

# சயீட் அன்வர் விலகுகிறார்



இஸ்லாமாபாத்,மார்ச்13

கிரிக்கெட் உலகக்கிண்ண போட்டியில் பாகிஸ்தானின் படுதோல்வியைத் தொடர்ந்து அந்த அணியின் சிரேஷ்ட வீரர் சயீட் அன்வர் விலக முடிவு செய்துள்ளார்.

"போதுமான அளவுக்கு கிரிக்கெட்

(11ஆம் பக்கம் பார்க்க)

# ஸிம்பாப்வே தேர்வாளர் இராஜினாமா

ஹராரே,மார்ச்13

ஸிம்பாப்வே கிரிக்கெட் தேர்வுக்குழு அங்கத்தவர் அன்டி பைகுரொவ்ட் நேற்றுமுன்தினம் திடீர் இராஜினாமாச் செய்தார்.

கென்ய அணியுடனான முக்கியமான போட்டியில் நேற்று ஸிம்பாப்வே அணி மோதியது. இப்போட்டிக்கு முதல

(11ஆம் பக்கம் பார்க்க)

# சதம் பெறக் கண்வைக்கிறார் இந்திய இளம் வீரர் ஷேவாக்

சென்சூரியன்,மார்ச் 13

நியூஸிலாந்து அணிக்கு எதிரான ஆட்டத்தில் தன் முதலாவது உலகக் கிண்ண சதத்தைக் குவிப்பதற்கு இந்திய அணியின் இளம் ஆரம்பத் துடுப்பாளர் வீரேந்த்ர் ஷேவாக் கண் வைத்துள்ளார். அதன்மூலம் தன் அணியை வெற்றி பெறச் செய்யமுடியும் என்றும் அவர் கருதுகின்றார்.

"நியூஸிலாந்தை எதிர்கொள்ள நான் தயார். அந்த ஆட்டத்தில் நான் சதத்தைப் பெறுவேன் என்று எதிர்பார்க்கின்றேன்" - என்றார் ஷேவாக்.



இந்தியா ஏற்கனவே அரையிறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றுவிட்டது. நாளை வெள்ளிக்கிழமை அது நியூஸிலாந்து அணியைச் சந்திக்க இருக்கும் செஞ்சூரியன் மைதானத்தில இந்தியா ஏற்கனவே இருதடவைகள் விளையாடியுள்ளது. ஆஸ்திரேலியாவுடன் படுதோல்வி அடைந்தது. ஆனால், பாகிஸ்தானுடன் 6 விக்கெட்டுக்களால் பெரு வெற்றி பெற்றது.

"இது இந்தியாவுக்கு மிக விருப்பமான மைதானம் இது. நியூஸிலாந்தை வெல்வதற்கு நாம் கடும் பிரயத்தனம் செய்வோம்" - என்று செய்தியாளர் மாநாட்டில் பேசிய ஷேவாக் தெரிவித்தார்.

நியூஸிலாந்து அணியுடன் அந்த நாட்டில் நடந்த ஒரு நாள் போட்டி

(11ஆம் பக்கம் பார்க்க)

# ஓய்வு பெறப்போவதாக அன்டி பிளவர் அறிவிப்பு

கேப்டவுன்,மார்ச்13

ஸிம்பாப்வே கிரிக்கெட் அணியின் மிகச் சிறந்த துடுப்பாளரும் முன்னாள் தலைவருமான அன்டி பிளவர், தான் உலகக் கிண்ணப் போட்டி முடிவடைந்ததும் சர்வதேசக் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெறப்போவதாக அறிவித்துள்ளார்.

தனது நாட்டில் அதிபர் முகாபே தலைமையிலான அரசு வெள்ளையர்கள் மீது கட்டவிழ்த்துவிட்டுள்ள நிறவெறிக் கொள்கையைக் கண்டித்து உலகக் கிண்ண ஆட்டங்களில் கறுப்புத் துணி அணிந்து விளையாடியவர் அன்டி பிளவர். இதன் காரணமாக அவர் பல்வேறு நெருக்குவாரங்களுக்கு உட்படுத்தப்பட்டார். அவர் தொடர்ந்தும் ஸிம்பாப்வேயில் இருக்க முடியாத நிலை ஏற்படும் என்று அவர் கருதுகின்றார். இதனால் ஆஸ்திரேலியாவுக்கு இடம்பெயரவும் அவர் முன்னரே தீர்மானித்திருந்தார்.

இப்போது சர்வதேச ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதற்கும் அவர் தீர்மானித்துள்ளார்.

அதிபர் முகாபேக்கு எதிர்ப்புத் தெரிவித்து கறுப்புப் பட்டி அணிந்து விளையாடியது குறித்து தான் வருத்தப்படவில்லை என்றும் அன்டி பிளவர் தெரிவித்தார். "இந்த விளையாட்டுப் போட்டியின் போது இதைச் செய்ததற்காக எனக்கு வருத்தங்கள் ஏதுமில்லை" - என்றார் அவர்.

"நான் வேதனைப்படும் ஒரே விடயம் நியூஸிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் 37 ஓட்டங்களில் ஆட்டமிழந்ததுதான்" - என்றும் அவர் மேலும் சொன்னார்.

தெற்கு ஆஸ்திரேலியாவின் உள்ளூர் அணி ஒன்றில் விளையாடுவதற்கான ஒப்பந்தத்தில் அன்டி பிள

(11ஆம் பக்கம் பார்க்க)

MICRO PC SYSTEMS
◆ கணனி விற்பனை ◆ பழுதுபார்த்தல் ◆ பராமரிப்பு
intel IBM hp Mercury PROLINK
175/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பெ. 077-7308417
MPAQ COMPUTERS

SHARP
உத்தரவாதத்துடன் கூடிய
விற்பனைக்குப் பிந்திய
சிறந்த சேவை
89, ஸ்டான்லி விதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-2225150
Browns

ASIAN
COMPUTER EDUCATION
தரமான கணனிப் பாடநெறிகள்
2G,ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்

## தொழிலாளர் தேவை

1) சுத்திகரிப்பு மேற்பார்வையாளர்
(Public Health Engineering Supervisor)
2) மின் இணைப்பாளர் - இயந்திர திருத்துநர்
(Electrician Cum Pump Mechanic)

தகுதியானவர்கள் உடன் அலுவலகத்திற்கு சமுகந்தரவும்.

**கிளீன்வெல்,**
866, பருத்தித்துறை வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(15533)



## மனோதத்துவ வைத்தியம்
### (GENERAL PSYCHOTHERAPY)

இளைஞர்களே!
சக்தி குறைவு - ஞாபக மறதி - பயம்- நடுக்கம் - நித்திரைக் குறைவு இவற்றால் தாழ்வு மனப்பான்மையா?
கவலை வேண்டாம்.
உடனே என்னுடன் தொடர்புகொள்ளுங்கள்!

ஆண்மைச் சக்தி குறைவுதான் உங்கள் கவலையா?
மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றிபெறலாம்.

தொடர்புகொள்ளவும்.
பிரபல மனோதத்துவ நிபுணர்
**Dr.P.ஆறுமுகம் S.M.P.**
A.S.N சுற்றுலா விடுதி,
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
GOVT.Regd. No. 9492
HOT LINE - 0777 - 569205
T.P.: 3181, 5399
(முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்)

(சி-26915)


இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் - வலிகாமம் மேற்கு பிரிவு
### அங்கத்துவத்தைப் புதுப்பித்தலும், புதிய அங்கத்தவர்களாக இணைதலும், புதிய அலகுகளை ஸ்தாபித்தலும்

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் புதிய யாப்பு விதிகளுக்கு அமைவாக பிரிவுகளில் அலகுகளை ஸ்தாபிக்க வேண்டியுள்ளது. இப்பிரிவில் மூன்று புவியியல் ரீதியாக ஒருங்கிணைக்கப்பட்ட அலகுகளை அமைத்து செயற்பட முடிவு செய்யப்பட்டுள்ளது.

2003 ஆம் ஆண்டிற்கான அங்கத்துவத்தைப் புதுப்பித்தலும், புதிய அங்கத்தவர்களாக இணைவதற்குமான இறுதித் திகதி 19.03.2003 ஆகும். இத்திகதிக்குள் பிரிவில் பணம் செலுத்தும் அங்கத்தவர்களே மேற்படி அலகுப் பொதுக் கூட்டத்திலும், புதிய நிர்வாகத் தேர்விலும் பங்கேற்க முடியும்.

2003 ஆம் ஆண்டுக்கான அங்கத்துவ அட்டைகளை இதுவரை பெற்றுக் கொள்ளாத அங்கத்தவர்கள் பிரிவிற்கு சமுகந்தந்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இம் மூன்று அலகுகளுக்குமான பொதுக்கூட்டம் நடத்தும் இடம், திகதி, நேரம் என்பன பின்னர் அறியத்தரப்படும்.

மாவடி,
வட்டுக்கோட்டை. 2003.03.12

கௌரவ செயலாளர்.

(15522)

யா/உடும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம், உடும்பிராய்
### இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு - 2003

இடம் : பாடசாலை மைதானம்
காலம் : 2003.03.14 வெள்ளி பி.ப.2.30மணி
தலைமை : திரு.சு.யோகராசா முதல்வர்

முதன்மை விருந்தினர்:
திரு.செ.பத்மநாதன்
(அரச அதிபர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்)
இணை விருந்தினர்:
திரு.க.இராசதுரை
(உதவிப் பிரதேச செயலர், வலி.கிழக்கு, கோப்பாய்)
திரு.ந.கணேசலிங்கம்
(வங்கிச் சேவை முகாமையாளர், ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி)
திரு.கை.கவியன்பன்
(பொறுப்பாளர், கல்விக் கழகம், யாழ்.மாவட்டம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(15511) - பாடசாலைச் சமூகம்.

## பங்குனிப் பொங்கல் உற்சவங்கள்

யாழ்ப்பாணம்,மார்ச்13

கிளிநொச்சி கரைச்சி புளியம் பொக்கனை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கல் விழா எதிர்வரும் 18 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. (ஒ-12)

## சண்டிலிப்பாயில் 532 குடும்பங்களுக்கு கொடுப்பனவு

நவாலி,மார்ச்13

கடந்த ஆண்டு வன்னியிலிருந்து ஏ-9 பாதையூடாக வந்து சண்டிலிப்பாய பிரதேச செயலர்பிரிவில் மீளக் குடியமர்ந்த 15 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 532 குடும்பங்களுக்கு இருபத்தையாயிரம் ரூபா கொடுப்பனவு விரைவில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## கட்டணம் செலுத்தாத மின் இணைப்புகள் துண்டிப்பு

சண்டிலிப்பாய்,மார்ச்13

மானிப்பாய், ஆனைக்கோட்டை ஆகிய பகுதிகளில் மின்சாரக் கட்டணங்கள நீண்ட காலமாகச் செலுத்தப்படாதிருந்த 15இற்கு மேற்பட்ட வீடுகளின் இணைப்புகள கடந்த வாரம் மின்சாரசபையால் துண்டிக்கப்பட்டுள்ளன. இரண்டாயிரம் ரூபாவுக்கு மேல் நிலுவையை செலுத்தாமல் இருக்கும் வீடுகளின் மின் இணைப்புகளே இவ்வாறு துண்டிக்கப்பட்டுள்ளதாக மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-135)

## 'தேட்டம்' படக்காட்சி

செயல்திறன் அரங்க இயக்கத்தினர் திருநெல்வேலி, ஆடியபாதம் வீதி, சிறிய முத்துத்தம்பி பாடசாலை முன்பாக உள்ள தமது காரியாலயத்தில் நாளைமறுதினம் முற்பகல் பத்து மணிக்கு "உடக்கு பாஸ்க்" எனும் நாடக வீடியோப் படக்காட்சி காண்பிக்க உள்ளனர். (ஒ)

## சுன்னாகம் சந்தையில் பொருள்கள் திருட்டு!

வலிகாமம் தெற்கு,மார்ச்13

சுன்னாகம் மத்தியசந்தை வளாகத்தில் அமைந்துள்ள சிறு வியாபாரிகளின் விற்பனைப் பொருள்கள் அடிக்கடி திருட்டுப் போவதாக வியாபாரிகள் சார்பில் முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகின்றன.

மத்திய சந்தையில் இரவு நேர பாதுகாப்பு உத்தியோகத்தர் சுன்னாகம் வர்த்தக சங்கத்தினரால் நியமிக்கப்பட்டு கடமையாற்றி வருகின்ற போதிலும் கடைப் பொருள்கள் களவாடப்படுவதையிட்டு வியாபாரிகள் விசனம் தெரிவிக்கின்றனர். (ஒ-152)

## கட்டாக்காலி நாய்களால் தொல்லை!

வடமராட்சி,மார்ச்13

வல்வெட்டித்துறை நகரப்பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது.

வீதிகளில் கூடி நிற்கும் கட்டாக்காலி நாய்களினால் வீதியால் சென்று வருவோர்களுக்கு பலத்த சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

நோய்களினால் பீடிக்கப்பட்டுள்ள கட்டாக்காலி நாய்களினால் வீடுகளில உள்ள வளர்ப்பு நாய்களும் நோய்களுக்குள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-173)

## இதய பூர்வ அஞ்சலி

ஆறாம் ஆண்டு

பிறப்பு 09 - 09 - 1926



இறப்பு 14 - 03 - 1997

திருமதி நேசமணி பெஞ்சமின்

ஐம்பதாம் ஆண்டு

பிறப்பு 10 - 11 - 1947



இறப்பு 28 - 07 - 1953

செல்வி எலிசபெத் பெஞ்சமின்

இரக்கத்தின் ஆண்டவரே! இவர்களுடைய பாவங்களை மன்னித்து நிலை வாழ்வைக் கட்டளையிட்டருளும்! ஆமென்!!

நாளை (14.03.2003) வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு (பு.நே.) புனித மரியாள் தேவாலயத்திலும், நீர்வேலி தெற்கு புனித அந்தோனியார் ஆலயத்திலும் ஆன்ம சாந்தித் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

அந்தோனியார் கோயில் வளவு,
நீர்வேலி தெற்கு.

பிரிவால் துயருறும்:
(15531) அ.இ.பெஞ்சமின் மற்றும் உறவினர்கள்.

## அறிவிப்புப் பலகை மூடி மறைப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்13

வடமராட்சிப் பகுதியில் உள்ள இராணுவ முகாம்களில் வைக்கப்பட்டிருந்த அறிவிப்புப் பலகைகள் தற்போது மூடி மறைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

'அனுமதியின்றி முகாம் பகுதிக்குள் நுழைந்தால் குறைந்த அளவு தண்டனை வழங்கப்படும்' என்ற வாசகமே இந்த அறிவிப்புப் பலகைகளில் மும்மொழிகளிலும் எழுதப்பட்டிருந்தன. (ஒ-15)

University of Jaffna
Sri Lanka

Commencement of lectures

**Post Graduate Diploma in Education - Semester - II - 2003**
(Jaffna & Vavuniya Centre)

The lectures for Post Graduate Diploma in Education Part Time Semester II Will Commence on 15th March 2003.

Registrar
12.03.2003

(C-26918)


## பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை

முன்னனுபவமுள்ள, ஆங்கிலம் தெரிந்தவர்களிடமிருந்து மேற்காணும் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வயதெல்லை 35-50. பூரண விவரங்களுடன் 10 நாள்களுக்குள் கீழ்க்காணும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

மனிதவள முகாமையாளர்
யூரோவில்,
866, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

(15532)


## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### த.கணேசராசா
(C.T.B. காப்பாளர்)

எமக்காக 1942.01.08
இறையிற்காக 1999.03.13

ஊண் இன்றி உறக்கமின்றி உதிரத்தைத் தந்தெம்
உலகமாய் நின்றிருந்தீர் - உம்
உயிரின்றி உறவின்றி உதவிய கையின்றி - எம்
உணர்வுகள் என்றும் உம் நினைவுகளில்
வருடங்கள் நான்கு வந்து போனாலும்
வேகும் எம் மனதில் வேகாது உம் நினைவு.

பாரதி வீதி, கச்சேரி. (15513) - குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### கதிரவேலு சதாசிவம்
(இளைப்பாறிய பொலிஸ் சார்ஜன்ட்)

இமையாணன் கிழக்கைப் பிறப்பிடமாகவும், அந்திரான், கரவெட்டி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற பொலீஸ் சார்ஜன்ட் கதிரவேலு சதாசிவம் நேற்று(12.03.2003) புதன்கிழமை அதிகாலை 2.30மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு தம்பதியரின் ஏகபுத்திரனும் காலஞ்சென்ற புனிதவதியின் அருமைக் கணவரும் அமரர் சுபேந்திரன், பத்மலோஜினி, சரஸ்வதி,சரோஜினிதேவி(கனடா) ஆகியோரின் அருமைத்தந்தையும் சண்முகநாதன்(கட்டடக்கலைஞர்), ஸ்ரீஸ்கந்தராஜா (இலங்கை மின்சார சபை ஒப்பந்தகாரர்), பாலேந்திரன்(கனடா) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.03.2003) வியாழக்கிழமை மு.ப.9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அந்திரான்,
கரவெட்டி.

(15527)

தகவல்:
சி.ஸ்ரீஸ்கந்தராஜா
(மருமகன்).

### நமசிவாயம் ஆனந்தவிநாயகன்
(வண்ணை ஆனந்தன்)

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட நமசிவாயம் ஆனந்தவிநாயகன் 11.03.2003 செவ்வாய்க்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நமசிவாயம் - சிவநாயகி தம்பதியினரின் அன்புப் புதல்வனும் அரியதேவியின் அன்புக் கணவரும் தமிழ்வேந்தனின் பாசமிகு தந்தையும் நமசிவாயம் லோகேஸ்வரி, கனகசுந்தரம் பரமேஸ்வரி, அரசகேசரி யோகவதி, இந்திரன் புவனேஸ்வரி (ஜேர்மனி), ஜெகதீஸ்வரன்(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

471, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(15519)

தகவல்:
அ.தவசொரூபன்
(மருமகன்).

உதயன்

# பெருமை தரும் பொறுமை

இலங்கைக்கு கிழக்கே சர்வதேச கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் வர்த்தகக் கப்பல் ஒன்று இலங்கைக் கடற்படையினரால் தாக்கி மூழ்கடிக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து எழுந்துள்ள அரசியல் நெருக்கடிச் சூழலில் புலிகளின் நிலைப்பாடு வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் புலிகளின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியிருக்கின்றார்.

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் அரசியல் பணி புரியச் சென்றிருந்த புலிகளின் போராளிகள் பெரும்பாலானோர், கிழக்குக் கடலில் நடந்த கப்பல் தகர்ப்புச் சம்பவத்தை அடுத்து நேற்றுமுன்தினம் வன்னிக்கும் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள ஏனைய பிரதேசங்களுக்கும் அவசர அவசரமாக மீள அழைக்கப்பட்டனர் என்ற செய்திகள் வெளியாகிய வண்ணம் இருந்தன.

இந்தப் பின்னணியில் பல தரப்புகளிலும் எழுந்த சந்தேகங்கள், ஊகங்கள், ஹேஸ்யங்கள், அச்சங்கள் ஆகியவற்றுக்கு மத்தியில் - அவற்றை நீக்கும் வகையில் - விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் பாலசிங்கம் விளக்கமளித்திருக்கின்றார்.

"கப்பல் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவத்துடனேயே நாங்கள் யுத்தத்தைத் தொடங்கியிருக்க வேண்டும். ஆனால், தொடங்கவில்லை; நாங்கள் தொடங்கப் போவதுமில்லை. ஏனென்றால் அமைதியை - சமாதான சூழலை - நாங்கள் குலைக்க விரும்பவில்லை. அமைதியைப் பேணுவதற்காக எங்களால் இயன்றளவு பொறுமை பேணுவோம்.

"அமைதி முயற்சிகளில் - சமாதான வழி முறையில் தீர்வுகாணும் நடவடிக்கைகளில் - நாம் நேர்மையாகவும் உண்மையாகவும் நிதானமாகவும் இருக்கின்றோம் என்பதை உலகுக்குப் பறைசாற்ற விரும்புகின்றோம். எம்மை ஆத்திரமூட்டும் செயல்களில் படையினர் ஈடுபட்டு வந்துள்ளனர். ஆனால், நாம் எந்தளவுக்குப் பொறுமை காக்க முடியுமோ அந்தளவுக்கு பொறுமை காக்கின்றோம்; காப்போம்." - இப்படி உறுதி கூறியிருக்கின்றார் மதியுரைஞர் பாலசிங்கம்.

தற்போதைய சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டு ஒன்றேகால் வருடம் தாண்டுகின்றது. புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்தும் ஒரு வருடம் கடந்துவிட்டது. அரசு - புலிகள் நேரடிப் பேச்சுகள் ஆரம்பமாகியும் ஆறு மாதங்களாகின்றன; ஐந்து சுற்றுப் பேச்சுகள் முடிந்து ஆறாவது சுற்றுக்கும் இரு தரப்புகளும் தயாராகிவிட்டன.

இந்தக் காலத்தில் தமிழரைப் பொறுத்தவரை சாதகமாக என்ன நடைபெற்றிருக்கின்றது? அதையும் பாலசிங்கம் அம்பலப்படுத்தியிருக்கின்றார்.

தமிழ்ப் பிரதேசங்கள் மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடை மட்டும் நீக்கப்பட்டிருக்கின்றது. வேறு எதுவும் உருப்படியாக நடக்கவில்லை. யுத்தத்தால் இடம்பெயர்ந்த பல லட்சம் தமிழர்கள் தங்கள் தாயக பூமிக்குத் திரும்பிச் செல்வதற்கான அனுமதி கூடக்கிடைக்கவில்லை.

- இவ்வாறு அமைதிச் சூழலும் பேச்சுக்காலமும் சமாதான வேளையும் வரையறையின்றி காலத்தை இழுத்தடித்து பயன்தராமல் நீண்டு செல்கின்றன. ஆனால், அதேசமயம் தமிழரின் உரிமைக்கான வேட்கையையும் பலத்தையும் மழுங்கடிக்கும் மறைமுகச் சதி அரங்கேறுவதாக பாலசிங்கம் புட்டுக் காட்டுகின்றார்.

"பேச்சுகள் புலிகளைப் பலவீனப்படுத்தும் ஒரு பொறியாக மாறக்கூடாது. அதில் நாங்கள் விழிப்பாக இருக்கிறோம். பேச்சு வேளையில் இலங்கை அரசு ஆயுதங்களை வாங்கிக் குவிக்கின்றது; இராணுவத்தைப் பலப்படுத்துகின்றது. அமெரிக்கா, இந்தியா போன்ற சர்வதேச நாடுகளுடன் வர்த்தக, பொருளாதார, இராணுவ ஒப்பந்தங்களைச் செய்கின்றது. புலிகள் இயக்கத்தைச் சுற்றி - தமிழர் தாயகத்தைச் சுற்றி - ஒரு பாதுகாப்புச் சிலந்தி வலையைப் போடுகின்றது; பொறியை அமைக்கின்றது. அதில் இந்தியாவின் பங்கு என்ன, அமெரிக்காவின் பங்கு என்ன என்பதெல்லாம் எமக்குத் தெரியும். நாம் முட்டாள்கள் அல்லர்" என்று அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

ஒரு புறம் சமாதானக் கடையைத் திறந்து வைத்துக்கொண்டு மறுபுறம் வலைவிரிப்பது, பொறிவைப்பது போன்ற செயல்களில் இலங்கை அரசு ஈடுபடக்கூடாது. அத்தகைய போக்கு சமாதான முயற்சிகளை அர்த்தமற்றவையாக்கி விடும்; மீண்டும் போர் வெடிக்க - பிரளயம் ஏற்பட - வழி செய்துவிடும்.

---

அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி

# அரச வங்கிகளில் பெற்றகடனை வர்த்தகர்கள் மீளளிக்கவில்லை!

## எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு

கொழும்பு,மார்ச்13

அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி அரச வங்கிகளில் பெரும் தொகைப் பணத்தைக் கடனாகப் பெற்ற பிரபல வர்த்தகர்கள் பலர் அக்கடனை மீளளிக்காது உள்ளதாகவும் - அத்தகையவர்கள்மீது நடவடிக்கை எடுக்க அரசு பின்னடிப்பதாகவும் - எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

இவ்வாறு பெருந்தொகைப் பணம் முடங்குவது நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்குத் தடையாக அமைய ஒரு முக்கிய காரணமாகலாம். ஒருகோடி ரூபாவிற்கு மேல் கடனாகப் பெற்று அதனை உரிய தவணைகளில மீளச் செலுத்தாமலிருக்கும் தனிநபர்கள், அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் பெயர் விவரங்களை அரசு வெளிக்கொணர வேண்டுமென எதிர்க்கட்சியினர் குறிப்பாக ஜே.வி.பியினர் அரசிற்கு அழுத்தம் கொடுத்துள்ளதாகத் தெரியவருகிறது.

---

## மாதர் மான்மியம்

### இந்நாட்டு மங்கை

கூப்பனுக்கு அரிசி வாங்கி
கொண்டு போய் உலையிலிட்டு
தப்பாது கணவன் உண்ண
தான் அதைத் தந்துவிட்டு
எப்போதும் அதன் மீதி தன்னை
இரங்கியே மக்கட் கீந்து
ஒப்பனைக்கு உண்பது போல்
ஒருவாய் உண்டு காட்டி
செப்பரும் பசியைப் போக்க
செம்மையாய் தண்ணீர் உண்டு
ஒப்பரும் பசியோடு வாழும்
உத்தமி இந்நாட்டு மங்கை.

- விகடகவி.

---

# தென்னை வளத்தை மேம்படுத்த மீள்நடுகை மானியத் திட்டங்கள்

## தெங்கு சபை நடைமுறைப்படுத்துகிறது

யுத்த நடவடிக்கைகள் காரணமாக அழிந்துபோன தென்னை வளத்தை மேம்படுத்தும் நோக்கில் தெங்கு பயிர்ச்செய்கைச் சபை தெங்கு மீள்நடுகை மானியத் திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக தெங்குப் பயிர்ச்செய்கைச் சபையில் பிராந்திய உதவி முகாமையாளர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த இரு தசாப்தங்களாக எமது பகுதியில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக பல லட்சக்கணக்கான தென்னை மரங்கள் அழிக்கப்பட்டுள்ளன. பெரும் தென்னந் தோட்டங்கள் கைவிடப்பட்ட நிலையில் அழிந்து கொண்டிருக்கின்றன. புதிதாக தென்னந்தோட்டங்களை உருவாக்குவதற்கு மக்களிடையே உற்சாகம் குன்றிய நிலையும் காணப்படுகின்றது.

இவற்றைக் கவனத்திற்கொண்டு தெங்குப் பயிர்ச்செய்கைச் சபை மானியத் திட்டங்களை உடனடியாக நடைமுறைப்படுத்த முன்வந்துள்ளது. இதன்படி -

★ தெங்கு மீள் நடுகை மானியத் திட்டத்தின் கீழ் அழிக்கப்பட்ட தென்னந்தோட்டங்களை மீள் நடுகை செய்வதற்கு ஏக்கருக்கு பதினையாயிரத்து ஐந்நூறு ரூபா மானியம் வழங்கப்படும்.

★ தெங்கு புது நடுகை மானியத்திட்டத்தின் கீழ் புதிதாக தென்னந்தோட்டங்களை உருவாக்குவதற்கு ஏக்கருக்கு பதினாறாயிரம் ரூபா மானியம் வழங்கப்படும்.

மேற்படி மானியத்திட்டங்களில் பயனாளிகளாக விரும்பும் தெங்கு செய்கையாளர்கள் தங்கள் பகுதி தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தரை வாரத்தின் புதன்கிழமைகளில் சந்தித்து விண்ணப்பம் செய்யமுடியும். விண்ணப்பம் ஏற்கப்படும் இறுதித் திகதி எதிர்வரும் ஏப்ரல் மாதம் 15ஆம் திகதியாகும்.

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் கமநல சேவை நிலையக் கட்டடம் நல்லூர், யாழ்ப்பாணம் என்ற முகவரியிலும் -

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் உதவி அரச அதிபர் பணிமனை, பளை மற்றும் கிளிநொச்சிச் செயலகத்திலும் - முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் கமநல சேவை நிலையக் கட்டடம் புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு என்ற முகவரியிலும் - தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்களை புதன்கிழமைகளில் சந்திக்கலாம்.

மேலதிக விவரங்களுக்கு தபால்மூலம் பிராந்திய முகாமையாளர், தெங்கு பயிர்ச்செய்கைச் சபை, இல.34, கோயில் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடனும் தொடர்புகொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ)

---

# வாக்களிக்க நின்ற எம்மைத் தாக்கியதில் எனது கணவரின் விலா எலும்பில் காயம்!

## உடதலவின்ன படுகொலை வழக்கில் சாட்சி தெரிவிப்பு

கொழும்பு,மார்ச்13

வாக்களிப்பதற்காக வரிசையில் நின்றுகொண்டிருந்த என்னையும் எனது கணவரையும் துப்பாக்கிகள் சகிதம் வந்த சிலர் தாக்கினர். இதனால் கணவரின் விலா எலும்புப் பகுதியில் காயம் ஏற்பட்டது.

உடதலவின்ன படுகொலை வழக்கில் சாட்சியமளித்த பெண் சாட்சி நேற்றுமுன்தினம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த வழங்கில் சாட்சியம் அளிப்பவர்களுக்கு பல அச்சுறுத்தல்கள் இருப்பதால் சாட்சிகளின் பெயர்கள் பத்திரிகையில் வெளிவந்தால் சாட்சிகள் நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேரிடும் என சாட்சி நீதிபதியிடம் தெரிவித்ததையடுத்து சாட்சியின் பெயரைப் பத்திரிகையில் குறிப்பிடவேண்டாமென நீதிபதி பத்திரிகையாளர்களைக் கேட்டுக்கொண்டார்.

சாட்சி தொடர்ந்து சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:-

'நாங்கள் மீகம்மன கிராமத்தில் வாழ்கின்றோம். 2001ஆம் ஆண்டு டிசெம்பர் 5ஆம் திகதி நானும் எனது தாயும் கணவரும் வாக்களிப்பதற்காக மீகம்மன கனிஷ்ட வித்தியாலயத்திற்குச் சென்றோம்.

அங்கு வரிசையில் அமைதியாக நின்றுகொண்டிருந்தோம். எனக்கு முன்னால் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆதரவாளர் லீலா விஜயரத்ன என்பவர் நின்றுகொண்டிருந்தார்.

அவர் வாக்களித்த பின் நான் வாக்களிக்கச் சென்றேன். வாக்குச்சீட்டை எடுத்து வாக்களிக்க பென்சிலை எடுத்தபோது, அதன் கூர் உடைந்திருந்தது. வாக்களிக்க முடியாத நிலையில் நின்றுகொண்டிருந்தபோது, துப்பாக்கிகள் சகிதம் வாகனத்தில் வந்த சிலர் யானைக்கு வாக்களிக்க வந்தவர்கள் ஓடுங்கடா' எனக் கூச்சலிட்டனர். எனது கணவருக்கு அடித்தனர். அவரது விலா எலும்புப் பகுதியில் காயம் ஏற்பட்டது.

நான் கணவரருகில் செல்ல முற்பட்டபோது என்னைப் போகவிடாமல் தடுத்து, மீறிச்சென்றால் என்னைச் சுட்டுவிடுவதாக கூறியது அந்தக் கும்பல்.

தேர்தலுக்கு முதல் நாள் இரவு முழுவதும் மீகம்மன கிராமத்தில் வெடிச்சத்தம் கேட்டுக்கொண்டிருந்தது என்று தெரிவித்தார் சாட்சி.

நேற்றுமுன்தின விசாரணையின் போது அரச தரப்பில் ஆஜராகியிருந்த பிரதி சொலிசிட்டர் ஜெனரல் பாலித பெர்னாண்டோ நீதிபதியிடம் தெரிவிக்கையில்:-

இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பவர்களுக்கு பல அச்சுறுத்தல்கள் இருப்பதாகத் தெரியவருகிறது. ஆகவே, சாட்சிகள் உண்மையிலேயே அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுக்கிறார்களா? என விசாரணை செய்வதற்கு குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் கேட்கப்பட்டுள்ளது. அவர்களது அறிக்கையை நீதிமன்றம் பரிசீலனை செய்யவேண்டும் - என்று கேட்டுக் கொண்டார்.

இதனை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது. பெண் சாட்சியாளரின் கணவரும் சாட்சியமளித்தார். (ஓ)

---

### நாளை

மாசி 30
வெள்ளிக்கிழமை
(14.03.2003)
திதி : ஏகாதசி
முன் இரவு 10.39வரை.
நட்சத்திரம்: புனர்பூசம்
காலை 7.13வரை.
ஏகாதசி விரதம்
சுபநேரம் : 6.22 - 7.52
ராகுகாலம்:10.52 - 12.22
(பழைய நேரப்படி)

---

### உதய வாக்கு

பொது நலத்துக்காகப் பாடுபடும் ஒருவனுக்கு ஓய்வு என்பது மரணத்திலேயே கிடைக்கும்.

---

# பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் பயனுள்ள விதத்தில் இயங்கவேண்டும்

## கல்விப் பணிப்பாளர் வலியுறுத்து

மண்டைதீவு,மார்ச்13

தீவகக் கல்வி வலயத்தில் உள்ள பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களை பயனுள்ள வகையில் செயற்படுத்துமாறு தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

அனைத்துப் பாடசாலைகளும் வருடாந்தப் பொதுக் கூட்டத்தை மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு முன் நடத்தி பொதுக் கூட்ட திகதியை வலயப் பணிமனைக்கு அனுப்பவேண்டும் என்றும் அவர் பணித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக ஜி.ரி.இசற். - கீயூடெக் சமூக வழிப்படுத்தல் பிரிவின் அனுசரணையுடன் நியமிக்கப்பட்ட பிரதேச அலுவலரின் ஒத்துழைப்பை பெறுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ஓ-88)

---

### ஏழையெனக்கு அருள்வாயே!

பல்லவி

திருவடி பணிந்தேனே திருவண்ணை நகரீசா
குருவடி வாகவந்து குவலயம் போற்ற வைப்பாய்.

அனுபல்லவி

வருமடியார்கள் வினை தீர்த்திடுமெம் ஐயனே!
பெருமடியார்கட்கெல்லாம் அருளிய மெய்யனே! (திரு)

சரணம்

கருத்தினில் உனை வைத்துப் பத்திகொண்டாடுகிறேன்
வருத்திடாதியுன் திருவருளீயாயோ!
தருமிப் புலவனுக்காய் நற்சங்க மேறினாயே!
கருமி ஏழை யெனக்குன் குரலருளீவாயே! (திரு)

- தேவார இசைமணி நே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தன்.

(வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய பதினான்காம்நாள் திருவிழா இன்று)

## பிறந்த நாள் வாழ்த்துக்கள்
13.03.2003




செல்வன் ஆ.எமானுவல்ராஜ்
செல்வன் ஆ.டயான்ராஜ்

A.G.A. லேன், உடுவில், சுன்னாகத்தைச் சேர்ந்த ஆனந்தராஜ- மேரி.அனிதா தம்பதிகளின் செல்வப் புதல்வர்களான எமானுவல்ராஜ் தனது 11 ஆவது பிறந்த நாளையும் டயான்ராஜ் தனது 5 ஆவது பிறந்த நாளையும் இன்று (13.03.2003) வியாழக்கிழமை தமது இல்லத்தில் வெகுசிறப்பாகக கொண்டாடுகிறார்கள். இவர்களை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, சின்ன மாமா, ஆசைமாமா, ஜெனோவா சித்தி மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் உடுவில் புனித செபமாலை மாதாவின் ஆசீர்வாதத்துடன் பல்கலையும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

A.G.A. லேன், உடுவில், சுன்னாகம். (15423)

தகவல்:
திரு.திருமதி ஆனந்தராஜ மேரி அனிதா



## G.A.Q. - 2004 பேராதனை

☆ மேற்குறிப்பிட்ட பட்டபாடநெறிக்கு பேராதனைப் பல்கலைக் கழகத்தினால் பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
☆ இதற்குரிய பல்கலைக்கழகப் பதிவுகள் 10.03.2003 இல் இருந்து ஏற்கப்படுகின்றன.
☆ இதற்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகியுள்ளன.
☆ யாழ்.பல்கலைக்கழகத்திற்குரிய (புதிய பிரிவு) விரிவுரைகளும ஆரம்பமாகியுள்ளன.

விபரங்களுக்கு:

S.அருள்நங்கை
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(15437)


# இரண்டு தடவைகள் வாக்குமூலம் கொடுத்துவிட்டேன் இராணுவத்திடமிருந்து இன்னும் ஒரு பதிலும் இல்லை

## (மிருசுவில் படுகொலை வழக்கில் சாட்சி தெரிவிப்பு)

கொழும்பு, மார்ச் 13

2001ஆம் ஆண்டு டிசெம்பர் 19ஆம் திகதி மிருசுவிலில் இடம்பெற்ற சம்பவத்தை அடுத்து இராணுவத்திற்கு இரண்டு தடவைகள் வாக்குமூலம் கொடுத்து விட்டேன் ஆனால், சம்பவம் குறித்து அவர்கள் எந்தப் பதிலும் தரவில்லை.

மிருசுவில் படுகொலைகள் வழக்கு விசாரணையின்போது தொடர்ந்து சாட்சியமளித்த பொன்னுத்துரை மகேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற விசாரணையின்போது எதிரிகள் சார்பில் ஆஜராகியிருக்கும் சட்டத்தரணி அனில் சில்வா சாட்சியை குறுக்குவிசாரணைசெய்தார்.

கேள்வி: 2001ஆம் ஆண்டு டிசெம்பர் 19ஆம் திகதி இடம்பெற்ற இந்தச் சம்பவத்திற்குப் பின் நீர் வீட்டை விட்டு வெளியே எங்கும் செல்லவில்லையா?

பதில்: ஆம். செல்லவில்லை.

கேள்வி: டிசெம்பர் 20ஆம் திகதி உமது வீட்டிற்கு யாரும் வந்தார்களா?

பதில்: வந்தார்கள்.

கேள்வி: யார் வந்தார்கள்?

பதில்: ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள்.

கேள்வி: ஏன் வந்தார்கள்?

பதில்: மந்திகை வைத்திய சாலைக்கு என்னை அழைத்துபோக வந்தார்கள்.

கேள்வி: மந்திகை வைத்திய சாலையில் எத்தனை நாள்கள் இருந்தீர்?

பதில்: ஒரு நாள். 21ஆம் திகதி வைத்தியசாலையை விட்டு வெளியேறினேன்.

கேள்வி: டிசெம்பர் 21ஆம் திகதி யாரேனும் உங்கள் வீட்டிற்கு வந்தார்களா?

பதில்: ஆம்.

கேள்வி: யார் வந்தார்கள்?

பதில்: இராணுவப் பொலீஸார்.

கேள்வி: ஏன் வந்தார்கள்?

பதில்: சம்பவம் நடந்த இடத்தை தமக்குக் காட்டுமாறு என்னை அழைத்துச் சென்றனர்.

கேள்வி: அவர்கள் உம்மோடு கதைத்தார்களா?

பதில்: அவர்களில் ஒருவர் தமிழ் தெரிந்தவர். அவர் என்னோடு தமிழில கதைத்தார்.

கேள்வி: டிசெம்பர் மாதம் 19ஆம் திகதி உம்மோடு விறகுவெட்ட வந்தவர்களில் எவரையேனும் வெட்டுவதையோ அல்லது குத்துவதையோ நீர் கண்களால் பார்த்திருந்தீரா?

பதில்: இல்லை.

கேள்வி: சம்பவம் நடந்த தினத்தன்று நீர் வீட்டிற்கு வந்தபோது உமது சித்தப்பா எங்கேயென்று சின்னம்மா கேட்டாரா?

பதில்: ஆம். கேட்டார்.

கேள்வி: நீர் என்ன சொன்னீர்?

பதில்: இராணுவம் பிடித்து வைத்திருக்கிறது விட்டுவிடுவார்கள என்றேன். விசாரணை நேற்று ஒத்தி வைக்கப்பட்டது

(ஐ)

# யுவதியிடம் சில்மிஷம் புரிந்த சிவில் உடையினருக்கு அடி உதை!

## இராசாவின் தோட்டத்தில் சம்பவம்

கொழும்புத்துறை, மார்ச் 13

மோட்டார் சைக்கிளில் சிவில் உடையில் மதுபோதையுடன் வந்த இருவர் தனியே சென்ற யுவதியுடன் சில்மிஷம் புரிய முற்பட்டனர். இதனைக் கண்ட பொதுமக்கள் அந்த இருவரையும் பிடித்து நையப் புடைந்தனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை யாழ்.இராசாவின் தோட்டம் பகுதியில் இடம்பெற்றது.

தனியார் கல்வி நிலையத்தில் வகுப்பு முடிந்த பின்னர் குறிப்பிட்ட யுவதி சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்ததாகவும் - அப்போது எதிர்ப்புறத்திலிருந்து மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் யுவதியுடன் சில்மிஷம் புரிய முயற்சித்ததாகவும்-


அச்சமுற்ற யுவதி அபாயக் குரல எழுப்பவே அப்பகுதிப் பொது மக்கள திரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த இருவரையும் மடக்கிப் பிடித்ததாகவும் -

கூறப்படுகிறது.

அவர்கள் இருவரும் மதுபோதையில் காணப்பட்டனர். ஆத்திரமுற்ற சிலர் அவர்களை நையப்புடைத்து விசாரித்தனர். விசாரணையின் போது அந்த இருவரும் சிங்கள மொழியில் பேசியதாகவும் -

சீருடையின்றி சிவில் உடையில் வந்த அவர்களின் பணி அடையாள அட்டைகளும் பரிசோதிக்கப்பட்டதாவும் -

கூறப்படுகிறது. (ஓ-30)


## Canadian College of Business & Computers

130 Bloor St, West , Suite 901 Toronto, Ontario, Canada, M5S 1N5 Phone 1-416413-1234 Fax: 1-416-413-0314 e-mail: roselyn@ccbc.ca

**An opportunity to be a part the world's next trillion-dollar industry!**

Fiber Optics Engineering at CCBC is suppored by Ontario Photonics Education and Association (OPETA), a think tank comprising of the best academic minds of Canda's Universities and internationally reowned industry leaders like JDS Uniphase.

All in Toronto! A Trendy, upscale and a very cool place to learn. Supported by intensive English language programs, guidance counsellors specialized in on-the-job training with 10-start dates throughout the year.

**Scholarship Application Requirements**

1. Passport Copy
2. Birth Certificate
3. Educational Certificates / Transcripts
4. Employment Letter, if any
5. Fee of US $10 by Demand Draft in favour of "Canadian College of Business & Computers"
6. Proof of sufficient funds for tuition payment and living expenses; (estimated tuition fees: US $1,500 to US $8,000 depending on scholarship awarded; living expenses for two years - US $10,000)

Aptitute Test and Interviwe:
March 22 and 23
Location: BMICH, Colombo 07

**Scholarship Application Submission Deadline**

March 21, 2003
Ms. Anushya
Ceylinco Consultancy & Allied Services
315, R.A. De Mel Mawatha, Colombo 03
Tel 074-710240

WWW.CCBC.CA



## 18 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



## செல்வன் துரைசிங்கம் சரவணன்துரை

(மாணவன் - அச்சுவேலி மத்திய கல்லூரி)

அன்னையின் மடியில் 27.04.1971

ஆண்டவன் அடியில் 13.03.1985

குடும்பத்தின் பெயர் விளங்க குலமகனாய் உதித்த நீ!
பதின்னான்கு ஆண்டுகள் பதியினிலே வாழ்ந்த நீ!
விதியினால் எமைப் பிரிந்து விண்ணகத்தில் வாழ்கின்றாய்!
கதியிழந்து வாழ்கிறோம் காலமெல்லாம் உனை நினைத்து!

அப்பா, அம்மா,
அம்மம்மா, பெரியம்மா குடும்பத்தினர்,
உறவினர்கள்.

'திருச்செந்தூர்'
நாவலம்பதி, அச்சுவேலி.

வனிலா சுவையூட்டப்பட்டது

# Action


Nutritional Food Drink

போஷாக்கு நிறைந்த பானம்

**பிள்ளைகள்**
சக்தி, புரதம், கல்சியம்,
இரும்புச்சத்து, விட்டமின் B,
மற்றும் ஏனைய அத்தியாவசிய்
போஷனைகள்.



**வாலிபர்**
சக்தி, புரதம், கல்சியம்,
இரும்புச்சத்து, சின்க்,
மற்றும் ஏனைய அத்தியாவசிய
போஷனைகள்.



**வயது வந்தவர்கள்**
புரதம், கல்சியம், இரும்புச்சத்து,
சின்க், அன்டி ஒக்ஸிடன்
மற்றும் ஏனைய அத்தியாவசிய
போஷனைகள்.



**கர்ப்பிணி / பாலூட்டும் தாய்மார்கள்**
சக்தி, புரதம், கல்சியம்,
(ƒ)போலிக் அமிலம், விட்டமின் B12,
இரும்புச்சத்து, மற்றும் ஏனைய
அத்தியாவசிய போஷனைகள்.



**போஷாக்கின் வாழ்க்கை வட்டம்.**

27 அத்தியாவசிய போஷனைப்பதார்த்தங்கள்


தகுந்த சின்க் இரும்புச்சத்து விகிதம்.

தகுந்த கல்சியம் பொஸ்பரசு விகிதம்

**வயோதிபர்**
புரதம், விட்டமின் B,
அன்டி ஒக்ஸிடன் மற்றும்
ஏனைய அத்தியாவசிய
போஷனைகள்.



450 கிராம்
ரூ. 380/=




Manufactured by :

Astron

**Astron Limited,**
688, Galle Road, Ratmalana, Sri Lanka.
Tel: 636741 Fax: 636173
E-mail: astron@astron.lk

13-03-2003

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



அச்சுவேலியைச் சேர்ந்த
திரு.திருமதி
பரமேஸ்வரன் - ஆனந்தசுரபி
தம்பதிகளின் செல்வப் புதல்வன்

### செல்வன் தனுஜன்

இன்று (13-03-2003) வியாழக்கிழமை தனது முதலாவது பிறந்தநாளை அச்சுவேலியில் உள்ள பெரியம்மாவின் (பல்லசுப்பிரமணியம் டாக்டர்) இல்லத்தில் மிகவும் சிறப்பாக கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, பிரான்ஸிலுள்ள அப்பம்மா, அச்சுவேலியில் வசிக்கும் பாலா பெரியப்பா (டாக்டர்), வசிப்பெரியம்மா, துசி அக்கா, குரு அண்ணா, லச்சிகா அக்கா, லண்டனில் வசிக்கும் மகேந்திரன் சித்தப்பா (எக்கவுண்டன்), றுபி சித்தி, நிஷா அக்கா, பிரான்ஸில் வசிக்கும் தாமரைச்செல்வி அத்தை, ஈஸ்வரன் மாமா, சோபிகா மச்சாள், துவாரகா மச்சாள், சுவர்ணா மச்சாள் மற்றும் அன்பின் தாத்தா, அம்மம்மா, மாமா, பெரியம்மா, அன்ரா, கனகேஸ் அத்தை, நிசா மச்சாள், மச்சான், ரோஜா மச்சாள் மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் பிள்ளையாரின் அருள்பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

**அன்பின் தாத்தா, அம்மம்மா, மாமா.**
(சிவராசா, சிவபாக்கியம், கருணாகரன்)

இராமலிங்கம் வீதி,
முடமாவடி, திருநெல்வேலி. (15507)

## பாராட்டும் வாழ்த்தும்

கொடிகாமம் வடக்கு J/326 கிராம அலுவலர்

**சுப்பிரமணியம் தங்கமயிலோன்**

அவர்கள் தரம் 1இற்கு பதவி உயர்வு பெற்றதையிட்டு உளமார வாழ்த்துகின்றேன். மேலும் அவர் காலநேரம் பாராது என்றும்போல் மக்களிற்குத் தொடர்ந்து சேவை செய்து சிறப்போடு நீண்டகாலம் வாழ இறைவனை இறைஞ்சுகின்றேன்.

நண்பன்
நாவலடி, கொடிகாமம். (C/26902) **செ.அமரசேகரம்.**

## நிமால் கொலை வழக்கு: சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு!

யாழ்ப்பாணம்,மார்ச்13

பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை வழக்கு சந்தேக நபர்களில் கே.சிந்துபரன், கராளசிங்கம் ஜெகதீஸ்வரன் ஆகிய இருவரையும் எதிர்வரும் 25ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்குமாறு யாழ்.மாவட்ட நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்.

இவர்கள் இருவரும் நேற்றுமுன் தினம் யாழ் நீதிமன்றில் ஆஜர் செய் யப்பட்டனர். பிணையில் விடப்பட் டுள்ள மற்றைய சந்தேக நபர்கள் இரு வருடன் இந்த இருவரையும் சேர்த்து எதிர்வரும் 28ஆம் திகதி மீண்டும் நீதிமன்றத்தில் முன்னிறுத்துமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (ஓ-4)

## சிவப்பிரகாச வித்தியாலய பவள விழா

சண்டிலிப்பாய், மார்ச்13

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் நிறுவப்பட்டு 75வரு டங்கள் நிறைவு பெறுவதை முன் னிட்டு எதிர்வரும் ஜூன் மாதம் 20ஆம், 21ஆம் திகதிகளில் பவளவிழாவை நடத்துவது என்று மகாவித்தியாலய அபிவிருத்தி சங்கம் தீர்மானித்துள் ளது.

இவ்விழாவில் பழைய ஆசிரியர் கள், அதிபர்கள் கௌரவிக்கப்பட வுள்ளதுடன் பவளவிழா மலர் ஒன்றும் வெளியிடப்படவுள்ளதாக வித்தியா லய அதிபர் ச.கைலாசநாதன் தெரிவித்தார். (ஓ-135)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து
13-03-2003

HAPPY BIRTHDAY



### செல்வி தவறூபன் சாதுர்ஜா

ஜேர்மனியில் வசிக்கும்
**தவறூபன் - தவமதி** தம்பதிகளின் செல்வப் புதல்வி

**செல்வி சாதுர்ஜா**

தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று (13.03.2003) வியாழக்கிழமை ஜேர்மனியில் உள்ள தனது இல்லத்தில் மிகவும் குதூகலமாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, வடலியடைப்பைச் சேர்ந்த அப்பப்பா, அப்பம்மா, அத்தை - தனுஜா, செருக்கப்புலம், சுழிபுரத்தைச் சேர்ந்த அம்மம்மா, திருகோண மலையில் இருக்கும் மாமா - ஜெயறூபன், அத்தை - சிந்துஜா ஆகியோர் அம்மன் அருள்பெற்று நீடூழி காலம் சிறப்பாக வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு. (15510)

தகவல்:
**தவராசசிங்கம்** (அப்பப்பா).

# உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

## உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

**தினம் ஒரு பரிசு - 32**

நாளை (14.03.2003) நடைபெறும் இந்தியா - நியூஸிலாந்து ஆட்டத்தில் வெல்லப்போவது யார்?

[ ]

முழுப்பெயர் : ..........................................
முகவரி : ..........................................
அ. அட்டை எண்: ..........................................

இக்கேள்விக்கான விடையை இதே கூப்பனில் எழுதி நாளை (14.03.2003) நண்பகல் 1மணிக்குள் தினம் ஒரு பரிசு - 32, உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபாலில் அனுப்பலாம் அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியில் நேரில் சேர்க்கலாம். உடனே விரையுங்கள்.

உதயன்



'அருணஸ்' பரிசுக் கூப்பன்களை வெல்வதற்கான கேள்விகள் விரைவில்

முதற் பரிசு
மைக்கிறோ பிசி தரும்
கணனி



2ஆம் பரிசு
சிங்கர் நிறுவனம் தரும்
தொலைக்காட்சி

SuperSix பரிசு
ஜூமாரா நிறுவனம் தரும்
சைக்கிள்கள்

விசேட பரிசுகள்
அருணஸ் ஸ்போட்ஸ் ஸ்பொட்டின்
கூப்பன்கள்



3ஆம் பரிசு
ஷார்ப் நிறுவனம் தரும்
வானொலி

தினம் தினம் ஒரு பரிசு
ஏசியன் நிறுவனம் தரும்
கழிவுக் கூப்பன்கள்

ஆறுதல் பரிசுகள்
எக்ஸ்போ நிறுவனம் தரும்
விமான
ரிக்செட்டுக்கள்

## உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

கிரிக்கெட் உலகக் கிண்ணம் - 2003

**மாபெரும் இறுதிப் போட்டி**

1. இறுதியில் கிண்ணத்தை வெல்லப்போகும் அணி எது?
(..............................)
2. இறுதியாட்டத்தின் ஆட்டநாயகன் யார்?
(..............................)

**உதயன்** 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
முடிவு திகதி: மார்ச் 15

முழுப்பெயர் : ..........................................
முகவரி : ..........................................
அ.அட்டை எண்: ..........................................

**தினம் தினம் ஒரு பரிசு:**

ஆட்டம் நடைபெறும் நாளுக்கு முதல் நாள் கேட்கப்படும் கேள்விக்கு நீங்கள் விடையளிக்க வேண்டும். சரியான விடை எழுதுபவருக்கு ஏசியன் நிறுவனம் வழங்கும் 1000ரூபாவுக்கான 50கழிவுக் கூப்பன் கிடைக்கும்.

**விசேட பரிசுக் கூப்பன்கள்:**

முக்கிய ஆட்டங்களின்போது மேலதிகமாக ஒரு கேள்வி கேட்கப்படும். அதில் வெல்லும் அதிர்ஷ்டசாலிக்கு அருணஸ் ஸ்போட்ஸ் பொட் வழங்கும் 500 ரூபா பெறுமதியான பரிசுக் கூப்பன் கிடைக்கும்.

**மாபெரும் இறுதிப் போட்டி:**

இது பெரும் பரிசுகளைக் கொண்டது. வெல்லும் 3 அதிர்ஷ்டசாலிகள் 1ஆம், 2ஆம், 3ஆம் பரிசுகளைப் பெறு வர். ஆறுதல் பரிசுகளாக 10 இருவழி விமானப் பயண ரிக்கெட்டுக்கள் காத்திருக்கின்றன. இதற்கான முடிவு திகதி மார்ச் 15 ஆகும்.

**விதிகள்:-**

ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம், போட்டோப் பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா, அ.அட்டை பெறும் வயதுக்குக் குறைந்தவர்கள் பெற்றோரின் அ.அட்டை எண்ணைக் குறிப்பிடலாம், உதயன் மற்றும் உதயன் சார்ந்த நிறுவனங்களின் ஊழியர்கள், அவர்களது குடும்பத்தவர்கள் போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள், நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது, முடிவுகள் குறித்து எந்த விளக்கங்களுக்கும் தொடர்புகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா. அனைத்து முடிவுகளும் மார்ச் மாதம் 27ஆம் திகதிய உதயனில் அறிவிக்கப்படும்.

# படையினரின் நடவடிக்கையை கண்டித்து வேலணையில் வீதிமறியல் போராட்டம்

வேலணையில் கடற்படை முகாமிற்கு ஊடாகச் செல்லும் சுருவில், வங்களாவடி வீதியால் பயணித்த பொதுமக்கள் மற்றும் பாடசாலைககு செல்லும் அதிகாரிகள் அண்மையில் தடுத்து வைக்கப்பட்டதை ஆட்சேபித்தும், இந்த வீதி போக்குவரத்துக்கு அடிக்கடி மூடப்படுவதைக் கண்டித்தும் வெகுசனப் போராட்டம் ஒன்று நடத்தப்பட உள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

வேலணைப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை மதியம் திடீரென ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடலிலேயே போராட்டத் தீர்மானம் ஏகமனதாக எடுக்கப்பட்டது.

தீவகத்தின் வெகுசன ஒன்றியப் பிரதிநிதிகள் தீவக நலன்காப்புக் கழகத்தினர், அரச நிறுவனங்களின் அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், கூட்டுறவாளர்கள், ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

கல்வித் தேவைகளின் நிமித்தம் வேலணை துரைசுவாமி ம.ம.வித்தியாலயம், சைவப்பிரகாச வித்தியாலயம் என்பவற்றின் அதிபர், ஆசிரியர்களை சந்திப்பதற்குச் செல்ல மாணவர்களின் பெற்றோர்கள் வீதியைப் பயன்படுத்துவது தடுக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லும், வீடு திரும்பும் நேரங்களைத் தவிர ஏனைய நேரங்களில் இந்தப் பாதையைப் பாவிக்க அனுமதிக்கப் படுவதில்லை. அத்துடன் மைதானத்தை பயன்படுத்தவும் தடைசெய்யப் பட்டுள்ளது.

மகாவித்தியாலய விடுதியில் தங்கி கல்விகற்க கடல் கடந்த தீவுகளைச சேர்ந்த மாணவர்கள் விரும்பியபோதும் விடுதியைப் பயன்படுத்த இயலாது உள்ளது.

பாடசாலை மேற்பார்வை, கட்டடப் புனரமைப்பு வேலைகளை பார்வையிடும் அதிகாரிகள் இந்த வீதித் தடுப்பு முகாமில், மணித்தியாலக் கணக்கில் அடிக்கடி தடுத்துவைக்கப்படுகின்றனர்.

போராட்டம் நடக்கும் பொழுது பாதையை திறந்துவிடுவதும், பின் தாம விரும்பிய போது இழுத்து மூடுவதும வழமையாகிவிட்டது. எனவே இந்த முகாம் இப்பகுதியில் இருந்து அகற்றப்பட வேண்டும்.

இல்லையாயின் இந்த அப்பட்டமான அடிப்படை உரிமை மீறல் தொடர்ந்து கொண்டே இருக்கும் இவ்வாறு கலந்துரையாடலில் சுட்டிக் காண்பிக்கப்பட்டது.

கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:-

★ எதிர்வரும் 17ஆந் திகதி திங்கட்கிழமை, கடற்படையினரின் உரிமை மீறல்களுக்கெதிராக, வெகுசன அமைப்புக்களும், பொதுமக்களும் ஒன்று சேர்ந்து காலை 9மணி தொடககம் வேலணை வீதிச் சந்திகளில் வீதி மறிப்புப் போராட்டத்தில் ஈடுபடுவர். வங்களாவடிச் சந்தி, வடக்கு 'றோட்'டில் அராலிச் சந்தி, சுருவில் வீதியில் சரவணைச் சந்தி மற்றும் துறையூர் வீதியில் டிப்போச் சந்தி என்பன மறிக்கப்படும்.

★ இந்த மறியல் போராட்டத்தில் பாடசாலை மாணவர்கள் ஈடுபட அனுமதிக்கப்பட மாட்டார்கள். அவர்கள் தங்களுக்கு இழைக்கப்படும் அநியாயத்தை வெளிப்படுத்த பாடசாலை வாசலில் அணிவகுத்து நின்று கண்டனத்தை தெரிவிக்க அனுமதிக்கப்படுவர்.

★ இதற்கிடையில் நாளை வெளளிக்கிழமை அல்லைப்பிட்டி சந்தியூடாக பயணம் செய்யும் அரச ஊழியர்களும் பொதுமக்களும் அங்கு தடுத்து விசாரணைக்குட்படுத்தப்படும் பொழுது தமது எதிர்ப்பைக் காட்டுவர்

★ மேலும் தடுக்கப்பட்டால் அதே இடத்தில் அமர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபடவேண்டும்.

(ஒ-88)

# சாயி சிந்தனை

## மனதுக்கு உணவளியுங்கள்



நாமஸ்மரணை என்பது பவித்ரமானது. விலை மதிக்க முடியாதது. உங்களுக்குள் இருக்கும் மாசுக்களைக் களையக்கூடியது. உங்களது எண்ணங்களை சத்தியமானவையாக மகிழ்ச்சிகரமானவையாக இருக்கும்படி செய்யக்கூடியது. எண்ணங்கள் மனித வாழ்க்கை முடிந்த பின்னும் இருக்கக்கூடியவை. ஆகவே, உங்களது எண்ணங்களைத் தூயதாக்கிக் கொள்ளுங்கள். ஏதோ வருடத்துக்கு ஒருமுறை இறைவனது திருப்பெயரை உச்சரிப்பது என்பது பயனற்றது. நீங்கள் வருடத்துக்கொருமுறையா உணவு உண்ணுகிறீர்கள்? இல்லையே! ஒரேநாளில் பலமுறை உண்ணுகிறீர்கள். நிரந்தரமற்ற தேகத்துக்கே இப்படி உணவளித்தால் மனதிற்கு ஆகாரம் அளிக்க வேண்டும் என்ற அக்கறை வேண்டாமா? இறை சிந்தனையே மனதிற்குத் தகுந்த உணவு. தேகத்திற்கு மட்டும் உணவளித்து விட்டு மனதிற்கு உணவளிக்காமல் விட்டால் மனம் பலவீனப்பட்டுப் போகிறது. குதிரை வண்டியை நன்கு "வர்ணம்" அடித்து அலங்காரம் செய்கிறீர்கள். ஆனால், குதிரைக்கு உணவளிக்க மறக்கிறீர்கள். வண்டியை இழுப்பது குதிரை அல்லவா? ஆகவே, குதிரைக்கும் உணவளிக்க வேண்டும். உடல் என்பது வண்டி என்றால் மனம் என்பது குதிரை. மனதிற்கும் உணவளிக்க வேண்டும். இப்பொழுது அனைத்தும் உடலுக்கே செய்கிறோம். நாமஸ்மரணயே நீங்கள் மனதிற்கு அளிக்கும் ஆகாரம். அதனை யாராலும் காணமுடியாது. எவராலும் திருடமுடியாது. அத்தகைய தெய்வீக சக்தி உங்களுக்குள் மறைந்துள்ளது. இதனைத் தெரிந்துகொள்ளாமல் நாம் நம் வாழ்க்கையை வீணாக்குகிறோம். பணத்துக்காக இவ்வளவு அலைகிறோமே. தெய்வத்துக்காக நீங்கள் அவ்வாறு அலைகிறீர்களா? இல்லை. இரவும் பகலும் அன்ன ஆகாரமின்றி பணத்துக்காக அலைகிறீர்கள். ஒரு சிறிது நேரமாவது நாம் கடவுளுக்கு அர்ப்பணம் செய்யக்கூடாதா? ஆகவே, உடலுக்கு மட்டுமன்றி மனதுக்கும் உணவளியுங்கள்.

(ஆதாரம்:சனாதனசாரதி)

# தபாலகங்களுக்குத் தேவையான போதிய பற்றுச்சீட்டு புத்தகங்களை மின்சாரசபை இன்னும் வழங்கவில்லை!

## அஞ்சல் அத்தியட்சகர் தெரிவிப்பு

மின்சாரசபையில் போதியளவு பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் வழங்கப்படாமையால் தபாலகங்கள் மூலம் மின்சாரக் கட்டணம் அறவிடுவதில் பல தபாலகங்கள் நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக யாழ்.பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் ச.சிவராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

பல வருடங்களின் பின் மீண்டும் அஞ்சல் அலுவலகங்களில் மின்கட்டணங்களைப் பாவனையாளர்கள் கட்டுவதற்கு மின்சாரசபையால் அனுமதி அளிக்கபட்டுள்ளது. வங்கிகளில மின்கட்டணம் அறவிடுவதற்கு சேவைக் கட்டணம் அறவிடப்படுவதால் பொது மக்கள் பலரும் அலுவலகங்களை நாடி வந்து தமது மின்கட்டணங்களைச் செலுத்தி வருகின்றனர்.

குறிப்பாக கிராமப்புறங்களில் உள்ள உபதபாலகங்களில் அதிக எண்ணிக்கையானோர் மின்கட்டணங்களை செலுத்துகின்றனர். ஆனால், அவற்றை அறவிடுவதற்கான பற்றுச்சீட்டுப் புத்தகங்களை போதியளவில் மின்சாரசபை, அஞ்சல் அலுவலகங்களுக்கு வழங்கவில்லை. இதனால், உப தபாலகங்கள் பலவற்றில் இக்கட்டணங்களைச் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மின்சாரசபை வட்டாரங்களில் கேட்டபோது கையிருப்பிலிருந்த பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் ஏற்கனவே அஞ்சல் அலுவலகத்திடம் வழங்கப்பட்டுவிட்டதாகவும் - மேலும் பற்றுச்சீட்டுப்புத்தகங்கள் விரைவில் தயாரிக்கப்பட்டு அஞ்சல் அலுவலகங்களுக்கு வழங்கப்படும் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ-12)

# நம்பிக்கையை நலமாக்குவோம்

### துவக்காலச் சிந்தனை -ஒன்பதாம் நாள்-

ஜெயவதனி பூவிலிங்கம்

கேளுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள் நீங்கள் கண்டடைவீர்கள்; தட்டுங்கள் உங்களுக்கு திறக்கப்படும்' என்றார்.

ஆம் இறைவனை வருந்தி வேண்டும்போது, நாம் கேட்டது கிடைத்து விட்டால் அநேக தடவைகளில் நாம் இறைவனை மறந்து விடுகின்றோம். கேட்டது கிடைக்காதபோது நாம் இறைவனை நிந்திக்கின்றோம்.

இரண்டு சந்தர்ப்பங்களிலும் நாம் இறைவனை மறக்கின்றோம். ஆனால், இறைவன் அன்பானவர். தம்மிடம் கேட்பவருக்கு மிகுதியாய் நன்மைகள் வழங்குகிறார். நாம் நம்பிக்கையோடும் விசுவாசத் தோடும் இடைவிடாது கேட்போம். நன்றியுணர்வோடு கேட்போம்.

ஆம் கேட்கிறவன் பெற்றுக் கொள்கிறான் தேடுகிறவன் கண்டடைகிறான்

தட்டுகிறவனுக்கு திறக்கப்படுகிறது. ஆம். - "நம்பிக்கை நல மாக்கியது. உன் விசுவாசம் உன்னை குணமாக்கியது".

# சாரதி அனுமதிப்பத்திரத்துக்கான பரீட்சைத் திகதிகளில் மாற்றம்

யாழ்ப்பாணம்,மார்ச்13

சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான செயன்முறைப் பரீட்சையின் திகதிகள் மாற்றப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள யாழ். மாவட்ட அலுவலக உதவி ஆணையாளர் விபத்மநாதன் அறிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிவித்தலில் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது:-

மோட்டார் வாகனப் பரிசோதகர் எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு செயலகத்தில் நடைபெறவுள்ள நடமாடும் சேவையொன்றில் சமுகமளிக்க வேண்டியுள்ளது.

எனவே, இத்திணைக்களத்தில் சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதன் நிமித்தம் செயன்முறைப் பரீட்சைக்கு இன்று வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை சோதனைத் தினங்களை பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகள் தங்கள் செயன்முறைப் பரீட்சைக்கான மாற்றுத் திகதியை எதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் இத்திணைக் களத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றார்கள். (ஒ-5)

# அப்பன் குடியேற்றத் திட்டத்தில் மீளக்குடியமர வழிசெய்யுங்கள்!

## இடம்பெயர்ந்தோர் வேண்டுகோள்

கைதடி,மார்ச்13

நாவற்குழி அப்பன் குடியேற்றத் திட்டத்தில் தம்மை மீளக்குடியமர அனுமதிக்குமாறு அங்கிருந்து இடம் பெயர்ந்த மக்கள் கோரி வருகின்றனர். வறிய மற்றும் இடம்பெயர்ந்த மக்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் நோக்கில் 1990ஆம் ஆண்டு காலப் பகுதியில் விடுதலைப் புலிகளால் அப்பன் குடியேற்றத்திட்டம் ஏற்படுத்தப் பட்டது.

யுத்த நடவடிக்கைகள் காரணமாக பல்வேறு இடங்களில் இருந்தும் வெளி மாவட்டங்களில் இருந்தும் இடம் பெயர்ந்த சுமார் 300 குடும்பங்கள் இங்கு வசித்து வந்தன.

1996ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இராணுவம் தென்மராட்சிப் பகுதியைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த போது இக்குடும்பங்கள் அங்கிருந்து இடம்பெயரநேரிட்டது.

இவ்வாறு இடம்பெயர்ந்த மக்கள் வன்னி, வலிகாமம் ஆகிய பிரதேசங்களில் உள்ள அகதி முகாம்களிலும் மற்றும் உறவினர்களின் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

தற்போது புரிந்துணர்வு ஒப்பந்தம கைச்சாத்தாகி ஓராண்டு பூர்த்தியாகியுள்ள நிலையில், சமாதானச் சூழல் நிலவுவதால் அப்பன் குடியேற்றத்தில் மீளவும் குடியேறுவதற்கு இங்கிருந்த இடம்பெயர்ந்த குடும்பங்கள் விரும்புகின்றன.

எனவே, இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட அரச மற்றும் இராணுவ அதிகாரிகள் கவனஞ்செலுத்தி அங்கு மீளக குடியமர ஆவன செய்யவேண்டும் என்று பாதிக்கப்பட்ட மக்கள் தரப்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-6-75)


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 456 |
| திகதி | 11.03.2003 |

டிக்கட்டின் நிறம் - நீலம்

செல்லுபடியாகும் தொடர் இல. 4806694-4821453

வெற்றி இலக்கங்கள் 05 22 27 32

லக்கினம்

கன்னி



ஜக்பொட் பரிசு
ரூபா. 3,153,150/-
வெல்லப்படவில்லை

இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா 3,877,350/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1 இல | 324,339 | 10 | 3,243,390 |
| 2 இலக்கங்கள் | 29,808 | 20 | 596,160 |
| 1 இல + லக்கினம் | 29,469 | 30 | 884,070 |
| 2 இல + லக்கினம் | 2,676 | 100 | 267,600 |
| 3 இலக்கங்கள் | 791 | 500 | 395,500 |
| 3 இல + லக்கினம் | 70 | 5,000 | 350,000 |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | - | 3,153,150 | |
| மொத்தம் | 387,157 | - | 6,136,720 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 6,136,720/-

தொடர் இல. 5797453க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2003 மார்ச் 14ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33. சென்ற் மைக்கேல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விறியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பாரம்பரிக வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

4819746-5-24
4807911-2-25
4809891-4-68
4820458-6-60
4815657-7-60

## காணி விற்பனைக்கு

சேர் பொன். இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணத்தில் (பல் கலைக் கழகத்திற்கு அண்மையில்) அமைந்துள்ள 4 பரப்பு சுற்றுமதில், கிணறு ஆகிய வசதிகளைக் கொண்ட காணி விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இல.: 071- 320620

(சி-26927)

## புராணபடன விளக்கக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மார்ச்13

அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் நடத்தும் புராணபடன விளக்கக் கருத்தரங்கு எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (எ)

# அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்துக்கு சமசமாஜ, கம்யூ. ஆதரவைப்பெற முயற்சி

கொழும்பு,மார்ச்13

சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி. உட்பட ஏனைய எதிர்க்கட்சிகளுடன் இணைந்து எதிர்காலத்தில் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை நடத்த ஏற்பாடு செய்திருப்பதாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளரான டி.எம்.ஜயரத்ன தெரிவித்திருக்கிறார்.

ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும் இடங்கள், நாள்கள் குறித்து அக்கட்சிகளுடன் கூடிப்பேசி முடிவு செய்யப்படும் எனவும் அவர் கூறினார்.

சில தினங்களுக்கு முன்னர் கொழும்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொள்ளாத ஏனைய எதிர்க்கட்சிகளையும் இணைத்துக்கொள்வது குறித்து பேச்சு நடத்தப்படும் எனவும் - அப்பேரணியில் கலந்துகொள்ளாதது குறித்து சமசமாஜக் கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும் தெரிவித்திருக்கும் கருத்துக்கள் தொடர்பாக அக்கட்சிகளுடன் பேச்சு நடத்தப்படும் எனவும்- ஜயரத்த மேலும் தெரிவித்தார். (எ)

## மரண அறிவித்தல்

### கிட்டிணர் சின்னத்துரை (நடராசா)

*(ஓய்வுபெற்ற அலுவலகப் பணியாளர், யா/ஹாட்லிக் கல்லூரி)*

துன்னாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் துன்னாலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கிட்டிணர் சின்னத்துரை அவர்கள் 11.03.2003 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் சுசிலாதேவி, சாந்தாதேவி (லண்டன்), சித்திராதேவி (கனடா), உமாகாந்தன் (சுவிஸ்), மனோகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சுந்தரராஜ், ராதாகிருஸ்ணன் (லண்டன்), ரவீந்திரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் மாணிக்கம், சின்னமணி, தெய்வானை ஆகியோரின் சகோதரரும் நரேஸ், நிவேதா, சனுவிகா, துவாரகன், ஆதனி, விதுர்ஷன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.03.2003) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு மகள் திருமதி சு.சுந்தரராஜ் அவர்களின் இமையாணன் கிழக்கு, இமையாணனில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இமையாணன் கிழக்கு,*
*இமையாணன்.*

(C-26923)

தகவல்:
மனோகரன
(மகன்).

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### அமரர் நாகம்பிள்ளை மார்க்கண்டு

*(தைப்பூச அன்னதான சபை முன்னாள் தலைவர்)*

மலர்வு 15.08.1933 — உதிர்வு 11.02.2003

*என்றும் உங்கள் ஆத்மசாந்திக்காக சந்நிதிக் கந்தனைப் பிரார்த்திக்கிறோம்.*

இன்று (13.03.2003) வியாழக்கிழமை எமது இல்லத்தில நடைபெறும் அந்தியேட்டிக்கிரியையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன அழைக்கின்றோம்.

*அச்செழு வடக்கு,*
*நீர்வேலி.*

(15535)

தகவல்:
குடும்பத்தினர்.

## கப்பல் தாக்கப்பட்டது....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுற்றுத்தான் பேச்சு நடந்துள்ளது. இந்த ஐந்து சுற்றுப் பேச்சுக்களைப் பொறுத்தவரையில் பாரிய திருப்பங்கள் ஏற்பட்டுள்ளன. ஐம்பது வருட போராட்டத்திலும் பார்க்க கடந்த ஐந்து மாதத்தில் நடந்த பேச்சுக்களில் முக்கிய திருப்பம் என்றால், அது உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் ஓர் அரசியல் தீர்வை பரிசீலிக்கத் தயாராக இருப்பதாக புலிகள் தெரிவித்ததன் அடிப்படையில் அரசியல் விவகார குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளமைதான்.

சமஷ்டிமுறை உள்ள நாடுகளுக்கு சென்று ஆராய்கின்றோம். உருப்படியாக ஏதோ செய்கின்றோம். ஆனால் ஏமாற்றவில்லை.

*கேள்வி:* இன்றைய அரசு கலைக்கப்பட்டு புதிய அரசு வந்தால் அந்த அரசுடன் பேசுவீர்களா?

*பாலா:* அரசுகளில் மாற்றம் ஏற்பட்டால் யார் அதிகாரப் பீடத்துக்கு வருவார்கள் என்பதில் அது தங்கியுள்ளது. சமாதானத்தை விரும்புவர்கள் - புலிகளுடன் பேச்சு நடத்தி தீர்வு காணவிரும்புபவர்கள் - ஆட்சிக்கு வந்தால் நாங்கள் அவர்களுடன் பேசத் தயாராக இருக்கின்றோம்.

புலிகளுக்கு விரோதமான, சமாதானத்துக்கு முரண்பட்டவர்கள் - உதாரணமாக ஜே.வி.பி.போன்ற சக்திகள் - ஆட்சிக்கு வந்தால் சமாதானத்தை தொடர்ந்து மேற்கொள்வது கடினமாக இருக்கும். ஒரு தேர்தல் வந்தாலோ, ஆட்சி மாற்றம் வந்தாலோ உடனே போர்நிறுத்தத்தை கைவிட மாட்டோம். போர்நிறுத்தத்தை இறுக்கப் பிடித்துக்கொண்டு ஆட்சியில் வருபவர்கள் என்ன நிலைப்பாட்டை எடுக்கிறார்கள் என்பதைப் பார்த்து, அவர்கள் போர் தான் வழி என்று நினைத்து போரைத் தொடங்கினால் நாங்கள் தவிர்க்க முடியாமல் போர்ப் பாதைக்குச் செல்வதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை.

*கேள்வி:* மக்களின் வாழ்வில் இயல்பு நிலையைக் கொண்டு வர என்ன தடைகள் உள்ளன?

*பாலா:* இயல்பு நிலையை உருவாக்குவதற்குத் தடையாக இருப்பது படைகள்தான். இங்கு சமாதான சூழல தோன்றியிருக்கு. ஆனால், இயல்பு நிலை தோன்றவில்லை. யுத்தநிறுத்தத்தை நிலையாக வைத்திருக்கவும் சமாதானப் பேச்சுக்களை தொடர்ந்து நடத்தவும் இயல்பு நிலை அவசியமானது.

இயல்புநிலை தோன்றுவதாயின், இராணுவம் தனது ஆக்கிரமிப்பை தளர்த்த வேண்டும். அதாவது, மக்களின் வாழ்விடங்களில் இருந்து விலக வேண்டும். வடக்கு - கிழக்கில் இருந்து படைகளை விலகும்படி நாம் கேட்கவில்லை. மக்கள் மீளக்குடியமர இடம் வழங்குங்கள் என்றுதான் கேட்கின்றோம். மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர அனுமதி மறுப்பது அவர்களின் அடிப்படை உரிமையை மீறும் செயல்.

இயல்புநிலை வராமைக்குக் காரணம் ஆயுதப்படைகள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆயுதப்படைகளை அவ்வளவு இறுக்கமாக வைத்திருப்பதற்கு ஜனாதிபதி காரணம். ஜனாதிபதியும் ஆயுதப்படைகளும் அவர்களின் குறுட்டுத்தனமான நிலைப்பாடும்தான் இயல்பு நிலை தோன்றாததற்கு காரணம். இந்த அரசு கபடம் அற்ற முறையில் இயல்பு நிலையைத் தோற்றுவிக்க விரும்பினாலும் ஜனாதிபதியும் ஜனாதிபதியின் கட்டளையைப் பின்பற்றும் ஆயுதப்படையின் சில பிரிவுகளும் இயல்பு நிலைக்கு எதிராகச் செயற்படுவதால் எதுவும் செய்யமுடியாதுள்ளது.(ம-3)

## ஆன்மீக முகாம்

இளைஞர், யுவதிகளுக்கான

**"உன்னால் முடியும் - நம்பு"**

14.03.2003 தொடக்கம்
18.03.2003 வரை

இடம்: ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்

ஆச்சாரியார்: பிரம்மச்சாரி ரமண சைதன்யா சுவாமிகளின வழி நடத்தலில் நடத்தப்படுகிறது.

விண்ணப்பதாரர் 13.03.2003 பி.ப. 4மணிக்குமுன் ஆலய கர்ம பீடத்தில் தமது பெயர்களைப் பதிவுசெய்துகொள்ளவும்.

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்
- தர்மகர்த்தா சபை.

(15539)

# முக்கிய அறிவித்தல்

## பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ – து) பளை

### கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான கிளைப் பொதுச் சபைக் கூட்ட அறிவித்தல் - 2003

மேற்படி சங்கத்தின் கிளைகளுக்கான கிளைக் குழுக்களைத் தெரிவு செய்வதற்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் கீழ்க் குறிப்பிட்ட விவரப்படி நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

**திகதி : 22.03.2003 சனிக்கிழமை**
**நேரம் : முற்பகல் 10.00 மணி**

| தொடர் இல. | கிளை இல. | கிளையின் பெயர் | கிளைப் பொதுக்கூட்டம் நடைபெறும் இடம |
|---|---|---|---|
| 01 | 01 | பளை | தலைமைச் செயலகம், பளை. |
| 02 | 02 | மாசார் | மாசார் கிளை நிலையம். |
| 03 | 03 | முள்ளிப்பற்று | கிளி/இயக்கச்சி அ.த.க.பாடசாலை, இயக்கச்சி. |
| 04 | 04 | சோரன்பற்று | கிளி/சோரன்பற்று கணேசா வித்தியாலயம், சோரன்பற்று. |
| 05 | 05 | புலோப்பளை | கிளி/புலோப்பளை றோ.க.த.க.பாடசாலை, புலோப்பளை. |
| 06 | 06 | இத்தாவில் | கிளி/வேம்பொடுகேணி சி.சி.த.க.பாடசாலை, பளை. |
| 07 | 10 | புலோப்பளை கிழக்கு | கிளி/புலோப்பளை றோ.க.த.க.பாடசாலை, புலோப்பளை. |
| 08 | 11 | அல்லிப்பளை | கிளி/புலோப்பளை றோ.க.த.க.பாடசாலை, புலோப்பளை. |
| 09 | 12 | கச்சார் வெளி | தலைமைச் செயலகம், பளை. |
| 10 | 13 | தம்பகாமம் | தலைமைச் செயலகம், பளை. |
| 11 | 14 | சாங்கத்தார்வயல் | கிளி/இயக்கச்சி அ.த.க.பாடசாலை, இயக்கச்சி. |

**திகதி : 23.03.2003 ஞாயிற்றுக்கிழமை**
**நேரம் : முற்பகல் 10.00 மணி**

| தொடர் இல. | கிளை இல. | கிளையின் பெயர் | கிளைப் பொதுக்கூட்டம் நடைபெறும் இடம |
|---|---|---|---|
| 01 | 07 | முகமாலை | கோண்டாவில் கிளை நிலையம் |
| 02 | 09 | கிளாலி | மிருசுவில் உப தபால் அலுவலகக் கட்டடத்திற்கு அருகாக உள்ள கட்டடம். |

குறிப்பு : 1) இக்கிளைக் குழுக்கள் தெரிவு சம்பந்தமான மேலதிக விவரங்களை சங்கத்தின் தலைமை அலுவலகத்திலும், சம்பந்தப்பட்ட கிளை நிலையங்களிலும் பார்வையிடலாம்.

2) சங்கத்தின் வாக்களிக்கத் தகுதியுள்ள அங்கத்தவர்கள் பூரணமாக மீளக் குடியமராத காரணத்தால் தனித்தனி அறிவித்தல் வழங்கப்படவில்லை. எனினும், சம்பந்தப்பட்ட கிளைகளிலும் தலைமை அலுவலகத்திலும் பொது அறிவித்தல் மூலமாக இது சம்பந்தமான விவரங்களைப் பார்வையிடலாம்.

சி.சுந்தரலிங்கம்
தலைவர்

பொ.வதனி
ஒப்பம் செயலாளர்

பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.சங்கம்,
பளை.
12.03.2003

(சி-26925)

புலிகளின் கப்பல் தாக்கப்பட்ட சம்பவம்:

# கண்காணிப்புக்குழுவின் இரு குழுக்கள் ஆராய்வு; இரு வாரங்களிலேயே இறுதி அறிக்கை

கொழும்பு,மார்ச்13

விடுதலைப் புலிகளின் கப்பலை கடற்படையினர் தாக்கி அழித்த சம்பவம் குறித்து இறுதி மதிப்பீடு அறிக்கையைச் சமர்ப்பிக்க இரு வாரங்கள் செல்லும் என்று போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவிக்கின்றது.

இச்சம்பவம் குறித்து கண்காணிப்புக்குழுவின் இரு குழுக்கள் மதிப்பீடுகளை மேற்கொள்வதில் ஈடுபட்டிருக்கின்றன என்று கண்காணிப்புக்குழுவின் பிரதித் தலைவரான ஹெறாக்லண்ட் கூறுகிறார்.

இரு குழுவினரும் ஏற்கனவே கடற்படை உயர் அதிகாரிகள், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் ஆகியோருடன் பேச்சு நடத்தியிருக்கின்றனர் எனவும், அடுத்துவரும் நாள்களிலும் அவர்கள் இப்பேச்சுக்களைத் தொடருவர் எனவும் அவர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

இதற்கிடையே, புலிகளின் கப்பலைத் தாக்குவதில் ஈடுபட்ட கடற்படையின் 'சயுர' என்னும் போர்க் கப்பலை கண்காணிப்புக் குழுவின் திருகோணமலைப் பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் மாலை பரிசோதனைக்கு உட்படுத்தினர்.

அப்பரிசோதனையின் போது கப்பல் மீது பல சூடுகள் விழுந்திருப்பதை அவதானிக்க முடிந்திருக்கிறது எனவும் குறிப்பிட்ட ஹெறாக்லண்ட், எவ்வாறாயினும் இந்த மதிப்பீடுகளை முடித்து இறுதி அறிக்கையைச் சமர்ப்பிக்க இன்னும் இரு வாரங்கள் செல்லும் எனவும் தெரிவித்திருக்கிறார். (ஐ)

# தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பணம் கொள்ளை!

மஸ்கெலியா,மார்ச்13

மஸ்கெலியா லெமன்மோர் தனியார் தோட்ட மேற்பார்வையாளர் எடுத்துச்சென்ற தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பணம் கொள்ளையடிக்கப்பட்டது.

கினிக்கத்தேன மக்கள் வங்கியில் இருந்து ரூபா 68ஆயிரத்தை எடுத்துக்கொண்டு தனது மோட்டார் சைக்கிளில் மேற்பார்வையாளர் சென்றபோதே இக்கொள்ளை கடந்த 10ஆம் திகதி நடந்தது.

தோட்டத்துக்குச் சமீபமாக உள்ள வீதியில் கற்களைப் போட்டு மோட்டார் சைக்கிளை மறித்து மூன்று இளைஞர்கள் கத்தியைக் காட்டிப் பயமுறுத்தி பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இது சம்பந்தமாக தோட்ட மேற்பார்வையாளர் தயான் குணவர்த்தன, மஸ்கெலிய பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி சூலனி வீரரட்ணவின் தலைமையிலான பொலீஸார் புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# தென்னாபிரிக்க...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. அதன்படி தமது கிரிக்கெட் அணியிலும் கறுப்பின வீரர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கவேண்டும் என்பதற்காக இட ஒதுக்கீட்டு முறை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.

"கறுப்பு மற்றும் வெள்ளை இன கிரிக்கெட் வீரர்கள் இம்முறையை ஏற்றுக்கொள்ளப் பழகிக்கொள்ள வேண்டும். இத்தகைய ஒரு சூழலில் வெற்றிகரமாக எப்படி இயங்குவது என்பதை அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும்" - என்றார் ஓமர் ஹென்றி.

ஹேர்ஷெல் கிப்ஸ், மகாயா நிற்னி, ரொபின் பீற்றர்சென் கார்ல் லேங்கிவெல்ட், ஜொன்டேகி ஆகியோர் இப்போது அணியில் இருக்கும் வெள்ளையினத்தவரல்லாத வீரர்களாவர். இட ஒதுக்கீட்டின் காரணமாக இவர்களுக்கு, அணியில் இடம் வழங்கப்பட்டபோது சிலரின் தேர்வு குறித்து கடும் விமர்சனங்கள் எழுந்தன.

"தென்னாபிரிக்கா படுமோசமாக தோற்ற இந்த உலகக் கிண்ணத் தொடரில் கிப்ஸ் மற்றும் நிற்னி ஆகிய இருவர் மட்டுமே தேறினார்கள்" - என்று ஓமர் மேலும் கருத்துத் தெரிவித்தார். (ம)


யாழ்.போதனா வைத்தியசாலை சிற்றுண்டிச்சாலை
பணியாளர் தேவை

01) எழுதுநர் (பெண்)
02) உணவு பரிமாறுபவர்
03) தேநீர் தயாரிப்பாளர்

உடன் தொடர்புகொள்ளவும்.

(15543) நிர்வாகி.

ராஜா யாழ்ப்பாணம்
காசி புகழ் விக்ரம், லைலா, விவேக், வையாபுரி, நாசர்
தில் (ரீல்ஸ்)
10.30, 2.30, 6.30 மட்டும்
U 571
இன்று மட்டும் இரவு 9.10

நிறைஞ்சனாஸ்
பிரபு, வைஜெந்தி நடித்த
வண்ணத்தமிழ் பாட்டு
காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
ஜக்கிஜான் நடித்த
RUSH HOUR - 2

லக்சுமி இணுவில்
இளைய தளபதி விஜய், சிம்ரன் நடித்த
பகவதி
தினசரி மூன்று காட்சிகள்
11.00, 3.00, 7.00 (பு.நேரம்)

நாகம்ஸ் சுன்னாகம்
அர்ஜுன், பூஜா, ரகுவரன் நடித்த
சூரியபார்வை (ரீல்ஸ்)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நேரம்)
திங்கள், செவ்வாய், புதன், வியாழன் ஆகிய நாள்களில் 7.00 மணிக்கு ஆங்கிலத் திரைப்படம்
M.I. - 2
(சண்டைக்காட்சிகள் நிறைந்தது)


## ஓய்வு...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

வர் கையெழுத்திட்டுவிட்டதாக அணியின் முகாமையாளர் ஜேன் எலியட் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே தன் மனைவி மற்றும் குழந்தைகள் ஆஸ்திரேலியாவில் குடியேறிவிட்டதாக அன்டி பிளவர் தெரிவித்தார்.

இவரது சகோதரரும் சகாவுமான கிராண்ட் பிளவரும் ஸிம்பாப்வே அணியில் விளையாடி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## பாகிஸ்தான்...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளவேண்டும் என்ற ஆர்வம் இல்லாத வீரர்களை வைத்துக்கொண்டு என்ன செய்யமுடியும்? சாதிக்க வேண்டும் என்ற துடிப்பு இல்லாத இதுபோன்ற வீரர்களைப் பாகிஸ்தான கிரிக்கெட் சபை அடையாளம் கண்டு அணியில் இருந்து விலக்கவேண்டும்.

அவர்களிடம் கிரிக்கெட் பற்றிய அறிவும் மிகக் குறைவு. அணியின் சாதக பாதகங்களை அறிந்துகொள்வதற்காக ஒரு கணனி நிபுணர் தேவை என்று நான் கேட்டபோது, அதெல்லாம் வீண் என்று நிராகரித்துவிட்டனர்.

ஆஸ்திரேலியா போன்ற அணிகளின் வீரர்கள் மற்றவர்கள் தவறுகளில் இருந்து பாடம் கற்றுக்கொள்கின்றனர்.

இப்போதைய சூழலில் நிபுணர் இல்லாமல் விளையாடச் செல்வது ரேடார் இல்லாமல் போருக்குச் செல்வதற்குச் சமன். இப்படி ஓர் அணிக்குப் பயிற்றுநராக இருப்பது மிகவும் கடினமான விடயம்.

- இவ்வாறு கூறியுள்ளார் ரிச்சார்ட் பைபஸ். (ம)

## சைக்கிள் திருட்டு

யாழ்ப்பாணம்,மார்ச்13

யாழ்நாச்சிமார் கோவிலடி, மதவடி ஒழுங்கையில் உள்ள வீடொன்றில் இரவுவேளை கதவு பிரித்து உள் நுழைந்த திருடர்கள் அங்கு பூட்டிய நிலையில் விடப்பட்டிருந்த சைக்கிளைத் திருடிச்சென்றுள்ளனர்.

வீட்டின் உரிமையாளர்கள் பூப்புப்புனித நீராட்டு வைபவம் ஒன்றுக்காக உறவினர் வீட்டுக்குச் சென்றிருந்த சமயமே இந்தத் திருட்டு நடைபெற்றுள்ளதாகக் கூறப்பட்டது. (எ)

## சாரணிய பாசறை

யாழ்ப்பாணம்,மார்ச்13

பெண்சாரணிய வழிகாட்டுநர் ஆசிரியைகள் கலந்துகொள்ளும் இரண்டு நாள் பாசறை நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிமுதல் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி வரை வட்டுயாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெறும் என்று மாவட்ட ஆணையாளர் தெரிவித்துள்ளார். (ஐ-6)

## தென்மராட்சி ஆசிரியர்களுக்கு!

யாழ்ப்பாணம்,மார்ச்13

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மெய்வன்மைப் போட்டிகளுக்குப் பொறுப்பாக இருக்கின்ற ஆசிரியர்களை இன்று பிற்பகல் ஒரு மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரிக்கு வருகைதருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஐ-6)

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்13

யாழ் மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையில் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்று வரும மாவட்ட மட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று வியாழக்கிழமை காலை 8.00 மணி முதல் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள பற்றிய விவரம் வருமாறு:-

*16 வயதுப் பிரிவு*

★கொற்றாவத்தை அதகபாடசாலை எதிர் உரும்பிராய் இந்துக் கல்லூரி.

*18 வயதுப் பிரிவு*

★சாவகச்சேரி இந்துக் கல்லூரி எதிர் ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

பிற்பகல் இடம்பெறும் ஆட்டங்களில் மோதும் அணிகள்:-

★மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் மீசாலை வீரசிங்கம் வித்தியாலயம்.

தேவரையாளி இந்துக் கல்லூரி எதிர் யாழ். இந்துக் கல்லூரி. (ஒ-5-85)

## சதம்....

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

களில் இந்தியா படுதோல்வியைச் சந்தித்திருந்தாலும் ஷேவாக் அங்கு இரு சதங்களைக் குவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மைதானத்தில் தான் நிற்கும் போது தன் மூத்த சகாவான சச்சின் டெண்டுல்கர் தனக்கு நல்லமுறையில் ஆலோசனைகளை வழங்குவதாகக் குறிப்பிட்ட ஷேவாக், சச்சினின் உதவியுடன்தான் ஓட்டங்களைக் குவிக்க முடியும் என்றும் நம்பிக்கை வெளியிட்டார். இலங்கைக்கு எதிரான ஆட்டத்தில் தான் அரைச்சதத்தை பெறவும் டெண்டுல்கர் தனக்கு உதவி புரிந்ததாகவும் அவர் சொன்னார்.

இந்த ஆட்டத்தில் நியூஸிலாந்து அணி இந்தியாவை வென்றால் அது அரையிறுதி ஆட்டத்துக்குச் செல்லும் தகுதியைப் பெறும். (ம)

## ஸிம்பாப்வே...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாள் தேர்வுக்குழு அங்கத்தவர் இராஜினாமாச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தேர்வுக்குழுவின் ஏனைய அங்கத்தவர்களுடன் அவர் கருத்து வேற்றுமை கொண்டிருந்தார்.

அவர்களுடனான தகவல் தொடர்பும் குறைவு.

இராஜினாமா குறித்து ஸிம்பாப்வே கிரிக்கெட் யூனியன் தலைவர் பீட்டர் சின்கோகாவுக்கு அறிவித்துள்ளார்.

- இவ்வாறு ஸிம்பாப்வே கிரிக்கெட் யூனியன் நிர்வாக இயக்குநர் வின்ஸ் ஹோகஸ் தெரிவித்துள்ளார்.

## நியூஸிலாந்து...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூறப்பட்டது.

ஆனால், இந்திய அணியில் மிகச்சிறந்த துடுப்பாட்ட வீரர்கள் இருக்கிறார்கள் என்றால் எத்தகைய ஆடுகளங்களிலும் விளையாடும் திறமை பெற்றிருக்கவேண்டும் என்று பிளமிங் அப்போது குறிப்பிட்டு இருந்தார். (ம)

கப்பல் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவம்:

# உயிரிழந்த போராளிகளுக்கு வடமராட்சியில் நேற்று அஞ்சலி

கரவெட்டி,மார்ச்13

கிழக்குக் கடலில் கடற்படையினரால் புலிகளின் கப்பல் தாக்கி அழிக்கப்பட்ட சமயம் உயிரிழந்த கப்டன் உட்பட பதினொரு போராளிகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் வடமராட்சிப் பகுதி எங்கும் நேற்று சிவப்பு, மஞ்சள கொடிகள் கட்டப்பட்டிருந்தன.

முக்கிய சந்திகளில் தோரணங்கள் கட்டப்பட்டு, சோக கீதம் இசைக்கப்பட்டது.

அத்துடன், வர்த்தக நிலையங்களிலும், வாகனங்களிலும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

நெல்லியடிச்சந்தி, உடுப்பிட்டி, மந்திகைச் சந்தி, பருத்தித்துறை கிராமக் கோட்டடி, எள்ளாங்குளம் மாவீரர் மயானம் போன்ற இடங்களில் மிகப் பாரிய அளவில் சிவப்பு, மஞ்சள கொடிகள் கட்டப்பட்டிருந்தன. (எ-70)

மேன்முறையீட்டு நீதிமன்ற உத்தரவு

# திருமலை நீதிமன்றத்துக்கு கிடைக்காததால் ஆறு புலிகளும் இன்னமும் விடுவிக்கப்படவில்லை

திருகோணமலை,மார்ச்13

திருகோணமலை கடற்பரப்பில் கைதாகி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஆறு புலி உறுப்பினர்களையும் பிணையில் விடுவிக்கும்படி கொழும்பு மேன முறையீட்டு நீதிமன்றம் கடந்த 10 ஆம் திகதி உத்தரவு பிறப்பித்திருந்தது.

எனினும், மேன்முறையீட்டு நீதிமன்ற உத்தரவு பற்றிய அறிவிப்பு இதுவரை திருமலை நீதிவான் நீதிமன்றுக்குக் கிடைக்கவில்லை.

இதனால் குறிப்பிட்ட ஆறு புலி உறுப்பினர்களும் இன்னும் விடுவிக்கப்படவில்லை.

எவ்வாறாயினும், அறிவித்தல் கிடைக்கப்பெற்றதும் அவர்களை விடுவிப்பதற்குத் தேவையான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக திருமலை நீதிமன்ற வட்டார தகவல்கள் தெரிவித்தன. (எ)

# சயீட் அன்வர்...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆடிவிட்டேன். அணியிலிருந்து மற்றவர்கள் தூக்கி எறிவதைவிட கௌரவமாக வெளியேறுவது நல்லது என்று முடிவு செய்துவிட்டேன்"

- இவ்வாறு அன்வர் கூறியுள்ளார்.

இணையத்தளம் ஒன்றுக்குப் பேட்டியளித்த அவர் இதைத் தெரிவித்துள்ளார்.

"எனது குடும்பத்தினரை கலந்தாலோசித்து இந்தவார முடிவில் ஓய்வு குறித்து முறைப்படி அறிவிப்பேன். நான் மிகவும் மன நிறைவோடு உள்ளேன். கிரிக்கெட்டில் என்ன சாதிக்க வேண்டும் என்று நினைத்தேனோ அதைச் சாதித்துவிட்டேன்"

- இவ்வாறு அவர் மேலும் கூறினார்.

ஒருநாள் ஆட்டங்களில் ஓர் இனிங்ஸில் 194 ஓட்டங்கள் குவித்து சாதனைபடைத்தவர் அன்வர். சென்னையில் நடைபெற்ற இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்தில் இந்தச் சாதனையைப் படைத்தார். ஒருநாள் போட்டிகளில் 247 ஆட்டங்களில் 20 சதங்களுடன் 8,823 ஓட்டங்கள் அடித்துள்ளார். சராசரி 39.21 ஆகும்.

டெஸ்ட் ஆட்டங்களில் 4,052 ஓட்டங்கள் எடுத்துள்ளார். இதில் 11 சதங்கள் அடக்கம். சராசரி 45.52

இந்த உலகக்கிண்ணத்தில் இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்தில் 101 ஓட்டங்கள் எடுத்த அன்வர், ஸிம்பாப்வேயுக்கு எதிரான ஆட்டத்தில் ஆட்டமிழக்காமல் 40 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

மியான்டட்டின் தலைமையின் கீழ விளையாடியமையும் வஸிம் அக்ரம், வக்கார் யூனுஸ் ஆகிய சிறந்த பந்து வீச்சாளர்களுடன் அணியில் இடம் பெற்றிருந்தமையும் கௌரவமான ஒன்று எனத் தெரிவித்த அவர் இந்தியா, ஆஸ்திரேலியா அணிகளுக்கு எதிராக விளையாடும் போது மிகவும் மகிழ்ந்தேன்."

-இவ்வாறு அன்வர் மேலும் கூறினார். (ம)

# மரண அறிவித்தல்கள்

## சுப்பிரமணியம் அன்னம்மா

மணியர்பதி வீதி, கொக்குவில் மேற்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் அன்னம்மா நேற்று (12.03.2003) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு - செல்லம் தம்பதிகளின் அன்பு மருமகளும் பரமேஸ்வரி, அருளானந்தம் ஆகியோரின் பாசமிகு தாயாரும் நடராசப்பெருமாள், குணநாயகி ஆகியோரின் அன்பு மாமியாரும் சிவஜெயந்தி - ஞானசேகரம், சுதேஸ்குமார், காலஞ்சென்ற பாலகுமார் மற்றும் குணசீலன், தேவகுமார், நர்மதா, அருட்சங்கர், அபர்ணா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் சந்தோஷ், சுஜானி, சுஜகர்னி ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (12.03.2003) புதன்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மணியர்பதி வீதி,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.* (1.5542)

தகவல்:
சு.அருளானந்தம் (மகன்).

## திருமதி சங்கரப்பிள்ளை அமிர்தம்மா

புங்குடுதீவு, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சங்கரப்பிள்ளை அமிர்தம்மா காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான விசுவர் சின்னத்தங்கத்தின் அன்பு மகளும் பத்மாவதி, செல்வானந்தம் (ப.நோ.கூ.சங்கம், புங்குடுதீவு), காலஞ்சென்றவர்களான சிவலிங்கம் (ரைம்கீப்பர்), இராசலிங்கம் (வர்த்தகர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்லத்துரை, செல்வநாயகி, மகாலட்சுமி, தவமலர் ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான கந்தையா, இராமலிங்கம், மாரிமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.03.2003) வியாழக்கிழமை பி.ப. 3மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கந்தர்மடம்,*
*யாழ்ப்பாணம்.* (15537)

தகவல்.
செல்வானந்தம் (மகன்),
செ.சூரியன். (பேரன் - யாழ்ஹூபா லைக்கம்)

# பொருள்கள், சேவைகள் பராமரிப்புச் சட்டமூலம் உயர் நீதிமன்றின் அவசர பரிசீலனைக்கு !

கொழும்பு,மார்ச்13

மத்திய கிழக்கில் யுத்த சூழ்நிலை ஒன்று ஏற்பட்டால், இலங்கையின் நுகர்வோருக்கு பொருள்கள் சேவைகள் ஆகியவற்றைப் பெற்றுக்கொடுப்பதையும் அவை சமமாகப் பகிர்ந்தளிக்கப்படுவதையும் உறுதிப்படுத்தும் - பொருளகள் - சேவைகள் பராமரிப்பு சட்ட மூலத்தை அரசு முன்வைத்திருக்கிறது. அதனை அவசர சட்ட மூலமாகக் கருதி ஆராயுமாறு ஜனாதிபதி நேற்று உயர்நீதிமன்றத்தில் சட்ட மூலம் ஒன்றை தாக்கல் செய்தபின் இந்த சட்டமூலம் அரசமைப்புக்கு ஏற்புடையதா? முரணானதா? என்பது பற்றி 72 மணி நேரத்துக்குள் உயர் நீதிமன்றம் கூடி தீர்ப்பை இரகசியமாக ஜனாதிபதிக்கும் சபாநாயகருக்கும் அறிவிக்கும்.

சட்டமூலம் உயர்நீதி மன்றத்தில் இன்று ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

## கப்பல் அழிப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழைக்கப்படவேண்டும். அவர்கள் அதில் தலையிட்டு பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்த்துவைப்பர். சில சமயங்களில் நெடுந்தீவுச் சம்பவம் போன்ற அசம்பாவிதங்களும் இடம் பெற்றுவிடுகின்றன.

ஆனால், இம்முறை கண்காணிப்புக் குழுவை சம்பவம் நடந்த இடத்திற்கு அழைக்காமல் எமது கப்பல் தாக்கி அழிக்கப்பட்டிருக்கிறது. புலிகளின் மீது பொய்க்குற்றம் சுமத்துவதற்காகவே இரகசியமாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதைப் பற்றி நாம் கண்காணிப்புக் குழுத் தலைவருக்குத் தெளிவாகக் கூறியுள்ளோம்.

கப்பலே முழுமையாகத் தாக்கி மூழ்கடிக்கப்பட்ட பின்ன் அதில் கொடி இருந்ததா, வேறு அடையாளம் இருந்ததா என்று கேட்டால் எம்மால் எதுவும் கூறமுடியாது. ஏனெனில், அவை அனைத்தும் - எல்லா ஆதாரங்களும் - கடற்படையால் தாக்கி அழிக்கப்பட்டு விட்டன. கண்காணிப்புக்குழுவின் நடவடிக்கைகளை செயலிழக்கச் செய்யும் வகையில் தான்தோன்றித்தனமாக கடற்படை நடந்துகொண்டால் கண்காணிப்புக்குழு என்று ஒன்று இருந்தும் பயனில்லை.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் சரத்து 1.3இன்படி கடற்படை தமது பிரதேச ஒருமைப்பாட்டையும் இறையாண்மையையும் நிலைநிறுத்தலாம்; காக்கலாம். ஆனால், புலிகளுடன் மோதலுக்குப் போகக்கூடாது.

இறையாண்மையை நிலைநாட்டுவதற்காகவோ காப்பாற்றுவதற்காகவோ புலிகளுடன் மோதலுக்குப் போகக் கூடாது என்று அதில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

இந்தவகையில், புலிகளின் கப்பல மீது கடற்படையினர் தாக்குதல் மேற்கொண்டமை அப்பட்டமான யுத்த நிறுத்த மீறல். இவை பற்றியெல்லாம் கண்காணிப்புக்குழுத் தலைவருக்குத் தெளிவாகக் கூறியிருக்கிறோம்.

சமாதானப் பேச்சுக்களைக் குழப்பியடித்துவிட வேண்டும் என்ற அக்கறையுடன் செயற்படும் கடற்படையினரின் இன்னொரு நடவடிக்கைதான் தமிழக மீனவர் மீதான தாக்குதல்.

கடற்படையின் சூழ்ச்சிக்கும் சதி வலைக்கும் பாவம் தமிழக மீனவர்கள் அநியாயமாக இலக்காகின்றார்கள். தமிழக மீனவர்கள் விடயத்தில் நாம் அக்கறையுடன் செயற்படுகிறோம். இருநாட்டு மீனவர்களுக்கு மத்தியில் முரண்பாடுகளைக் களைவது குறித்து அரசுக்குப் பலதடவைகள் கூறியிருக்கின்றோம். ஆனால், அதை அரசும் கட்டுப்படுத்த முடியாத நிலையில் இருப்பது எமக்குக் கவலை தருகின்றது.

- என்றார் பாலசிங்கம். (ஐ-164)

## கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்வது தொடர்பாக அரசு, புலிகள் இரு தரப்பினருடனும் பேச்சு நடத்துவதற்காகவே ஹெல்கிஸன் வந்துள்ளார் என்று வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-4)

## விகாரைகளின் விவரம் சேகரிப்பு

வலி.வடக்கு,மார்ச்13

யாழ்.மாவட்டத்தில் உள்ள பௌத்த விகாரைகள் மற்றும் வணக்கஸ்தலங்கள் பற்றிய விவரங்கள் யாழ். செயலகத்தினால் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாக கலாசார உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம அலுவலர்கள் மூலம் இவ்விவரங்கள் பெறப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது. (ஒ)

## புலிகளின் ஆயுத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளதாவது:-

புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஒழுங்காகக் கடைப்பிடிக்குமாறு டோக்கியோ பேச்சுக்களில் புலிகளை வலியுறுத்த வேண்டும். ஆயுதங்களைக் கொள்முதல் செய்வது, இராணுவ பலத்தைப் பெருக்குவது, சிறுவர்களைப் படையில் சேர்ப்பது போன்ற அனைத்து நடவடிக்கைகளும் யுத்த நிறுத்த உடன்படிக்கையை மீறும் செயல்கள் ஆகும் என்று பிரதமரிடம் ஜனாதிபதி நேற்று முன்தினம் தெரிவித்தார் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

## ஹெலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேபோன்ற ஹெலிதாங்கி கரையோர ரோந்துக் கப்பல் ஒன்றை 2000ஆம் ஆண்டு டிசெம்பரில் இந்தியாவிடமிருந்து ஒரு கோடி 90 லட்சம் அமெரிக்க டொலருக்கு (190 கோடி ரூபா) இலங்கை கொள்வனவு செய்திருந்தது. ஆனால் அந்தக் கப்பலில் இறங்கிச் செல்லக்கூடிய ஹெலிகொப்டரை கடற்படை இன்னும் சுவீகரிக்கவில்லை.

பெரும் செலவுமிக்க இந்தக் கப்பலை வைத்துப் பராமரித்து ரோந்து நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவது வெள்ளை யானையைக் கட்டித் தீனிபோடுவது போன்று செலவு அதிகமானது என்றும், இக்கப்பல் போதிய பயன்தரக்கூடியது அல்ல என்றும் விமர்சிக்கப்பட்டு வந்தது.

ஆனால் இந்த 'சைரா' என்ற கப்பலே கிழக்கு ஆழ்கடலில் கடந்த திங்களன்று புலிகளின் கப்பலைத் தாக்கி அழிக்கப்பயன்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

புலிகளின் கப்பல் தாக்கி அழிக்கப்பட்டகையோடே, புதிதாக ஒரு ஹெலி தாங்கி ரோந்துக் கப்பல் ஒன்றை இலங்கைக்கு விற்க அமெரிக்கா முன்வந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## யுனிசெவ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'யுனிசெவ்' பிரதிநிதியிடம் கையளிக்கப்பட்டன.

சிறுவர்கள் புலிகளின் அலுவலகங்களை நாடி வருவதற்கான காரணங்களைக் கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுப்பது அவசியம் என்று அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி யுனிசெவ் பிரதிநிதியிடம் வலியுறுத்தினார். (ஐ)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவகாரங்கள், தற்போதைய சமாதான முன்னெடுப்புகள், இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலான தீர்வு ஆகியன தொடர்பாக புலிகளும் அரசும் எடுத்துள்ள தீர்மானங்கள், அரசியல் விவகாரக்குழு மேற்கொள்ளவுள்ள வெளிநாட்டுக் கல்விச் சுற்றுலா என்பவை தொடர்பாக அவர் விளக்கமளித்தார்.

இந்தக் குழுவினர் அடுத்த இரு மாதங்களினுள் ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் செய்யவுள்ளனர். அந் நாடுகளிலுள்ள ஆட்சி முறைகள் பற்றி அறிவதற்கு அங்குள்ள அரசமைப்பு சட்ட வல்லுநர்கள் மற்றும் நோர்வே அரச அதிகாரிகள் ஆகியோருடன் இணைந்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

எதிர்வரும் ஏப்ரல் மாத முற்பகுதியில் தமது கல்விச் சுற்றுலாவை ஆரம்பிக்கும் அரசியல் விவகாரக் குழு நோர்வே, சுவீடன், பின்லாந்து, டென்மார்க் ஆகிய நாடுகளின் தலைநகர்களுக்கு முதலில் செல்லவுள்ளது. பின்னர் சுவிஸ், ஜேர்மனி, பெல்ஜியம், ஸ்பெயின் ஆகிய நாடுகளுக்குச் செல்லும்.

இதர நாடுகளுக்கான பயணம் பற்றிப் பின்னர் ஒழுங்குசெய்யப்படும் - என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

## ஜப்பான் பேச்சை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒனறு. இந்த முடிவுக்கு நான் ஆதரவு இல்லை. ஆனால் இயக்கத்தில் சிலர் அதனை ஆதரிக்கின்றனர்.

அந்தக் கப்பல் எரிபொருளையே எடுத்துவந்தது. இலங்கை அரசுத் தரப்புக் கூறுவதுபோல அதில் ஆயுதங்கள் இருக்கவில்லை. சர்வதேசக் கடற்பரப்பில் சென்றுகொண்டிருந்த அந்தக் கப்பலுக்கு இலங்கை கரைக்கு - எல்லைக்கு - வரும் எண்ணமே இருக்கவில்லை.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இருந்த எமது பிரதேசத் தலைவர்கள் வன்னிக்கு அழைக்கப்பட்டிருக்கின்றனர் என்பது உண்மையே. தலைமைப்பீடத்தின் உத்தரவிலேயே அவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

போர்நிறுத்தம் சீர்குலைந்து யுத்தம் ஏற்படப்போவதாக நாங்கள் கருதவில்லை. போர்நிறுத்தத்தை நாம் இறுக்கமாகக் கடைப்பிடிப்போம். நாங்கள் அதில் உறுதியாக உள்ளோம். போர் ஏற்படும் என்று எமது மக்களும் அஞ்சத் தேவையில்லை.

பிரதேசத் தலைவர்களை மீள அழைத்ததற்கு இரண்டு காரணங்கள். ஒன்று - அவர்களுக்கு நிலைமையை விளங்கப்படுத்த விரும்பினோம். மற்றது - இப்படியான இராணுவ நெருக்கடி நேரத்தில் இராணுவமே தாக்குதல்களை நடத்தலாம். அப்படி ஏற்பட்டால் அவர்களைப் பாதுகாக்க இந்த நடவடிக்கை.

இராணுவத்தின் மீது பிரதமர் ரணிலின் அரசு கட்டுப்பாட்டைச் செலுத்தத் தவறிவிட்டது. இது எமக்கு ஏமாற்றத்தைத் தருகின்றது.

அரசமைப்புச் சட்டத்தை மாற்றி அமைப்பதற்கான பலம் ரணிலின் அரசுக்கு இல்லை. அதனால், இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண அந்த அரசினால் முடியுமா என்பது கேள்விக்குரியதாகியுள்ளது - என்றார் பாலசிங்கம்.

(ஐ-4-6)

## World Cup Score card - 2003



ரூ. 16910 முதல் தொலைக்காட்சிப் பெட்டிகள்
சிங்கர்
புதிய பார்வை
இல. 1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P:021-222 5408


நாணயச் சுழற்சி : ஸிம்பாப்வே

ஆட்டநாயகன் : மார்டின் சுஜி

முடிவு : 7 விக்கெட்டுக்களால் கென்யா வெற்றி

### ஸிம்பாப்வே

| பெயர் | ஆட்டமிழப்பு | | ஓட்டம் | பந்து | 4 | 6 |
|---|---|---|---|---|---|---|
| சி.விஸார்ட் | c/ஒரினோ | b/சுஜி | .... 05 | 07 | 0 | 0 |
| எ.கம்பெல் | lbw | b/சுஜி | .... 07 | 25 | 0 | 0 |
| எ.பிளவர் | | b/ஒடோயோ | .... 63 | 101 | 5 | 0 |
| ஜி.பிளவர் | c/ஒரினோ | b/சுஜி | .... 07 | 15 | 1 | 0 |
| ரி.தைபு | c/ஒரினோ | b/ஒபுயா | .... 03 | 18 | 0 | 0 |
| டி.இப்ராகிம் | st./ஒரினோ | b/ஒபுயா | .... 13 | 24 | 1 | 0 |
| ஏ.பிளிங்னட் | run out (ஒரினோ/உடும்பே) | | .... 04 | 08 | 0 | 0 |
| எச்.ஸ்ரீக் | c/ஒர | b/ஒபுயா | .... 00 | 04 | 0 | 0 |
| டி.மரிலியர் | | b/ரிகோலோ | .... 21 | 39 | 2 | 0 |
| எச்.ஒலங்கா | c/உடும்பே | b/ரிகோலோ | .... 03 | 12 | 0 | 0 |
| டி.ஹொண்டோ | not out | | .... 00 | 14 | 0 | 0 |
| உதிரிகள் | | | .... 07 | | | |
| மொத்தம் | (44.1 ஓவர்கள்) | | .... 133/10 | | | |

மார்டின் சுஜி:8-2-19-3, ஒடோயோ:10-0-43-1, ஹொண்டோ:5-2-16-0, ஒபுயா: 10-0-32-3, ஹரீம்: 9-0-20-0, ரிகோலோ: 2.1-1-2-2

### கென்யா

| பெயர் | ஆட்டமிழப்பு | | ஓட்டம் | பந்து | 4 | 6 |
|---|---|---|---|---|---|---|
| கே.ஒரினோ | lbw | b/ஒலங்கா | .... 19 | 50 | 2 | 0 |
| ரவீந்துஷா | run out (ஏ.பிளிங்னட்) | | .... 14 | 27 | 1 | 0 |
| எஸ்.ரிகோலோ | c/ ஸ்ரீக் | b/பிளிங்னட் | .... 02 | 07 | 0 | 0 |
| ரீ.ஒடோயோ | not out | | .... 43 | 60 | 9 | 0 |
| எம்.உடும்பே | not out | | .... 38 | 20 | 8 | 0 |
| உதிரிகள் | | | .... 19 | | | |
| மொத்தம் | (26 ஓவர்கள்) | | .... 135/3 | | | |

*களமிறங்காதவர்கள்* : எம்.சுஜி, ஏ.சுஜி, ஏ.ஹரீம், எச்.மோடி, சி.ஒபுயா, பி.ஒங் ஹொண்டோ

ஸ்ரீக் : 06-0-24-0, பிளிங்னட்:9-1-36-1, ஒலங்கா:4-0-21-1, பிளவர்:3-0-27-0, மரிலியர்: 1-0-9-0, ஹொண்டோ 2-1-14-0


தமிழீழ வைப்பகம்
அறிவித்தல்
நாளை (2003-03-14) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு பளை நகரில் ஆரம்பமாகவிருந்த எமது பணிகள் யாவும் முற்பகல் 10 மணிக்கு ஆரம்பிக்கப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.
*தமிழீழ வைப்பகம் தமிழரின் காப்பகம்*
- தமிழீழ வைப்பகம் -
(C/26928)

WANTED
A Colombo based firm requires the following personnel:
1. Marketing Manager :- A well experienced, result - oriented Marketing Manager preferably with motor cycle licence. Remuneration on salary plus commission basis.
2. Marketing Representatives :- Well experienced, energetic Marketing Representatives. Possession of motor cycle licence essential. Food & lodging provided. Remuneration on Salary plus commission basis.
*Apply with bio-data to reach the following address on or before 17.03.2003.*
Advt No. 1819
C/o UTHAYAN
(C/26994)

இந்திய ஜோதிடர் யாழ்.விஜயம்
ஸ்ரீ சோடா நிகரை பகவதி அம்மன் அருள்பெற்று ஸ்ரீ வெட்டுடைய காளி அம்மன் வாக்குப் பெற்ற இந்தியப் பரம்பரை ஜோதிடர் யாழ். வருகை தந்துள்ளார். கைரேகை, ஜாதகம், எண்கணிதம், மகப்பேறு, குடும்பப் பிரச்சினையா? கல்வி, வெளிநாடு செல்லத்தடையா? தொழிற்பிரச்சினையா? காதல் பிரச்சினையா? திருமணப் பிரச்சினையா? தீராத நோயா? எந்தவிதமான பிரச்சினைகளுக்கும் தக்க பரிகாரம் மூலம் தீர்வுகாணலாம்.
ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்!
மணிசாமி P.T.R.
*யாழ்.உல்லாசப் பயணிகள் விடுதி.*
*இல. 54, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம் (வெலிங்டன் சந்தி அருகில்).*
பார்வையிடும் நேரம்: காலை 9.00 மணிமுதல் மாலை 4.00மணிவரை (இந்த மாதம் 15ஆம் திகதி வரையும்)
(15441)

UNIVAC
College Of Computer Information Technology
புதிய கணனி கற்கை நெறிகள்
ஆரம்பம் : 19.03.2003 4.00 p.m.
*Note:-* குறிப்பிட்ட எண்ணிக்கையான மாணவர்களுக்கே அனுமதிகள் வழங்கப்படும்.
17.03.2003 இற்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளவும்.
*Mavadi Road, Sithankerny.* Director, UNIVAC

SPECIAL ENGLISH COURSE
FOR GRADE 9,10&11
SPOKEN ENGLISH WITH GRAMMAR
*Lectures By:*
Mr. S.B.SASI
புதிய பிரிவுகள் ஆரம்பம்
15.03.2003 Sat. 3.00 p.m.
NEW HARY'S INSTITUTE
*Mavadi Road, Sithankerny.*
(15521)


## மரண அறிவித்தல்

### திருமதி கதிரவேலு பத்மாவதி

சுருவிலைப் பிறப்பிடமாகவும் சுண்டிக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கதிரவேலு பத்மாவதி நேற்று (12.03.2003) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் நாளை அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*55,கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.* (15544)

தகவல்:- க.காந்தன் (மகன்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.03.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# கப்பல் தாக்கப்பட்டது போன்ற சம்பவங்கள் இனி நடக்காது என்ற உறுதி தரப்படவேண்டும்

## அரசிடமும் கண்காணிப்புக் குழுவிடமும் கோருவோம் என்கிறார் பாலா

**திருமலைக் கடலில் எமது வர்த்தகக் கப்பல் தாக்கி மூழ்கடிக்கப்பட்டு போராளிகள் உயிரிழந்தமை போன்ற சம்பவங்கள் இனியும் இடம்பெறக் கூடாது என்ற உறுதி தரப்படவேண்டும் என்று அரசிடமும் கண்காணிப்புக் குழுவிடமும் நாம் வலியுறுத்துவோம்.**

**- இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம். நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.**

**அவரது பேட்டியின் முழு விவரம் வருமாறு:-**

*கேள்வி:* தமிழ்க் கைதிகளின் விவகாரம் குறித்து கடந்த பேச்சுக்களில் பிரஸ்தாபித்தீர்களா?

*பாலா:* தமிழ் அரசியல் கைதிகளின் விடயத்தை பேச்சுக்களில் எழுப்பியிருந்தோம். ஆரம்பத்தில் 600 முதல் 700 கைதிகள் சிறைகளில் இருந்தனர். பெரும்பாலானவர்கள் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். தற்சமயம் 110 அல்லது 112 பேரே சிறைகளில் உள்ளனர். அவர்களின் வழககுகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டு அவர்கள் விரைவில் விடுவிக்கப்படுவர் என்று அரசுப்பிரதி நிதிகள் தெரிவித்துள்ளனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அந்தப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்கும்படி நாம் கேட்டுள்ளோம். அல்லது இந்தச் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டுவரும்படி கோரியுள்ளோம். இந்தச் சட்டத்தை நீக்குவதற்கு அரசு பின்னடித்ததால், அதில் திருத்தம் கொண்டுவருமாறு கேட்டோம். இந்தச் சட்டத்தை மறுசீரமைப்பதாக அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் எமக்கு உறுதி தந்துள்ளார்.

"ஐ.நா. தீர்மானத்தின்படி, சகல நாடுகளிலும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. அந்த வகையில் - ஐநாவின் கோரிக்கையினபடி - இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. எனவே, சர்வதேசத்தின் விருப்பப்படி இலங்கையும் செயற்பட வேண்டியுள்ளது. இந்த வகையில் பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டம் ஒன்றை இலங்கை கொண்டிருக்கத்தான் வேணடும்" - என்று பீரிஸ் தெரிவித்தார்.

எனினும், இந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கும்படி அல்லது திருந்தும்படி நாம் தொடர்ந்து வற்புறுத்த இருக்கின்றோம். அரசுக்கு கூடுதல் அழுத்தத்தைக் கொடுப்போம். அத்துடன் சகல அரசியல் தமிழ்க் கைதிகளையும் விடுதலை செய்யும்படி வற்புறுத்திக்கொண்டிருப்போம். தற்சமயம் யுத்தநிறுத்தம் அமுலில் உள்ளதால் இதைச் செய்யும்படி அரசிடம் கோரி வருகின்றோம். சகல யுத்தக் கைதிகளுக்கும் பொதுமன்னிப்பு வழங்கப்படவேண்டும். இந்த விடயத்தில் அரசு எதுவும் செய்ய முடியாமைக்கு காரணம் ஜனாதிபதிதான். சகல அரசியல் கைதிகளுக்கும் பொது மன்னிப்பை பிரகடனம் செய்ய வேண்டியவர் அவரேதான்.

பேராசிரியர் பீரிஸும், மிலிந்த மொறகொடவும் அரசியல் கைதிகளை விடுவிப்பதில் தீவிர அக்கறை காட்டிவருகின்றனர். மிலிந்த பல தடவை சிறைச்சாலைக்கு சென்று கைதிகளைப் பார்வையிட்டும் உள்ளார்.

எந்த நேரத்தில் இந்த விடயத்தை எடுத்தாலும், ஜனாதிபதியே இந்த விவகாரத்தில் தடையாக இருக்கின்றார். பொது மன்னிப்பு வழங்கும் விடயத்தில் ஜனாதிபதி சம்பந்தப்பட்டிருப்பதால் அவரிடம் இது பற்றி கேட்பதிற்கு அரசுப் பிரதிநிதிகள் பின நிற்கிறார்கள். இதுதான் கைதிகள் விடுதலை தாமதமாவதற்குக் காரணம்.

இந்த விடயத்தில் தமிழ்க் கூட்டமைப்பு எம்பிக்களை அழுத்தம் கொடுக்கும்படி நாம் கேட்டுள்ளோம். சிறைக் கைதிகளின் நலன்களைக் கவனிக்கும்படி அவர்களிடம் தெரிவித்துள்ளோம். நாங்கள் சிறைச்சாலைக்கு போக முடியாது. இதனால், கூட்டமைப்பினரை அனுப்புகிறோம்.

நாடாளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தி கைதிகள் விட யத்தை கையாண்டு வருகின்றார். மிலிந்த மொறகொடவும் கைதிகளை விடுவிக்கும் விடயத்தில் கூடுதல் அக்கறை காட்டுவதாக உறுதிதந்துள்ளார்.

கைதிகள், வழக்கு விசாரணையை எதிர்நோக்குவார்கள். அதன் பின்பே அவர்கள் விடுவிக்கப்படுவர்.

சமாதானப் பேச்சில் சகல கட்டத்திலும் கைதிகள் பிரச்சினையை நாம் எழுப்பி வருகின்றோம். இந்த கைதிகளை ஆகக்குறைந்தது, தமிழ்ப்பகுதி சிறைச்சாலைகளுக்காவது மாற்ற வேண்டும் என்று கோரியுள்ளோம். தமிழ்ப்பகுதி சிறைகளுக்கு மாற்றப்பட்டால் ஆகக்குறைந்தது அவர்கள் தமது உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிடுவர் என்று எதிர்பார்க்கின்றோம். இது எமது ஆலோசனை.

*கேள்வி:* இக்கைதிகள் குற்றம் இழைத்திருந்தால் அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யலாம் அல்லவா?

*பாலா:* அதைத்தான் செய்யப் போவதாக அரசு கூறுகின்றது. இந்தக் கைதிகள் பல குற்றங்கள் தொடர்பாக ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளனர். இதன் காரணமாக வழக்கு விசாரணையை அவர்கள் எதிர்நோக்க வேண்டியுள்ளது என்று அரசு தெரிவிக்கின்றது. இலங்கை நீதிச் சேவையைப் பற்றித் தெரியும் தானே. நீண்ட கால விசாரணை நடந்துதான் முடிவு வெளிவரும்.

*கேள்வி:* திருமலைக் கடலில் இடம்பெற்ற சம்பவம் பேச்சைப் பாதிக்குமா?

*பாலா:* இந்தச் சம்பவத்தை பாரதூரமான சம்பவமாகவே எமது தலைமைப்பீடம் பார்க்கின்றது. மூழ்கடிக்கப்பட்ட கப்பலைவிட அதில் உயிர் நீத்த போராளிகள் முக்கியமானவர்கள். அவர்களில் மூவருக்கு மேல் லெப்டினன்ட் கேணல் தரத்தில் உள்ளவர்கள். கடல்துறையில் நீண்டகால அனுபவமிக்க போராளிகள். இவர்களின் இழப்புக் காரணமாக தலைவர் மிகவும் வேதனை அடைந்திருக்கிறார். அத்தோடு, தொடர்ச்சியாக உயிரிழப்புக்களை நாங்கள் சந்திக்க முடியாது.

சட்டவிரோத செயல்களுடன் சம்பந்தப்பட்டதாக கப்பல் மூழ்கடிக்கப்பட்ட சம்பவம் இருந்தால், நாம் இழப்பைப் பொறுத்துக்கொள்ளலாம்.

ஆனால், இந்தச் சம்பவம் நடந்தது சர்வதேச கடலில். 220 கடல் மைல்களுக்கு அப்பால் நடந்த ஒரு சம்பவம் இது. இந்தக் கடற்பரப்பில் இலங்கை கடற்படைக்கு எந்தவித சட்ட அதிகாரமும் இல்லை. கரையிலிருந்து 12 கடல் மைல் தூரமே இலங்கைக்கு ஆதிக்கமுள்ள பிரதேசம். அதன் பின்பு 200 கடல் மைல் தூரத்தை அதன் பொருளாதார வலயம் என்று வைத்தாலும் அதற்கு அப்பால்தான் சம்பவம் நடந்துள்ளது.

இதை நோக்கும்போது சர்வதேச கடற்பரப்பில் வர்த்தக நோக்கத்தோடு சென்ற ஒரு வர்த்தகக் கப்பல் தடுத்து நிறுத்தப்பட்டு அழிக்கப்பட்டமை பாரதூரமான விடயமாகும். போராளிகள் மரணத்தை தழுவியதும் மிகப் பாரதூரமான விடயம்.

இப்படியான சம்பவங்கள் தொடர்ந்து நடந்தால் சமாதானப் பேச்சுக்களில் நிலவும் சுமுகமான நிலைமை, பரஸ்பரம் நம்பிக்கையூட்டும் நிலைமை என்பன பாதிக்கப்படும்.

கண்காணிப்புக்குழு மூலம் நாம் இந்த விடயம் குறித்து பேசிக்கொண்டிருக்கும் போது கடற்படையினர் கப்பல் மீது தாக்குதல் நடத்தி அதனை மூழ்கடித்துள்ளனர். கண்காணிப்புக் குழுவாலும் ஒன்றும் செய்ய முடியவில்லை. ரணில் விக்கரமசிங்கவின் நிர்வாகத்தாலும் ஒன்றும் செய்யமுடியவில்லை. பாதுகாப்பு அமைச்சர் என்று பெயருக்கு ஒருவரை வைத்திருக்கின்றனர். அவராலும் ஒன்றும் செய்யமுடியவில்லை. இதனால்தான் கூறுகின்றோம் சந்திரிகாவின் அதிகாரத்தில்தான் கடற்படை இருக்கின்றது.

சந்திரிகாவின் அதிகாரத்தில் கடற்படை இருக்கும் வரை இப்படியான சம்பவங்கள் இடம்பெறும் என்ற அச்சம் எமக்கு இருக்கின்றது. அதனால் பேச்சுக்களின் பரஸ்பர நம்பிக்கையூட்டும் நிலைமை பாதிப்படையும்.

*கேள்வி:* இதற்கு முன்னர் பேச்சுக்கள் இடம்பெற்றபோது இப்படியான சம்பவங்கள் நடந்து பேச்சுக்கள் குழம்பியிக்கின்றன. எனவே இந்தச் சம்பவம் எத்தகைய விளைவை ஏற்படுத்தும்?

*பாலா:* பேச்சுக்கள் ஒவ்வொரு மாதமும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதேவேளை, உபகுழுக்களின் பேச்சுக்கள் வாரத்தில் ஒரு தடவை, மாதத்தில் இரு தடவைகள் என்று இடம்பெறுகின்றன. பேச்சு என்பது பல மட்டங்களில், பல பரிமாணங்களில் நடைபெற்றுக்கொண்டேயிருக்கும். பேச்சு நேரத்தில்தான் இத்தகைய சம்பவம் நடைபெறுகின்றது என்று இல்லை. தொடர்ச்சியாக இந்தச் சம்பவங்கள் நடந்துகொண்டுதான் இருக்கின்றன.

பேச்சுக்கு முன்னராக, பேச்சு நடக்கும் போது அல்லது அதன் பின்னராகக் கூட சம்பவங்கள் நடக்கின்றன. பேச்சுக்களைப் பாதிக்கும் நோக்குத்துடன் சில சமயங்களில் இப்படியான சம்பவங்கள் திட்டமிட்டுச் செய்யப்படலாம்.



*கேள்வி:* இந்தச் சம்பவம் காரணமாக, அடுத்தகட்டப் பேச்சில் கடும்போக்கான நிலையை கடைப்பிடிப்பீர்களா?

*பாலா:* கடும் போக்கை நாங்கள் கடைப்பிடிப்போம் என்று சொல்வதைவிட, அரசிடம் இருந்தும் கண்காணிப்புக் குழுவிடம் இருந்தும் சில உறுதிப்பாடுகளைக் கேட்போம். அரசைவிட கண்காணிப்புக் குழுதான் இந்த உறுதிப்பாட்டைத் தரவேண்டும்.

*கேள்வி:* எந்த வகையான உறுதிப்பாட்டை நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?

*பாலா:* 1) மேற்கொண்டு இத்தகைய சம்பவங்கள் நடக்கக்கூடாது.

(2) யுத்தநிறுத்த மீறல் சம்பவங்களை இனி கண்காணிப்புக்குழுதான் முழுமையாகப் பொறுப்பேற்று நீதி வழங்க வேண்டும.

(3) இரண்டு தரப்புக்களும் கண்காணிப்புக் குழுவின் இறுதியான கூற்றுக்குக் கட்டுப்பட்டவர்களாக இருக்கவேண்டும்.

இத்தகைய 3 உறுதிப்பாடுகளை நாம் கேட்க இருக்கின்றோம்.

இந்த உறுதிப்பாட்டை தராவிட்டால் யுத்தநிறுத்த உடன்படிக்கை நடைமுறையில் இருப்பதற்கு அர்த்தம் இல்லை.

யுத்தநிறுத்தத்தை மீறி கடற்படை அதிகாரம் செலுத்துவதாயின், போர்நிறுத்த உடன்பாடும் தேவையில்லை; கண்காணிப்புக்குழுவும் தேவையில்லை.

*கேள்வி:* சமாதான காலத்தில் கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதல் சமாதானம் மீதான நம்பிக்கையீனத்தை தமிழ்மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளது. அதுபற்றி உங்கள் கருத்து என்ன?

*பாலா:* ஒவ்வொரு சம்பவமும் தமிழ்மக்கள் சமாதானத்தில் வைத்திருந்த நம்பிக்கையை குலைத்து வருகின்றது. ஆனால், அதேவேளையில் எமது நம்பிக்கை குலைந்து போனாலும், சமாதானம் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படவேண்டும் என்பதை மக்களும் விரும்புகின்றார்கள்.

புலிகள் யுத்தத்துக்கு போகவேண்டும்; பதில் தாக்குதல் நடத்த வேணடும் என்று மக்கள் விரும்பவில்லை. நாங்கள் எவ்வளவுக்குப் பொறுமையாக இருக்க முடியுமோ அவ்வளவுக்குப் பொறுமையாக இருந்து சமாதான முயற்சியைத் தொடருவதைத்தான் மக்கள் விரும்புகின்றனர்.

மக்களுக்காகத்தான் சமாதானத்தை நாம் பேணுகின்றோம். ஒரு சம்பவத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு யுத்தத்தைத் தொடங்குவதில் அர்த்தமில்லை. சமாதானத்தால் பெறும் பயன்கள்தான் முக்கியமானது. இனி மேற்கொண்டு ஒரு யுத்தம் வந்தால், அதன் பின் மீண்டும் சமாதானத்தைக் கொண்டு வருவது என்பது பெரிய சங்கடமான விடயம்.

இந்த அரசு தான் - ரணில் விக்கிரமசிங்கவின் அரசு - தமிழ் மக்களுக்கு நீதி வழங்கப்படவேண்டும் என்று விரும்புகின்றது. இந்த அரசு கலைக்கப்பட்டால் அல்லது வேறு ஒரு தலைமை வந்தால் சமாதானம் மூலம் தீர்வு காண எமக்கு எதிர்காலமே இல்லை. ஆகவே, இந்த அரசு பலமாக இருக்க நாம் உதவுவோம்.

இந்த அரசு பலமில்லாமல் இருககின்றது. முழு அதிகாரமும் ஜனாதிபதி வசம் உள்ளது. புதிய தேர்தல் ஒன்று இடம்பெற்று, புதிய ஆணையை மக்கள் வழங்கி, அதிகாரம் உள்ள ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட்டால், நிரந்தரத் தீர்வு கிடைக்க வழி ஏற்படும். அதுவரை பொறுத்திருக்கத்தான் வேண்டும். வேறு என்ன செய்வது.

*கேள்வி:* முன்னாள் தளபதியான கிட்டுவின் கப்பல் பிடிக்கப்பட்டதும், திருகோணமலையில் கப்பல் தாக்கப்பட்டதும் ஒரேவிதமான சம்பவம் எனக் கூறமுடியுமா?

*பாலா:* இரு சம்பவங்களும் வித்தியாசமானவை. திருகோமணலையில் நடந்த சம்பவம் வேண்டுமென்றே செய்யப்பட்டது. எமது வர்த்தகக் கப்பல் அங்கு தாக்கப்பட்டுள்ளது.

கிட்டு வந்த கப்பல் தடுக்கப்பட்ட போது எமது தலைமையுடன் கிட்டு தொடர்புகொள்ளக் கூடிய வசதி இருந்தது. தலைமையின் முடிவுப்படி கிட்டு செயற்பட்டார். ஆனால், திருகோணமலையில் சர்வதேச கடற்பரப்பில் போன எமது கப்பலை தாக்கி அழிப்பது என்பது நியாயமான விடயமா?

*கேள்வி:* அந்தக் கப்பலில் என்ன பொருள்கள் இருந்தன?

*பாலா:* அந்தக் கப்பலில் என்ன பொருள் இருந்தது என்று எனக்குத் தெரியாது. அக்கப்பல் மூலம் பல விதமான பொருள்களை ஏற்றிச் சென்று இறக்குவோம். அந்தக் கப்பல்களில் எண்ணெய் வகைகளும் ஏற்றிச் செலலப்படுவது வழமை. எண்ணெய் தாங்கிகளும் அவற்றில் பொருத்தப்பட்டு இருக்கும். தாக்கப்பட்டபோது எண்ணெய் தாங்கியுடன் வந்திருக்குமானால் விரைவாக எரிந்திருக்கக் கூடும்.

*கேள்வி:* முஸ்லிம் தலைமைகள் தலைவர் பிரபாகரனை சந்திக்கபோவதாக செய்திகள் கூறுகின்றன. அடுத்த சில தினங்களில் சந்திக்கக் கூடிய வாய்ப்பு உள்ளதா?

*பாலா:* இந்த முறை முஸ்லிம் தரப்புடன் சந்திக்க யோசித்திருந்தோம். கப்பல் தாக்கப்பட்ட சம்பவம் நடந்ததுடன் நிலைமை மாறியிருப்பதால் இப்போது முஸ்லிம் குழுவை சந்திக்க முடியாமல் இருக்கின்றது. ஆனால், கட்டாயம் முஸ்லிம் தூதுக் குழுவை சந்தித்து அவர்களுடன் கதைப்போம். அது எப்போது நிகழும் என்று நிச்சயமாகக் கூறமுடியாது.

*கேள்வி:* அடுத்த கட்டப் பேச்சில் என்ன விடயங்கள் பேசப்படும்?

*பாலா:* சமஷ்டி முறையில் நீதி தொடர்பான விடயங்களை அடுத்த கட்டப் பேச்சில் ஆராய்வதென முன்னர் இணங்கியிருந்தோம். அதைப் பற்றி கதைப்போம். சமஷ்டிப் முறையின் அடிப்படை விடயங்கள் தொடர்பாகவே பேசுவோம்.

அரசியல் உப-குழு ஒன்றை அமைத்துள்ளோம். அதில் விடுலைப் புலிகளின் 20 உறுப்பினர்கள் இடம் பெறுகின்றனர். இவர்கள் பல நாடுகளுக்குச் செல்ல இருக்கின்றனர். அங்கு சமஷ்டி முறை குறித்து ஆராய்வர்.

சமஷ்டி ஆட்சி முறை நடைமுறையில் உள்ள நாடுகளுக்கு இந்த மாத இறுதியில் அவர்கள் செல்வர். சுவிற்ஸலாந்து, ஜேர்மனி, பெல்ஜியம் போன்ற நாடுகளுக்கு முக்கியமாகச் சென்று அங்குள்ள நடைமுறை குறித்து விளக்கம் பெறுவர். இது சமாதான முயற்சியின் ஓர் அங்கமாகும்.

இன்றைய அரசு புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்கக் கூடிய நிலையில் இல்லை. எனினும், தொடர்ந்து பேசி ஒரு தீர்வுத்திட்டத்தைத் தயாரிக்க இருக்கின்றோம். இது ஒரு நீண்டகால நடவடிக்கையாகும்.

அரசுத் தரப்பும் தீர்வுத் திட்டத்தை தமது பக்கம் சார்ந்தவர்களுடன் ஆலோசிக்க வேண்டும். நாமும் தமிழ் கட்சிகளுடன் ஆலோசிக்க வேண்டும். ஆனால் சந்திரிகா நானும் பீரிஸும் தீர்வுத்திட்டத்தைத் தயாரிப்பதாக நினைக்கிறார். அது தவறானது.

1995 ஆம் ஆண்டு நீலன் திருச்செல்வம், அரசமைப்புத் திருத்த வரைபு ஒன்றைச் சமர்ப்பித்தார். அது சரியான வரைபு. அது ஏற்கக் கூடியது. ஆனால், பின்னர் 2000 ஆம் ஆண்டு அந்த வரைபின் அடிப்படையில் சந்திரிகா ஒரு திருத்த வரைபை சமர்ப்பிததார். அந்த வரைபு நீலன் திருச்செல்வத்தின் வரைபின் அரைகுறையான ஒரு தொகுதியாகும்.

*கேள்வி:* கடந்த ஒரு வருடமாக நடைமுறையில் உள்ள புரிந்துணர்வு உடனபடிக்கையில் ஏதாவது திருத்தம் செய்யப்பட வேண்டியுள்ளதா?

*பாலா:* போர்நிறுத்தம்தான் ஒரு வருடம் நடைமுறையில் உள்ளது. இதில் எத்தனையோ சவால்கள்; எத்தனையோ பிரச்சினைகள்; எத்தனையோ ஆத்தரமூட்டும் செயலகள். இவற்றின் மத்தியிலும் போர்நிறுத்தம் பேணப்பட்டுத்தான் வருகினறது.


போர்நிறுத்த மீறல் என்று கண்காணிப்புக்குழு கூறுவதில் அர்த்தமில்லை. 400 போர்நிறுத்த மீறல்கள் உண்டு என்று கூறினால் அதில் 350 மீறல்கள், நாம் இளைஞர்களைப் படையில் சேர்ப்பது தொடர்பாகத்தான் இருக்கும். அவற்றை யுத்தநிறுத்த மீறல் என்று பெரிதாகக் கூறமுடியாது. சின்னச் சின்ன குற்றச்செயல்களுடன் சேர்ந்ததாகத்தான் அது இருக்கும். இதை வைத்துக்கொண்டு புலிகள் ஆயிரம் போர்நிறுத்த மீறல்களில் ஈடுபட்டனர். இராணுவம் 50 மீறல்கள் தான் செய்தது. என்று எம்மீது பழியை சுமத்துகிறார்கள். அதுதவிர பாரிய யுத்த நிறுத்த மீறல்கள் நடைபெறவில்லை.

ஓர் ஆண்டுகாலத்தில் எல்லா சூழ்நிலையிலும் புலிகள் உறுதியாக, நிலையாக நின்று யுத்தநிறுத்தத்தை பேணி வந்துள்ளனர்.

கடந்த ஐந்து மாதங்கள் ஐந்து

(10 ஆம் பக்கம் பார்க்க)


# முழு உலகிற்கும் புதிய நுழைவாயில்



# டயலொக் Global

## IDD அழைப்புக்கள் நிமிடத்திற்கு ரூ.25/-

- எந்தவொரு தொலைபேசியிலிருந்தும் உலகின் எப்பகுதிக்கும் அழைப்பு எடுக்கலாம்.
- உடனடி இணைப்பு. நம்பமுடியாத தெளிவு!
- வினாடி அடிப்படையில் கட்டணம்!




- டயலொக் விற்பனை முகவர்கள், கடைகள் மற்றும் ஆர்கேடுகளில் ரூ.500/- க்கு டயலொக் குளோபல் கணக்கு அட்டை ஒன்றை வாங்கலாம்.
- ரூ. 400/- கிறெடிற் முன்கூட்டியே சேர்க்கப்பட்டுள்ளது.
- "கிற்" அல்லது "சரு" அட்டை மூலம் றீசார்ஜ் செய்யலாம்.

### நீங்கள் 77 க்கு மேற்பட்ட நாடுகளுக்கு அழைப்பு எடுக்கலாம்.

நிமி./ரூ. 25 : அன்டோரா, ஆர்ஜன்டீனா, அவுஸ்திரேலியா, ஒஸ்திரியா, பெல்ஜியம், புருணை, கனடா, சிலி, குறோவேசியா, செக் குடியரசு, டென்மார்க், பின்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, கிரேக்கம், ஹொங்கொங், ஹங்கேரி, ஐஸ்லாந்து, இந்தோனேசியா, அயர்லாந்து, இத்தாலி, ஜப்பான், மலேசியா, மோல்டா, நெதர்லாந்து, நியூசிலாந்து, நோர்வே, பிலிப்பீன்ஸ், போலந்து, போர்த்துக்கல், ரஷ்யா, சிங்கப்பூர், தென்னாபிரிக்கா, தென் கொரியா, ஸ்பெயின், சுவீடன், சுவிற்சர்லாந்து, தாய்வான், ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, ஸிம்பாப்வே.

நிமி./ரூ. 35 : அல்பேனியா, அல்ஜீரியா, பங்களாதேஷ், பெர்மூடா, பொஸ்னியா, பொட்சுவானா, பிறேசில், பல்கேரியா, புருண்டி, சைப்பிரஸ், எகிப்து, எஸ்தோனியா, கானா, இந்தியா, ஈரான், கசகஸ்தான், கென்யா, லத்வியா, லித்துவேனியா, மக்காவு, மெக்ஸிக்கோ, மொல்டோவா, நமீபியா, ரொமேனியா, தாய்லாந்து, துருக்கி, உகண்டா, உக்ரெயின்.

நிமி./ரூ. 50 : குவைத், மடகாஸ்கர், மொறீஷியஸ், மொராக்கோ, நைஜீரியா, பாகிஸ்தான், செனீகல், சவுதி அரேபியா, தன்சேனியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ்.

நிமி./ரூ. 60 : பஹறெயின், கம்போடியா, வியட்நாம்.

எந்தவொரு தொலைபேசி மூலமும் அழைக்கலாம்

சர்வதேச ஹொட்லைன் - 077 7 567 567

A FULLY OWNED SUBSIDIARY OF TELEKOM MALAYSIA

MindsFCB

# "...நிலவினைக் காணாது நீண்ட காலம் வாழ்ந்து சாதனை படைத்தவர்கள்..."

...களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதி ஒருவர் அங்கிருந் தவாறு வரைந்து அனுப்பிய கடிதம் இது...

## சிறையிலிருந்து ஒரு கடிதம்

அன்பின் நண்பனுக்கு

நீங்கள் அனைவரும் நலமாக இருக்க வேண்டும். நாம் இங்கு நலமே உள்ளோம். உனது கடிதம் கிடைத்தது. மிக்க மகிழ்ச்சி. ஏன் நீண்ட நாள்களாக கடிதம் போடவில்லை!? எனவும் எங்களை மறந்துவிட்டாயா? எனவும் கேட்டு எழுதி இருந்தாய் நண்பனே! நான் உங்களை நினைப்பதே இல்லை உண்மைதான் ஏன் என்றால் உங்களை மறந்தால்தானே நினைக்க முடியும்.

நீ உனது கடிதத்தில் இரைமீட்டியுள்ள பழைய நினைவுகளை வாசிக்கும் போது எனது நெஞ்சுக்கூடு என்னையறியாமல் கனக்கிறது. நாம் மீண்டும் எப்போது ஒன்று சேர்வோம்; எங்கள் இனிய ஊர்வாசனையை எப்போது அனுபவிப்போம் என என்மனம் ஏங்குகின்றது.

வன்னி மீது தாண்டவமாடிய பொருளாதாரத்தடை தற்போது தளர்ந்துள்ளதாக எழுதியிருந்தாய். பொருள்களுக்கு மிகவும் தட்டுப்பாடு நிலவிய போது உங்களின் துன்பங்கள் எத்தகைய கொடியது என என்னால் உணர்ந்துகொள்ள முடிகின்றது. ஆனால், துன்பத்திலும் ஓர்நிறைவான இன்பமாக, சுதந்திரமாக யாரின் அச்சுறுத்தலும் இன்றியும், எந்நேரத்திலும் வதியால் செல்லமுடியும் என எழுதியிருந்தாய் உண்மைதான், வெயிலில்தான நிழலின் அருமை தெரியும். அராஜகத்தில்தான் மனிதாபிமானத்தின் அருமை தெரியும் அடக்குமுறையில்தான் சுதந்திரக் காற்றின சுவை தெரியும் எனக்கு இப்போதுதான் சுதந்திரக்காற்றின் அருமை நன்றாகப் புரிகின்றது.

இருக்க, இங்குள்ள நிலைமைகள் பற்றி எழுதும்படி பல கடிதங்களில் நீ கேட்டிருந்தாய் நானும் அவற்றைக் கண்டும் காணாததுபோல பதில் எழுதாது விட்டு விட்டேன். ஆனால், இம்முறை கட்டாயமாக எழுதும்படி வற்புறுத்தியுள்ளாய். இருந்தும் எனது துன்ப, துயரங்களை, உணர்வுகளை என்னுடனேயே கட்டுப்படுத்திக்கொள்ள நான் நிறையவே கற்றுக்கொண்டுவிட்டேன். இவை காலத்தின் தேவைகளுடன் என்னையும் கொண்டு செல்ல இலகுவாக இருப்பதுடன், எவரின் உணமையான அனுதாபங்கள் கூட என்னைப் பின்னே தள்ளிவிடக் கூடாது என்பதில் மிகவும் உறுதியாக உள்ளேன். இவற்றினால் மட்டுமே எனது துன்பங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதில் நழுவல் போக்கினைக் நான் கடைப்பிடித்தேன் என்பது இப்போது உனக்கு நிறையவே புரிந்திருக்கும்.

தடுப்புக் காவல் (Detention), சிறையடைப்பு (Imprisonment) இரண்டிற்கும் நிறைய வித்தியாசங்கள் உண்டு. தடுப்புக்காவல் என்பது எம்மைக் கைதுசெய்து இராணுவப் பொலீஸ் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல். இதன்போதுதான் விசாரணை எனும் பெயரில் அரை சித்திரவதைகள். "விசாரணைக்காக" எனக் காரணம் கூறிக் கொண்டு எமது உடல்களில் அரசின் இராணுவ, பொலீஸ் இயந்திரங்களின் கோரப்பற்கள் தனது கிறுக்கல் சித்திரங்களை வரைந்து விடும். இவை மனித நாகரிகத்திற்கு அப்பாற்பட்டு, ஒரு மனிதன் பாடையேறும் நாள்வரை மாறாத ரணங்களாகியும், நிரந்தர வடுக்களாகியும் விடுகின்றன. மறுபுறத்தில் உளவியல் ரீதியான பாரிய தாக்கங்களையும் ஒரு சராசரி மனிதனின் ஆத்மபலத்தினையும் சிதைத்துவிடுகின்றன. இதன்பின்னரும் உயிர் இருப்பின் நீதிமன்ற விசாரணையை எதிர்நோக்கி நீதிமன்றின் பாதுகாப்பில் தடுத்து வைத்தல் இதை சிறையடைப்பு எனக் கூறலாம்.

இங்கு நான் உனது மனக்கண்முன் காட்ட முனைவது சிறை வாழ்க்கையை (prison life) இங்கு ஏற்படும் எல்லா உணர்வுகளையும், நிகழ்வுகளையும் எழுத்தில் வடிக்கும் ஆற்றல் எனக்கில்லை பள்ளிப்பருவத்தில் எமது தமிழ் ஆசான் கோவிந்தப்பிள்ளை வாத்தியாருக்கு கோபமூட்டுவதிலேயே இன்பங்காணும் முட்டாள் தனத்தின் அதிஉச்சியில் கூத்தாடிய தன் விளைவான, கசப்பான கனிகளை இப்போது சுவைக்கக் கூடியதாகவுள்ளது.

இருந்தும் இராமாயணம் என்பது ஒரு பாற்கடல் என்றும், ஒரு பூனை அதை நாக்கினால் நக்கிக்குடிக்க முயன்றதுபோலவே தான் கம்பராமாயணத்தை எழுதியதாக கம்பர் கூறியுள்ளது போலவே இங்கு வகை தொகை இல்லாது ஏற்படும் உணர்வுகளிலும் ஆத்மாவைப் பிழியும் வேதனைகளிலும் என்னால் முடிந்தவரை சிலவற்றிற்கு மெய்யுருகொடுக்க முனைகின்றேன்.

"இடுக்கண் வருங்கால் நகுக" என பொய்யாமொழிப்புலவர் கூறியுள்ளார். அதுதான் என்னவோ தடுப்புக் காவலின் பின்னர் இங்குவரும் சிலர் தொடர்ச்சியாகவே சிரித்துக்கொண்டு இருக்கின்றார்கள். பொலீஸ் விசாரணை முடிய சிறைக்கு வருபவர்கள் ஒவ்வொருவரின் நிலையும், ஊரில் ஓலை மிதிக்கும்போது கீழே அகப்பட்ட புற்கள் ஒரு வாரத்தின் பின் மீண்டும் ஓலையை எடுக்கும்போது காணப்படுவதைப் போன்றே காணப்படுவர். இங்கு எமது உணர்வுகள் அனைத்தும் நான்கு சுவர்களுக்குள், பருத்த இரும்புக் கம்பிகளுக்குப் பின்னால் முடக்கப்பட்டுள்ளது. சாதாரண மனித சஞ்சாரங்களையோ மரம், செடி, கொடிகளையோ பார்க்கமுடியாது. மாறாக இறுக வரியப்பட்ட முட்கம்பிச்சுருள்களும், காவற்கோபுர நீண்ட துப்பாக்கிகளும் அதற்கு காவலாக சீருடைக்காரர்களும், எங்கு திரும்பினாலும் பிரமாண்டமான சிறைச்சாலைச் சுற்றுச் சுவர் மட்டுமே தெரியும்.

நிலவினைக் காணாது நீண்ட காலம் வாழ்ந்து சாதனை படைத்தவர்கள் எனும் பெருமை எங்களுக்குண்டு. அதனால், ஒரு சந்தேகம்!, சிறுபருவத்தில் நிலவினைக் காட்டி சோறு ஊட்டும்போது அம்மம்மா கூறும் நிலவினில் தெரியும் அப்பம் சுடும் பாட்டி இருக்கிறாவா? என்பதை அடுத்த மடலில் மறவாமல் எழுதிவிடவும்.

எமக்கு இங்கு தரப்படும் உணவுகள் ஒருவகையில் விசித்திரமானதாகவும் அதேவேளை, விநோதமானதாகவும் இருக்கும். நாம் ஊரில் முசுப்பாத்திக்கு பனம்பாத்தியில் பயிரிட்டு மாலை வேளைகளில் அவிச்சுச் சாப்பிடும் வற்றாளைக் கிழங்கில் இங்கே கறி சமைப்பார்கள். ஈரப்பிலாக்காயை கழிப்பிற்கு வெட்டுவது போல் வெட்டி கறி ஆக்கி ஆளுக்கு ஒரு துண்டு தருவார்கள். அத்துண்டின் இடைநடுவில் பால்வருவதை சக கைதிகள் அடிக்கடி காட்டுவார்கள்.

வாழ்வின் காலம் முழுக்க பண்டா ஐயாவுக்கு சேவை புரிந்து சோர்ந்து விட்ட இனியும், வாழ்வும் இல்லை பண்டா ஐயாவுக்கு உழைப்பு இல்லை என்ற நிலையில் உள்ள எருமை மாட்டு இறைச்சியை , சிறிய கீலங்களாக வெட்டி ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு துண்டு தருவார்கள். இந்த முத்தல் இறைச்சித்துண்டை கொடுப்புக்குள் வைத்து கையால் இழுத்துச் சாப்பிடும் போது ஏற்படும் கண்றாவி! ஓர் எலும்புத்துண்டை நாய் சாப்பிட முனையும் போராட்டக் காட்சியை நினைவூட்டும். அத்துடன், இவ்விடம் தரப்படும் மீன்களை உண்ணும் போதுதான் புரியும் இப்படிச் சுவையில்லாத மீன்களும் கடலில் இருக்கின்றன என்று இம்மீன்கள் கடலில் வாழ்ந்த காலத்தை விட நிச்சயமாக குளிர்சாதனப்பெட்டியில் இருந்த காலங்களே அதிகம்.

இவ்விடம் ஒரு மரக்கறிக்கு கைதிகளால் 'நோ குட்' (No good) என்ற பெயர் சூட்டி அழைக்கப்படும். இன்றைய எமது சாப்பாட்டிற்குரிய மரக்கறி என்ன என்பதை இலகுவாக எவரும் அறிந்துகொள்வதற்கு இவ்விடம் வரவேண்டிய தேவையில்லை. இன்று சந்தையில் எந்த மரக்கறி மிகவும் மலிவாக இருக்குமோ அதுவாகத்தான் இருக்கும். அத்துடன், இங்கு தரப்படும் பாணின் பங்கீட்டு அளவு மிகவும் நேர்த்தியானது. ஒரு பாணை நானகாக வெட்டியதில் ஒரு துண்டும் ஒரு பாணை எட்டாக வெட்டியதில் ஒரு துண்டும் வழங்கப்படும். "கும்பியுடன் சாப்பிட்ட மாட்டிற்கு கிள்ளிப்போட்டால் அடங்குமா? என்ன செய்வது" என என்னுடன் இருக்கும் வயது போன ஐயா விதியை நொந்து அதன்மீது பழியைப் போடுவார்.

இதில் இன்னுமொரு சங்கதி என்னவென்றால், நாங்கள் ஊரில் ஆடு, மாடுகளுக்கு குரும்பை அறுத்து வைக்கும்போது கூட மூழ் நன்றாக அகற்றிய பின்பே வெட்டி வைப்போம். ஆனால், இங்கே வரும் கத்தரிக்காய் கறியினுள் மூழ்கள் நீக்கப்படாது, மரத்திலிருந்து பிடுங்கியபடியே அவிக்கப்படும், அதுமட்டுமல்ல "ஒன்றிலேயே இரண்டு இருத்தல்" (Two in one) என்ற முறையில் கத்தரிக்காயினுள் புழுக்கள் அவிந்திருக்கும். ஆனால், ஒரு வித்தியாசம் இறால்போன்று



சுரண்டு இருக்காது. அம்மியே ஆகாயத்தில் பறக்கும் போது இலவம் பஞ்சின் நிலைமையைச் சொல்லவேண்டியதில்லை. இதுபோலத்தான் கோவாவும், போஞ்சியும், கரட்கறியும் இங்கு கறிசமைத்தல் என்று நான் எழுதுவதை நீ தவறாக கற்பனை செய்துவிடக் கூடாது. உப்பையும் தூளையும் போட்டு அவித்து இறக்குவதையே இங்கு கறிசமைத்தல் எனக் கூறுகின்றேன்.

ஒட்டு மொத்தத்தில் இங்கு தரப்படும் உணவு ஆன்மா உடலைவிட்டு அகன்றுவிடாமல் பிடித்து வைத்துக் கொள்வதற்காக மட்டுமே தரப்படுகின்றன நண்பா! நான் முன்பு உன்னுடன் இருந்து சாப்பிடும்போது வேகமாகச் சாப்பிடுவதாக அடிக்கடி பேசுவாய் ஆனால், இப்பொழுது நான் அப்படிச் சாப்பிடுவதில்லை. சாப்பிடவும் முடியாது. ஏனென்றால் இங்கு தரப்படும் சோற்றினுள் இருக்கும் கற்கள் இடம்தராது. சோறு சாப்பிடும்போது நாம் மிகவும் அவதானமாகவும் ஆறுதலாகவும் சாப்பிடுவோம். சில சமயங்களில் எமது அதி உயர் நிலையிலிருந்தும் தப்பி எதிர்பாராமல் கடிபடும்போது யாரோ ஒளிந்திருந்து உச்சந்தலையில் உலக்கையால் அடித்தமாதிரி இருக்கும் இந்தச் சத்தத்தைக் கேட்டுவிட்டு சக நண்பர்கள் பொய்க்கோபக் குறியுடன் 'நீ எமக்குத் தெரியாமல் ஏதோ பொரியலுடன் சாப்பிடுகிறாய்' என ஊடல் கொள்வார்கள். குறைகள் பற்றி சிறை பொலதிகாரியிடம் முறையிட்டால் 'நல்ல சாப்பாடுதானே வடிவாகச் சாப்பிடுங்கள்' எனக்கூறுவார். இது ஒருவனுக்கு கோமணத்தை கொடுத்துவிட்டு வடிவாகப் போர்த்துப்படு எனக்கூறுவதைப் போல் இருக்கும்.

எமது உறக்கத்தில் கூட பாரிய போட்டிகள். வேறு யாருடனும் அல்ல எமது வாட்டில் இருக்கும் இன்னுமொரு ஜீவன் மூட்டைப் பூச்சிகளுடன்தான். ஆனால், அவற்றின் நடமாட்டமோ வாழ்க்கை முறைகளோ இரகசியமான தொன்றல்ல. அனேகமான சமயங்களில் தமது உணவிற்காக எம்மை நம்பி வந்து ஏமாற்றத்துடனேயே திரும்பிச்செல்கின்றன. மூட்டை, நுளம்பு இவற்றிற்கு மருந்து அடிப்பதாகக் கூறிக் கொண்டு யாராவது வருவார்கள், மருந்து அடிப்பார்கள். ஆனால், அம் மருந்தில் நுளம்புகளும் மூட்டைகளும நீந்திவிளையாடும் அற்புதக்காட்சியைக் கண்டால் அழுவதா? சிரிப்பதா? எதுவும் புரியாது.

நாம் இருக்கும் பிரதேசத்தைச் சுற்றி இறப்பர் காடு. அதனூடு வெளியேறும் வெப்பக்காற்று, எம்மைச் சுற்றியுள்ள பிரமாண்டமான மதில்களால் வெளியேற்றப்படும் வெப்பத்தையும் ஒரு குறித்த இடத்தில் அதிக கைதிகளை அடைப்பதால் ஏற்படும் மனித வெக்கை அதை மேலும் மோசமாக்கும். எமது சிறைச் சாலைகளிலுள்ள ஜன்னல்கள், யானைக்கும் அதன் வாலுக்கும் உள்ள அளவுப் பரிமாணத்திலேயே இருக்கும்.

நண்பா! நீயும் ஒரு வைத்தியன் தான், ஆனால், நீ இதுவரை கண்டிராத நோய்கள் அங்கே உண்டு. சுருங்கச் சொன்னால் எனக்கு கால் நகத்தில் இருந்து உச்சந்தலை முடிவரை வருத்தம் உண்டு. சம்பிரதாயத்திற்காக இங்கு ஒரு வைத்தியசாலையும், ஒரு வைத்தியரும் உண்டு. இங்கு சர்வரோகநிவாரணியாக பனடோல் (Panadol) வழங்கப்படுகின்றது. ஊரிலே உழக்கு வந்தாலும் அம்மா பத்தியச் சாப்பாடுதான் தருவார். ஆனால், இங்கு அம்மை வந்தாலும் ஆற்றுப்படுத்த யாரும் இல்லை. கடவுளின் புண்ணியத் தில் தானாக மாறினால் சரி. வயிற்றுக் குத்தோ, தலையிடியோ வரும்போது ஏற்படும் அவஸ்தையின் கனபரிமாணம் சொல்லி மாளாது. நண்பா! நான் இவ்விடம் இருந்து உயிருடன் மீண்டும் திரும்பி வந்தால் உனது மருத்துவ மேற்படிப்பிற்கு நிச்சயமாக மிகவும் பிரயோசனமாக இருப்பேன். தொடர்ச்சியாக நிலத்தில் இருந்து கால்மொழிகள் தாட்டான் குரங்கின் பின்புறம் போல காய்ந்து சிவந்துவிட்டன.

எனது உறவினர்கள் என்னைப் பார்க்க இவ்விடம் வரும் போது என்னிடம் கேட்பார்கள் 'நன்றாக இருக்கிறாயா?' என்று. அவ்வேளைகளில் என்னுள் ஏற்படும் மன உணர்ச்சிக் கொந்தளிப்புக்களின் பந்தாட்டங்களுக்கு மத்தியில் முகத்தில் உண்டாகின்ற அனைத்து எண்ணங்களையும், பிரதிபலிப்புக்களையும் அடக்கிக்கொண்டு "எனக்கு என்ன பிரச்சினை இங்கே" என்கின்ற ஒரு குணச்சித்திர நடிகனின் கதாபாத்திர நிகழ்வு தொடர்கிறது.

இது கணனியுகம் உலகம் வேகமாக முன்னேறிக் கொண்டு இருக்கிறது. வேற்றுக் கிரகத்தில் குடியேற அமெரிக்கர்கள் ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால், இவற்றிற்கு எல்லாம் நேர் எதிரிடையாக இங்கே கற்கால மனிதர்களின் செயற்பாடு எப்படி இருந்தது என்பதை கண்கூடு பார்க்கலாம். கல்லை உரசி நெருப்பினை உண்டாக்குவார்கள். கற்கள் இரும்புத்துண்டுகளைக் கூராக்கி தங்கள் தேவைகளுக்குப் பயன்படுத்துவார்கள். மனித நாகரியங்கள் ஆற்றுப்படுக்கைகளில்தான் தோன்றிய வரலாறுகள் கூறுகின்றன. என்ன ஒற்றுமை எமது சிறைச்சாலையும் களுகங்கையின் ஆற்றுப்படுக்கையில் அமைந்துள்ளதுடன் எமது வாழ்வுகளையும் விழுங்கிக்கொண்டிருகின்றது.

யாழ்ப்பாணத்தில் நாம் ஊதி மோட்டார்சைக்கிள் இயக்கியது ஞாபகம் இருக்கும் தேவைகள்தான் கண்டுபிடிப்புக்களின் தந்தை எனச்சொல்வார்கள் (Necessity is father of Invention). தேவைகள் எம்மைத் துரத்தும் போது நாமும் சூழ்நிலைக்கு ஏற்றால் போல சில கண்டுபிடிப்புகளைச் செய்து எப்படியோ நிலைமைகளைச் சமாளித்து வருகிறோம். சில சூழ்நிலைகள் எம்மை நிர்ப்பந்திக்கும்போது விரும்பாதவற்றையும் விரும்பவேண்டிய நிலை (Need must when devil drives).

இங்கிருக்கும் சிறைக் காவலர்களும் பாவங்கள்தான். அவர்களின் முகங்களிலும் ஒரே வறுமைக்கோடுகள் ஆனால், அவர்களில் சிலர் தமக்கு ஏதோ அதீத புத்திசாலித்தனமும், அரசியல் ஞானமும் உள்ளதாக எமக்குக் காட்ட அவஸ்தைப்படுவதைப் பார்க்கும்போது மிகவும் பரிதாபமாக இருக்கும். சில சிறைக்காவலர்கள் எங்களிடம்தான் ஏதாவது வாங்கிச் சாப்பிடுவார்கள், புகைப்பார்கள். அப்படியாயின் நான்தானே புகைப்பதில்லை ஏன் சிகரெட், பீடி வைத்திருப்பதாக எண்ணுவாய். நியாயம்தான் இங்கு பணத்திற்கு மாற்றூடகமாக சிகரெட், பீடி என்பவையே பயன்படுத்தப்படும்.

தங்களின் வாழ்வின் இறுதிக் காலங்களை தங்கள் குடும்பத்தினருடன் சந்தோஷமாக கழிக்கவேண்டிய முதியவர்கள், அவர்களின் மனப்போராட்டங்களை எவ்வகையிலும் விவரிக்கமுடியாது. அவர்களால் ஆர்ப்பரித்துக்கதவோ அன்றி, மௌனமாக அழவோ சூழல் இடம்தராவிட்டாலும், மனதில் அடங்கியுள்ள ஆதங்கங்களும், ஏக்கங்களும் அவர்களை மேடையில்லாப் பாடகர்களாக்கிவிடும் அவர்களின் நெஞ்சுக் குழியிலுள்ள விம்மல்கள் குரல்வளையினூடு கண்ணதாசனின் கீர்த்தனைகள் சிலவற்றை வெளித்தள்ளும் அவ்வாறான பாடல்களின் இதம் மனதின் அடியாழங்களை, பரிசங்களை ஆழமாகத் தட்டி எழுப்பும். அப்படியான பாடல்களின் சிலவரிகள்.

*"பானையிலே சோறு இருந்தால்*
*பூனைகளும் சொந்தமடா*
*சோதனையில் பங்குகொள்ள*
*சொந்தமில்லை பந்தமில்லை"*

*"சோதனை மேல் சோதனை*
*போதுமடா சாமி*
*சோதனைதான் வாழ்க்கை*
*என்றால் தாங்காது பூமி"*

இப்பாடல்கள் எந்த இராகமோ, வாத்தியமோ இன்றி அவர்களால் பாடப்படும் போது அவை உடைந்துபோன இதயங்களுக்கு எவ்வளவு ஒத்தடம் கொடுக்கின்றது என்பதை புரிந்து கொள்ள முடிகின்றது.

இங்கிருப்பவர்கள் அனேகருக்கு வழக்கு என்பது எப்போதும் நழுவிப் போகும் ஒன்றாகவே இருக்கின்றது. இங்கிருந்து அப்புக்காத்து ஒருவரை ஒழுங்கு செய்வது தண்ணீருக்குள் கைவைத்து மீன் பிடிப்பது போன்றது. புதிய அரசு பதவி ஏற்றதைத் தொடர்ந்து இவ்விடம் நிறைய அரசியல்வாதிகள் எங்களைப் பார்வையிட வந்தனர். சில அரசியல்வாதிகளுக்கு

(IV பக்கம் பார்க்க)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Compaq Pen II 350 MMX கணனிகளும் கையடக்கத் தொலைபேசிகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 34, சட்டநாதா றோட், திருநெல்வேலி. T.P:222 3786

### காணி விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கு, உப்புமடச் சந்திக்கு அண்மித்த தாவடி பார்மஸிக்கு முன்பாக பயன்தரு மரங்கள் நிறைந்த 3 பரப்புக்காணி உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு 222 2521 (15518)

சுழிபுரம் பறாளை வீதியில் 25 பரப்பு நெற்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P: 01-559502. (சி-26905)

### நெல் விற்பனைக்கு

தரமான வெள்ளைச் சம்பா நெல் 30மூடை விற்பனைக்குண்டு. தொடர்பு: வே.சிற்றம்பலம், பிரசாத் வீதி, நவாலி தெற்கு, மானிப்பாய் T.P.2121.(15449)

### திருமண சேவை

எம்மிடம் அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, சுவிஸ், ஜேர்மன், பிரான்ஸ் நாடுகளிலும் பிரஜாவுரிமை பெற்ற மணமக்களினதும் உள்நாட்டில் டாக்டர், இஞ்சினியர், எக்கவுண்டன், தனியார் துறையில் பணிபுரியும் தராதரமான மணமக்களின் குறிப்புக்கள் எம்மிடம் உள்ளன. தொடர்பு: கமலக்கண்ணன் திருமண சேவை, 298, கோயில் வீதி, நல்லூர் (கம்பன் கோட்டத்திற்கு அருகில்).

(15430)

1965ஆம் ஆண்டு, செவ்வாய் அற்ற France இல் வதிவிட உரிமையுள்ள வந்துள்ள ஆணுக்கு, படித்த குடும்பப் பாங்கான பெண் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். துர்க்கா திருமண சேவை, இல.178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(15520)

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு 37-45 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை. தாரம் இழந்தவர்களும் தொடர்பு கொள்ளலாம். மதம் கவனிக்கப்படமாட்டாது. சகல விவரங்களுடன் உடன் தொடர்புகொள்ளவும். தொடர்பு: விளம்பர இல. 1818 மே/பா உதயன், யாழ்ப்பாணம். (15349)

யாழ். இந்து கௌரவ குடும்பம், 30 வயது, **5'6"**, பூராட நட்சத்திரம், லக்கினத்தில் செவ்வாய், 44 கிரக பாவமுடைய அமெரிக்காவில் சொந்த தொழில் புரியும், படித்த மகனுக்கு அமெரிக்கா, கனடாவில் வசிக்கும் அல்லது அமெரிக்கா செல்லக்கூடிய மணமகள் தேவை. உள்நாட்டவரும் விண்ணப்பிக்கலாம். மணமகன் இந்தியாவுக்கு வந்து திருமணமாகி விசா எடுத்து அமெரிக்கா செல்ல ஒழுங்குகள் செய்யப்படும். தொடர்பு: விளம்பர இல. 1814 மே/பா உதயன், யாழ்ப்பாணம்.

(சி-26919)

1977இல் பிறந்த, 12இல் செவ்வாய், 25 பாவமுடைய B.A. பட்டதாரியான, கொம்பியூட்டர் Dip. முடித்து கொழும்பு அரச வங்கியில் தராதரமான தொழில் பார்க்கும் மணமகனுக்கு வெளிநாட்டில் பிரஜாவுரிமை பெற்ற மணமகள் தேவை. தொடர்பு: 298, கோயில் வீதி, நல்லூர் (கம்பன் கோட்டத்திற்கு அருகில்).

(15431)

### தவறிவிட்டது

வட்டுக்கோட்டை, சித்தன்கேணியைச் சேர்ந்த குலசிங்கம் குலசுந்தரி என்பவரது தேசிய அடையாள அட்டை (மாத்தளை முகவரியுடைய இலக்கம் 618490637X), விசேட அடையாள அட்டை, திறப்புக்கோர்வை, கொப்பிகள் மற்றும் சில ஆவணங்கள் அடங்கிய கறுப்பு நிற பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியில் ஒப்படைத்து தவவும்.

(15514)

## நன்றி நவிலலும் 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

பூவுலகில் 24 - 10 - 1944



வானுலகில் 11 - 02 - 2003

### அமரா இராஜதுரை ஜீவரட்ணம்

**(ஓய்வு பெற்ற கடற்படைத்தள உத்தியோகத்தர்)**

11. 02. 2003 அன்று சிவபதமடைந்த எங்கள் மைத்துனர் அவர்களின் திடீர் மறைவையொட்டி நேரில் வருகை தந்தோருக்கும் தந்தி, தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவிகள் புரிந்தோருக்கும் எங்கள் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (13. 03. 2003) வியாழக் கிழமை கன்னியா தீர்த்தக்கரையில் நடைபெறும். தொடர்ந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதிய போசனமும் அவரின் இல்லமான இல. 44, கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலையில் நடைபெறும்.

க.தர்மகுலசிங்கம் (மைத்துனர்)
(இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்),
த.நீலலோஜினி (சகோதரி)
(யா/பெரியபுலம் ம.வி.).

T.P:026-22[illegible]2 (C/26914)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 01 - 03 - 1914



மறைவு 12 - 02 - 2003

### அமரர் சுந்தரம் சின்னத்தம்பி (இளைப்பாறிய அதிபர்)

***(திதி: 14.03.2003)***

அளப்பரிய சேவையாற்றி அமரராகிவிட்ட அதிபரே!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். ஓம் சாந்தி!

சித்திரபானு வருடம் தை மாதம் 30ஆம் நாள் 12.02.2003 புதன்கிழமை ஏகாதசித் திதி கூடிய தினத்தில் சிவபதமடைந்த எங்கள் அன்புத் தந்தையார் சுந்தரம் சின்னத்தம்பி (இளைப்பாறிய அதிபர், மந்துவில்) அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (13.03.2003) வியாழக்கிழமை காலை 9.00மணிக்கு வில்லூன்றித் தீர்த்தக்கரையில் நடைபெறும்.

நாளை (14.03.2003) வெள்ளிக்கிழமை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நிகழவிருக்கும் அவரது அத்மசாந்திப் பிரார்த்தனை, பஜனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து சகல வழிகளிலும் உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் வழங்கியவர்களுக்கும் அனுதாபச் செய்தி, மலர்வளையங்கள் அனுப்பிவைத்த சகலருக்கும் நாம் சிரம் தாழ்த்த' நன்றி நவில்கின்றோம்.

இடம்பெயர்வு காரணமாக பலரின் அழைப்பிதழ்கள் விநியோகிக்கப்படாமையால இதனையே அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
லயன் டாக்டர் அருளானந்தம் குடும்பம்.
இளம்பிறைநாதன் குடும்பம்
(உதவிப் பொது முகாமையாளர், மக்கள் வங்கி),
தேவமலர் குடும்பம்.
யோகராசமலர் (ஆசிரியை) குடும்பம்.
பொற்கிளி (பிரான்ஸ்) குடும்பம்.

*45,ஆடியபாதம் வீதி,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.* (15509)

## பண்டத்தரிப்பு இந்து மாணவரின் ஒன்றுகூடல்

சண்டிலிப்பாய்,மார்ச்13

பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி உயர்தர மாணவர் மன்றத்தின் வருடாந்த ஒன்றுகூடல் வைபவம் எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் நடைபெறவுள்ளது. யாழ் கல்வியியற் கல்லூரி அதிபர் த.கமலநாதன் இதில பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார்.

(ஒ-135)

## நிலவினைக் காணாது...

(III ஆம் பக்கத் தொடர்ச்சி)

இது ஒரு தொல்பொருள்காட்சிச் சாலை என்ற நினைப்பு. ஆனால், அதுவும் ஒரு வகையில் உண்மைதான் ஏன் என்றால் 1990 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டவர்களும் இருப்பதினால். வந்த அரசியல்வாதிகள் சொன்ன கதைகள், வாக்குறுதிகள் எங்களுக்கு பொன்னாடை போர்த்தப்படுவதாக உணர்த்தியது ஆனால், இப்போது கட்டியிருந்த கோவணங்களும் களவு போயுள்ளது போன்ற உணர்வு.

சில அரசியல்வாதிகள் பேசும்போது தங்கள் தலையில் தான் முழுப்பிரச்சினையும் உள்ளது போன்று அதிகாரம் பொறிபறக்கும் இதைக் கண்ணுற்ற மிகவும் வயதில் சிறிய ஒரு சக கைதி பாடினான்.

*பரமசிவன் கழுத்திலிருந்து பாம்பு கேட்டது*
*கருடா சௌக்கியமா?- யாரும் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால்*
*எல்லாம் சௌக்கியமே!*
*கருடன் சொன்னது-அதில்*
*அர்த்தம் உள்ளது.*
*நிலைமை கொஞ்சம் இறங்கி வந்தால்*
*நிழலும் கூட மிதிக்கும்"*

இப்பாடல் அந்தச் சந்தர்ப்பத்திற்கு மிகவும் பொருத்தமாக இருந்தது.

"எரிகின்ற வீட்டில் பிடுங்கின கொள்ளி மிச்சம்" **(Make the best of a bad job)** என்பது போல கசக்கப்பிழியப்பட்ட எனது வாழ்க்கையில் ஆத்மபிரவாகமாக வந்து விழுந்த அனுபவங்களைப் பெற்ற மனநிறைவு ஒரு கவிஞன் கூறியது போல

*"உளியின் துன்பம் பொறுத்த கல்லே சிலையாகும் கொழுவின் காயம் பொறுத்த நிலமே வளமாகும்."*

என்பதற்கிணங்க இவை எல்லாம் என்னை இன்னும் புடம் போட்டுள்ளன.

இத்தகைய துயரங்கள் எமது மனவெண்ணங்களில் எந்தவிதமாற்றங்களையும் ஏற்படுத்திவிடாது என்பதையும் நீ அடிக்கடி கூறுவது போல் மாற்றங்கள் என்பது மண்டியிட்டுப் பெறுவது அன்று மாறாக மார்தட்டிப் பெறுவதொன்று என்பதையும் இங்கு நினைவுபடுத்திக்கொள்கிறேன்.

நண்பா! உனக்கு மீண்டும் ஒன்றை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இனப்பிரச்சினையால் ஏற்பட்ட துன்பங்களும் துயரங்களும் ஏதோ என்தலை மீதுதான் ஏற்றிவைக்கப்பட்டதாக நான் கூற இம்மியளவும் விளையவில்லை. மாறாக இங்குள்ள உண்மை நிலைகளை நீ கேட்டதற்கிணங்கவே எழுதுகிறேன். கௌதம புத்தர் என்னிடம் வந்து வடக்கு - கிழக்கில் இனப்பிரச்சினையால் எந்த வகையிலும் பாதிக்கப்படாத ஒருவரைக் கூட்டி வந்து காட்டு, உனது சிறையிரும்பை விடுவிப்பேன் என்றுகேட்டால் நான் கையறு நிலையில்தான் இருப்பேன் என்பது எனக்கு புரியாமல் இல்லை. கோரங்களின் அளவுகளும் அதன் விம்பங்களின் அளவுகளும் தான் சற்று வித்தியாசப்படும்.

வேறு என்னடாப்பா, எமது பட்டி அடைப்பிற்கான அறிகுறிகள் தெரிகின்றன. இன்னும் என்ன, நாளை மீண்டும் நான்கு சுவர்களுக்குள்ளேயே விடியும் என்கிற, நம்பிக்கையில் மட்டுமே நம்பிக்கை வைத்து உள்ளே செல்ல ஆயத்தமானவர்களுடன் நானும் ஒருவன். நாளை விடியும் எமது தேசத்தில் நாங்கள் அனைவரும் சுதந்திரமாக வாழ நிச்சயம் வழிபிறக்கும். அவ்வேளையில் எங்கள் தமிழன்னையின் அடியில் எந்த முட்கம்பி வேலிகளோ தடைமுகாம்களோ இருக்காது. மாறாக சந்தோஷமும் புன்சிரிப்பும் நிறைந்த நல்வாழ்வு இனிதாக உண்டு என்ற எதிர்பார்ப்புடன் விடைபெறும்.

உனது அன்பின் நண்பன்
மு.நம்பி


## நீங்கள் இன்னும் வாசிக்கவில்லையா?

### திருமதி அடேல் பாலசிங்கம் எழுதிய

# சுதந்திர வேட்கை

தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பான ரசமான பல சம்பவங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

உதாரணத்திற்கு இதோ:-

பிரபாகரன் அவர்களுடைய தலைமைப் பணிமனையான 1:4 தளம் என்ற பாசறையை
நோக்கி நாம் சென்று கொண்டிருந்தோம். இந்தப் பிரதேசத்தில் உள்ள பாசறைகள் மீது
இந்தியர் தொடரான தாக்குதல் நடவடிக்கையை நடத்தியிருந்தார்கள். யாழ்ப்பாண தீபகற்பத்தில்
'பவான் நடவடிக்கை' காலத்தில், விடுதலைப் புலிகளை அழித்தொழிக்க முயன்று தோற்றபின்,
இந்தியப்படை வன்னிக்காடுகளில் உள்ள விடுதலைப் புலித் தளங்களை நோக்கித் திரும்பி
குரூரம் பரவிய, இரத்தச் சகதி நிறைந்த களமாக உருமாற்றியிருந்தது.
பாரிய இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
விடுதலைப் புலிப் போராளிகளையும் அவர்களுடைய தலைமையையும்
வெளியே இழுத்து அழித்தொழிக்கும் நோக்கம் ஒன்றே அவர்களிடம் இருந்தது.
இந்த நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த
ஆயிரமாயிரம் புதிய இந்தியப் படையினர் ஈடுபடுத்தப்பட்டார்கள்.

*இதே போல் இன்னும் பல சம்பவங்கள்*
*இனியும் தாமதிக்காதீர்கள்*

**உதயன் பத்திரிகை முகவர்களிடமும், பிரபல புத்தக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.**

பக்கங்கள்: 479 — விலை 500/-

வடக்கு ~ கிழக்கு மாகாண பொதுச்சேவைக்கு இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின்
குடியேற்ற உத்தியோகத்தர் வகுப்பு II 'ஆ' பிரிவுக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கான

# திறந்த போட்டிப் பரீட்சை - 2003

வடக்கு - கிழக்கு மாகாண பொதுச்சேவையின் காணி நிர்வாக திணைக்களத்தில் வெற்றிடமாக உள்ள இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் குடியேற்ற உத்தியோகத்தர் வகுப்பு II ஆ பிரிவுக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்காக கீழே குறிப்பிடப்பட்ட தகைமையுடைய ஆண்/பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி 2003.04.11 ஆகும்.

**02. ஆள்சேர்ப்புக்கான சேவை நிபந்தனைகள்:**

01. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். நியமனம் பெறுபவர்கள் விதவைகள் அநாதைகள் /தபுதாரர் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்துக்கு உதவு தொகை செலுத்துதல் வேண்டும். எனினும் தற்போது நடைமுறையிலுள்ள ஓய்வூதியத் திட்ட நடைமுறையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படுமிடத்து அவற்றுக்கு கட்டுப்பட வேண்டும்.

02. இது ஓர் இடமாற்று சேவையாகும். இந்நியமனம் பெறுபவர்கள் வடக்கு - கிழக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்ற தயாராக இருத்தல் வேண்டும்.

**03. சம்பள அளவுத்திட்டம்:**

பொது நிர்வாக சுற்றறிக்கை 2/97 (iii) இற்கு அமைவாக ரூபா 51,840 7x1,320 - 10x1,560 76,680/- (T-3-1-1)

**04. தகைமைகள்:**

அ. விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

ஆ. வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிரந்தரமாக வதிபவராக இருத்தல் வேண்டும். அதாவது இவ்விண்ணப்ப முடிவு திகதிக்கு முன்னர் உள்ள 06 ஆண்டு காலப் பகுதியில் ஆகக் குறைந்தது 03 ஆண்டுகளாயினும் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிரந்தரமாக வசித்திருத்தல் வேண்டும்.

இ. சிறந்த தேகாரோக்கியமும் நன்னடத்தையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

ஈ. விண்ணப்ப முடிவு திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையில்/மாகாண அரச சேவையில் இருப்பவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல).

**குறிப்பு:**

வடக்கு - கிழக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாக அல்லது நிரந்தர வதிவிடமாகக் கொண்டிருந்த போதிலும் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்து வேறு மாகாணங்களிலே தற்காலிகமாக வதிவோரும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம். எனினும் அவர்கள் தமது தற்போதைய, தற்காலிக வதிவிடத்தை நிரந்தர வதிவிடமெனக் காண்பித்து வேறு பதவிகளுக்கு விண்ணப்பித்திருத்தல் கூடாது. அவ்வாறெனில் அதனை அத்தாட்சிப்படுத்தும் ஆவணமும், இடம்பெயர்ந்து தற்காலிகமாக வசிப்பதை உறுதிப்படுத்தும் ஆவணமும் நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பித்தல் வேண்டும்.

**உ. கல்வித்தகைமைகள்:**

விண்ணப்பதாரி கீழே குறிப்பிடப்பட்ட தகைமைகளில் ஏதாவது ஒன்றினை கொண்டிருத்தல் வேண்டும்.

(i) மொறட்டுவ பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹாடி தொழில்நுட்பவியல் நிறுவனத்தினால் வழங்கப்படும். தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா சான்றிதழ்.

(ii) குண்டசாலை, அங்குன கொல பெலச, பெல்வெகாற, வவுனியா, கரப்பிஞ்ச, வவதுவ, அநுராதபுர, விபிலை, வாரிய பொல ஆகிய விவசாய கல்லூரிகளில் ஒன்றினால் வழங்கப்பட்ட இரண்டு வருட விவசாய டிப்ளோமா சான்றிதழ்.

(iii) உயர் கல்வி அமைச்சின் கீழ் உள்ள தொழில்நுட்பக் கல்லூரியினால் வழங்கப்பட்ட தேசிய டிப்ளோமா விவசாயச் சான்றிதழ்.

(iv) மேற்கூறிய தொழில்நுட்ப தகைமைகளுக்கு சமமானது என வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் சான்றிதழ்.

**குறிப்பு:**

விண்ணப்ப முடிவு திகதிக்கு முன் மேற்குறிப்பிட்ட பரீட்சைகளின் பெறுபேறுகள் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டிருத்தல் வேண்டும். பெறுபேறுகளை எதிர்பார்த்து அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**05. ஆள்சேர்ப்புமுறை:**

அங்கீகரிக்கப்பட்ட ஆள்சேர்ப்புத்திட்டம், அரச சுற்று நிருபங்களுக்கு அமைவாக எழுத்துப்பரீட்சை பெறுபேற்றின் திறமை அடிப்படையில் விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு, அவர்களிடம் இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் பரிசீலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையெனத் தெரியவந்தால் இப்பதவிக்கான உரிமைகள் ரத்துச் செய்யப்படும். (எழுத்து பரீட்சை நடத்துவது கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கையை பொறுத்தே தீர்மானிக்கப்படும். (எழுத்துப் பரீட்சையில் சித்தி பெறுவதற்கு ஒவ்வொரு பாடங்களிலும் 35% புள்ளிகளையோ அதற்கு மேலான புள்ளிகளையோ பெற்றிருத்தல் வேண்டும்.)

**06. எழுத்துப் பரீட்சை:**

இப்பரீட்சை தமிழ், சிங்களம் ஆகிய மொழி மூலங்களில் நடத்தப்படும். இப்பரீட்சை இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டதாக இருக்கும். இப்பரீட்சைக்குரிய பாடத்திட்டம் பின்வருமாறு:-

பொது உளச்சார்பு நேரம் - 1 மணித்தியாலம் 100 புள்ளிகள்

சொற்றொடர்கள் எண்கள் பற்றி உருவ வடிவங்களில் கொடுக்கப்படுகின்ற சிக்கலான விடயத்தில் பரீட்சார்த்திகள் காட்டுகின்ற அனுமானங்கள் மற்றும் பதில்களை ஆதாரமாகக் கொண்டு அப்பிரச்சினைகள் தொடர்பான கருத்துக்கிரகிப்பு, அளவீட்டுணர்தல் மற்றும் கால அவகாசங்களுக்கிடையில் தொடர்புடைய புரிந்து கொள்வதில் பரீட்சார்த்திகளுக்கு இருக்கின்ற திறமையை அளவிடுதல்.

பொது அறிவு நேரம் - 1 மணித்தியாலம் 100 புள்ளிகள்

இவ்வினாத்தாளில் காணியும் விவசாயமும் சம்பந்தமான அறிவை பரீட்சிக்கும் வினாக்களும் ஒரு பகுதியாக அமையும்.

**07. பரீட்சைக் கட்டணம்:**

விண்ணப்பதாரி வதியும் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகம் ஒன்றில் ரூபா 200/- ஐச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினை பெற்று அதனை விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டில் ஒட்டி அனுப்புதல் வேண்டும். இப்பணம் வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் 6004 ஆம் இலக்க வைப்புக் கணக்கின் வரவில் சேரக்கூடியதாக பிரதேச செயலகத்தினால் கணக்கு வைக்கப்படல் வேண்டும். அத்தகைய பற்றுச்சீட்டு இன்றி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அத்துடன் எக்காரணம் கொண்டும் செலுத்திய பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது என்பதையும் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக வேறு மாகாணங்களுக்கு தற்காலிகமாக இடம்பெயர்ந்து உள்ளவர்கள் மட்டும் பரீட்சைக் கட்டணமான ரூபா 200/- ஐச் செயலாளர் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு - கிழக்கு மாகாணம், திருகோணமலை என்ற பெயருக்குக் காசுக் கட்டளையாகப் பெற்று விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

**05. விண்ணப்பிக்கும்முறை:**

இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவங்களுக்கு அமைவாக 'A4' அளவிலான (21செ.மீX29செ.மீ) தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பப் படிவங்களைத் தயாரித்தல் வேண்டும். விண்ணப்பதாரி விண்ணப்பப்படிவத்தில் கேட்கும் விபரங்களை சரியான முறையில் நிரப்பாவிடினும் அத்துடன் விண்ணப்பப்படிவம் முழுமையாக பூர்த்திசெய்யாவிடினும் அவருடைய விண்ணப்பம் எவ்வித மேன்முறையீட்டுக்கும் இடமளிக்காமல் முழுமையாகவே நிராகரிக்கப்படும். பூர்த்திசெய்த விண்ணப்பப் படிவங்கள் 2003.04.11ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, இல. 35, மக்கெய்சர் வீதி, உவர்மலை, திருகோணமலை என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கும் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "வடக்கு - கிழக்கு மாகாண பொதுச்சேவைக்கு இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் குடியேற்ற உத்தியோகத்தர் வகுப்பு II 'ஆ' பிரிவுக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2003" என்று பரீட்சையின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும். எவரேனும் விண்ணப்பதாரி ஒருவருக்கு தமது அனுமதி அட்டை எழுத்துப் பரீட்சைக்குக் குறைந்தபட்சம் ஏழுநாள்களுக்கு முன்னராவது கிடைக்காவிடின், அதனைப் பற்றி உடனடியாக மேலே தரப்பட்ட முகவரிக்கு அறிவித்தல் வேண்டும்.

**09. பரீட்சை நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட பிரதான பரீட்சை நகரங்களும் அவற்றின் எண்களும் பின்வருமாறு:-**

| நகரம் | எண் | நகரம் | எண் |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் - | 1 | திருகோணமலை - | 6 |
| மன்னார் - | 2 | மட்டக்களப்பு - | 7 |
| வவுனியா - | 3 | அம்பாறை - | 8 |
| கிளிநொச்சி - | 4 | கல்முனை - | 9 |
| முல்லைத்தீவு - | 5 | | |

ஒரு பரீட்சை நகரம் சார்பாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறையுமிடத்து இப்பரீட்சை அண்மையிலுள்ள பரீட்சை நகரத்திலமைந்துள்ள பரீட்சை நிலையத்துக்கு மாற்றப்படலாம்.

இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத அல்லது விளக்கமற்ற விடயங்கள் தொடர்பாக வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவினாலேயே இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

மாகாண பொதுச்சேவை
ஆணைக்குழு,
வடக்கு - கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.

வே.பொ.பாலசிங்கம்
செயலாளர்.

(VI ஆம் பக்கம் பார்க்க)

# மாதிரி விண்ணப்பப் படிவம்

## வடக்கு - கிழக்கு மாகாண பொதுச்சேவைக்கு இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் குடியேற்ற உத்தியோகத்தர் வகுப்பு II 'ஆ' பிரிவுக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கான

# திறந்த போட்டிப் பரீட்சை - 2003

சுட்டெண்: ______

(அலுவலக உபயோகத்திற்கு)

01. முதலெழுத்துக்களுடன் விண்ணப்பதாரியின் பெயர்: திரு/திருமதி/செல்வி:-
தமிழில்:-
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்):-

02. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள்:-
தமிழில்:-
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்):-

03. தபால் முகவரி:-
தமிழில்:-
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்):-

04. பால்:-

| ஆண் M | | பெண் F | |
|---|---|---|---|

05. பிறந்த திகதி:
2003.04.11ஆம் திகதியன்று வயது

| வருடம்: | மாதம்: | திகதி: |
|---|---|---|
| வருடங்கள்: | மாதங்கள்: | நாள்கள்: |

06. பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம்: தமிழ் T /சிங்களம் S ☐

07. தெரிவுசெய்யும் பரீட்சை நகர எண்: ☐
(09 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்ட பரீட்சை நகர இலக்கத்தைக் குறிப்பிடுக.)

08. இனம்: சிங்களவர் ☐ இலங்கைத்தமிழர் ☐ இந்தியத்தமிழர் ☐ முஸ்லிம் ☐ ஏனையவர் ☐

09. நீங்கள் இலங்கைப் பிரஜையா? ஆம்/இல்லை. ☐

10. (1) நீங்கள் நிரந்தரமாக வதியும் மாவட்டம்:-
(2) பிரதேச செயலாளர் பிரிவு:-
(3) வதியும் கால எல்லை: தொடக்கம் வரை
(4) வடக்கு - கிழக்கு மாகாணத்திலிருந்து தற்காலிகமாக இடம்பெயர்ந்து இருப்பின், தங்கள் நிரந்தர வதிவு மாவட்டம்:-
(5) தற்காலிகமாக இடம்பெயர்ந்து வதியும் மாவட்டம்: மாகாணம்:
இடம்பெயர்ந்த ஆண்டு: மாதம்: திகதி:

11. கல்வித் தகைமைகள்: -
(1) பெற்றுள்ள டிப்ளோமாவின் / பின்பற்றிய பாடநெறியின் பெயர்:-
(2) ஏற்புடைய டிப்ளோமா / சான்றிதழ் வழங்கிய நிறுவனத்தின் பெயர்:-
(3) ஏற்புடைய டிப்ளோமா / சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி:-

12. பணம் செலுத்திய பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கு ஒட்டவும்.

இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விவரங்கள் யாவும் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானவையென்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட ........................................ பிரதேச செயலகத்தின் ..................ஆம் இலக்க .................. ஆம் திகதிய பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளது என்றும் இப்பரீட்சை விதிகளுக்கு அமைந்தொழுகி நடப்பதற்கும் சம்மதிக்கிறேன் என்றும் மேலும் இப்பரீட்சை நிபந்தனைகளின்படி நான் தகுதியற்றவரெனக் கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சையின் முன்னரோ, பரீட்சையின்போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எனது பரீட்சார்த்த தன்மையை இரத்துச் செய்வதற்கு எடுக்கும் முடிவுகளை ஏற்றுக்கொள்வதற்கும் எனது இணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திகதி......................

விண்ணப்பதாரியின் கையொப்பம்:..............................................................

13. விண்ணப்பப் பத்திரத்திலுள்ள பரீட்சார்த்தியின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலை அதிபர், சமாதான நீதிவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, படை தாங்கு சேவையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது வருடாந்த திரட்டிய வேதனமாக ரூபா 74,160 இற்கு மேற்பட்ட சம்பளத்தையுடைய அரச சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஆகிய ஒருவரால் சான்றுப்படுத்தப்பட வேண்டும்.

விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்:

விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு/திருமதி/செல்வி............................ என்பவர் எனக்கு நன்கு தெரிந்தவர் எனவும்.....................ஆம் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி......................

..............................................................

கையொப்பத்தை உறுதிப்படுத்துகின்ற உத்தியோகத்தரின் முழுப்பெயர்:

கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்:

பதவி:
முகவரி:
(பதவி முத்திரை)

(வடக்கு - கிழக்கு மாகாணத்திலிருந்து தற்காலிகமாக வேறு மாகாணத்துக்கு இடம்பெயர்ந்துள்ளவர்களுக்கு)

14. மேற்படி விண்ணப்பதாரி வடக்கு - கிழக்கு மாகாணத்தை நிரந்தர பிறப்பிடமாக/வதிவிடமாக கொண்டவர் என்பதையும், அவர்.....................திகதி முதல் தற்காலிகமாக இடம்பெயர்ந்து..................................மாகாணத்தில் வசித்து வருகின்றார் என்பதையும் இத்தற்காலிக வதிவிடத்தை ஆதாரமாக வைத்து இம்மாகாண சபையில் எப்பதவிக்கும் விண்ணப்பிக்கவில்லை என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி.........................

..............................................................

பிரதேச செயலாளர்/கிராமசேவையாளர் கையொப்பம்:

பதவி:
முகவரி:
(பதவி முத்திரை)

15. திணைக்களத் தலைவரின் உறுதியுரை:
இத்திணைக்களத்தில் நிரந்த உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திரு/திருமதி/செல்வி........................................அவர்களின் விண்ணப்பத்தை சிபார்சு செய்து சமர்ப்பிக்கின்றேன். அவர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படுமிடத்து அவரை விடுவிக்க முடியும் என்பதையும் இவர் தனது சேவைக்காலத்தில் எவ்வித ஒழுங்காற்று நடைமுறைக்கும் உட்படவில்லை என்றும் சகல வேதன ஏற்றங்களையும் பெற்றுள்ளார் என்பதையும் இங்கு அவரால் குறிப்பிடப்பட்ட விடயங்கள் யாவும் சரியானவை என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி..........................

..............................................................

திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பெயரும்:

பதவி:
முகவரி:
(பதவி முத்திரை)

(சி-26911)